Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර්

மே 26 - ஜூன் 01, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU S... WEEKLY முரசு 615



## சிறுவர் விடயத்தில் அம்பலமாகும் புலிகள்

## கிழக்குப் படுகொலைகள் கிளப்பும் சந்தேகங்கள்

## இளவரசர் இசையமைப்பாளராகிறார்

## படப்பிடிப்பில் சினேகாவின் கலாட்டா!!


## அமெரிக்காவில் குறிவைக்கப்படும் கர்ப்பிணிகள்!

## உயிர்பெறும் எலும்புக் கூடு!

- நள்ளிரவு மல்லிகை

## ஆன்மீகம்

### மதங்கள் எல்லாம் கூறும் மகத்தான உண்மை



மனித வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுவது பணம். இதனைத் தேடுவதில் நேர்மை இருக்கவேண்டும். குறுக்கு வழியில் தேடும் பணம் என்றோ ஒரு நாள் நம்மை படுகுழியில் விழுத்திவிடும். இன்றைய காலகட்டத்தில் நாம் நமது கண்களால் காண்பதும், காதுகளால் கேட்பதும் எத்தனையோ விதமான படுபாதகமான நடைமுறைகளையும் பண்பற்ற செயல்களையும் தான்.

இருப்பினும் விரல் விட்டு எண்ணக்கூடியபடி ஆன்மீக வழியில் வாழும் ஒழுக்கமாக உழைத்து அன்போடு அறம்பிசகாது வாழும் மனிதர்களையும் காணாமல் இல்லை.

விலைபேசும் கொலைகளும், உயிரோடு விளையாடும் கடத்தல்களும், பணத்திற்காக எதனையும் பட்டெனச் செய்யும் துரோகங்களும் கட்டவிழ்த்துவிடப்படுவதும் இவற்றையெல்லாம் கண்டும் காணாமலிருப்பதும், கட்டுப்படுத்த முடியாத சூழலுந்தான் இன்று பரவலாகக் காணப்படுகிறது.

இறைவனிருப்பதை உணராத கறைபடிந்த உள்ளங்கொண்ட மிருக மனிதர்களின் வினைப்பயன் நிச்சயம் தினையை அறுக்க முடியாது. அந்திமக்காலம் அறுவடைசெய்யும்போது அவரவர் செய்த புண்ணி, பாவம் தெரியவே வரும். இது மதங்கள் கூறும் உண்மையாகும்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

### இறை அன்பில் நிலைப்போம்

அன்பின் இறைவா! இவ்வுலகைப் படைத்து, மனிதனையும் படைத்து அவனை வாழ்வதற்கு வழிகாட்டினீரே. ஆனால் மனிதனோ பாவம் எனும் தீய செயலை செய்து அனைவரையும் வேதனைப்படுத்துகிறான். இந்த நிலை மாறி அனைவரும் சந்தோஷமாக வாழ, பாவத்தை விட்டு உமக்கு பிரமாணிக்கமுடன் வாழ்வானானால் என்றும் அவன் இறைவனுக்கு உகந்தவனாகிறான். உலகில் இருக்கும் அனைவரையும் ஆசீர்வதித்து, அவர்கள் நல்வாழ்வு வாழ நல்லாசிகள் பொழிந்தருளும். எங்கும் எதிலும் அவலமும் உயிர்கள் கொலை செய்யப்படுவதுமான இப்பூமியில், அனைவரும் மனந்திருந்தி ஆண்டவரின் அன்பின் இரட்சிப்பில் வாழ பாவத்தை விட்டு என்றும் செபிப்போமாக!

-எஸ்.அருள், கொழும்பு.

### அல்லாஹ்வின் மறை அல்குர்ஆன்

குர் ஆனுக்கு நிகரானது இவ்வுலகில் எதுவுமில்லை. ஐயப்பாடின்றி அது அனைத்து மக்களுக்கும் சிறப்பான உயர்வான நூலாக இருக்கிறது. இதில் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை.

அதன் அழகு நடையும், ஆழிய கருத்துக்களும், உன்னத போதனைகளும், ஒழுக்க நெறியும், நேர்மையான மனதோடு அதனை ஆராய்பவர்களுக்கு ஒப்புவமை இல்லாதனவாகவே அமைந்துள்ளன.

அல்லாஹ்வின் மறை அல்குர்ஆன் கூறுகிறது. விழிப்புள்ள இதயமும், இதயத்தின் நல்லுணர்வும் கொண்டு இவ் வேதத்துக்குச் செவி சாய்ப்பவனுக்கு நிச்சயமாக இதில் பயனுள்ள படிப்பினை இருக்கிறது என்று.

அல்குர் ஆன் 50:37

ஆகவே மனிதர்களே! வெற்றிப் பெருவாழ்வு வாழ விரும்பும் மனிதன் வேதத் திருமறையின் போதனைகளை நாளும் நாம் நடைமுறையில் கொண்டு வரவேண்டும்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.612



பரிசுக்குரிய கவிதை

### புதுப்பழக்கம்

ஓ... கடலே!
உன்னால் நாம்
கரைசேரப் பார்த்தோம்.
இப்போது நீயேன்
கரைசேர்கிறாய்?
மனிதனிடம் கற்றாயோ...
காரணமின்றிக்
காரியம் புரிய....?

யூ.எம்.முனீர்,
நிககொள்ள.

### கடல் அலைகள்

அரசியல் அலைகள் எங்கள்
உயிரை
என்றோ எடுத்துவிட்டன -
எஞ்சியிருக்கும்
எம் உடலைக் கொண்டு
செல்ல
பொங்கி எழுகின்றன கடல்
அலைகள்.

சோ. சிவக்குமார்,
உடப்பு.

### மீண்டும்....

"தலையில் சுமையுடன்
மனதில் பதற்றத்துடன்
விரைகிறது சனக்கூட்டம்
மீண்டும் இங்கு
சுனாமியின் அராஜகம்
உதயமானதோ....?

நஸீஹா சம்சபாத்,
ஏத்தாலை.

### அடிமேல் அடி

ஒரு பக்கம் யுத்தம்
துரத்துகின்றது
மறு பக்கம் கடல்
விரட்டுகின்றது.
இவை இரண்டிற்கும்
இடையே
மாட்டிக் கொண்ட
மக்கள் நிலை
மத்தளத்தின் கதைதான்.

கமால்தீன்–அல்–ஆஸாத்,
ஏறாவூர் – 03.

### சிதறல்

பூமியை
முத்தமிட்டு
மூச்சுத் திணறிய மனிதா!
சுனாமிக் கஞ்சிய
ஓட்டமா
இது???


நி. சிபாரா, கண்டி.

### வதந்தி

வந்து போன
சுனாமி,
தந்து போன
கொடூரங்கள்
எந்தக் காலத்துக்கும்
இந்த மக்களுக்கு
மறக்க முடியாததால்
பந்த பாசம் விட்டு
பரபரப்பாக ஓடுகிறார்கள்
பறந்து வந்த
வதந்தி கேட்டு!

நா. ஜெயபாலன்,
பிபிலை.

## கவிதைப் போட்டி இல.615



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 01.06.2005.

கவிதைப் போட்டி இல.615
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### இறைவனின் நியதி

ஆழிப் பேரலைக்கா
அனைவரும் ஓடுகின்றீர்கள்?
எங்கு இருந்தாலும்
இறப்பு நிச்சயம்.
இவை ஒரு வினாடியேனும்
முற்படுத்தப் படுவதுமில்லை;
பிற்படுத்தப் படுவதுமில்லை.
இறைவனின் நியதியிது.

எம்.சீ.கலீல், கல்முனை – 05.

### முடிவில்லா ஓட்டம்

அலை துரத்த - இயக்க
ரவை துரத்த - உயர்
விலை துரத்த - ஓடுகின்றோம்.
என்றும் முடியாது
எம்முடைய இவ்வோட்டம்.

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### உயிரோசை

வேட்டோசை தந்த
வேதனைகள் தீர்வதற்குள்
அலையோசை இந்த
ஆக்கினைகள் செய்வதனால்
உயிரோசை இங்கு
ஊமையாய் அழுகிறதே!

ரி. சிஹ்னாஸ், புத்தளம்.

### துரத்தும் இயமன்

துரத்துவது சுனாமி அலையோ!
அதனிலும் கொடிய துப்பாக்கி
ரவையோ!!
எதுவாயினும் உயிர் தப்பினால் போதும்
என ஓட்டமெடுக்கும் மானிடப்
படையோ!!!

ரி. சுகன், செங்கலடி – (கி.மா.)

### அகதி வாழ்க்கை!

இனப்
பிரச்சினையால்
ஏற்பட்ட
அகதி
வாழ்க்கையோ
இன்னும் முடிந்த
பாடில்லை!
அதற்குள்
சுனாமியாலும்
வந்துவிட்டது
இன்னுமொரு
அகதி வாழ்க்கை!

ஜெயராசா தர்சினி,
திருகோணமலை.

## உங்கள் பக்கம்

### இனங்களுக்கிடையே சமரசம் பேணப்படுவது அவசியம்

திருகோணமலையில் தொடரும் பதற்றமும், ஹர்த்தாலும் அமைதியைக் குழப்பும் விதமாகவே உள்ளது. திருகோணமலை வாழ் மக்கள் பேரவை என்றும், 'மக்கள் ஒன்றியம் என்றும் சில அமைப்புகளின் பெயரால் மக்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்படுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். நாட்டின் எப்பகுதியை விடவும் திருகோணமலை மாவட்டம் வித்தியாசமான சமூக அமைப்பு முறையைக் கொண்டதாகும். தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என மூவின மக்கள் ஒரு கலவையாகவே வாழ்ந்து வரும் சூழலில், சமூகங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தி அரசியல் லாபம் தேட முற்படுபவர்களே இக் குழப்பத்திற்கும், பதற்றத்திற்கும் காரணமாவர்.

அண்மைக்காலமாக மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் விதமாகவும், உழைப்பாளர்களை ஹர்த்தாலின் பேரில் வேலை பகிஷ்கரிப்பைச் செய்வதும், முடிந்தால் ஒட்டு மொத்தமாக மாவட்டத்தையே ஸ்தம்பிக்கச் செய்வது என்று தொடர்ந்தும் ஏதாவது அர்த்தமற்ற போராட்டத்தை நடத்துவதால் 'பிரபல எழுத்தாளர் சிவராம் கடைசியாகக் குறிப்பிட்டது போல்' மக்கள் எழுச்சி அல்லது உணர்ச்சிகளுக்கு எடுபடாமல் வாழ்வின் மீது நம்பிக்கை இழந்தவர்களாக உள்ளனர். இதன் தொடர்ச்சியாக இப்போது புத்தர் சிலை விவகாரத்தைப் பெரிது படுத்தி தொடரும் ஹர்த்தாலினால் மாணவர்களின் கல்வி, அன்றாட உழைப்பாளர்களின் உழைப்புப் பாதிக்கப்படுவதோடு, பதற்றமும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. மேற்படி புத்தர் சிலை விவகாரத்தில் தற்சமயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே சில வேளைகளில் நடக்கும் சம்பவங்களுக்கும், இறுதியில் சட்டத்தின் மூலம் தீர்வு காணப்படமுடியும் என்று தெரிந்தும் வெறுமனே பரபரப்புக்காட்டி நடத்தப்படும் போராட்டங்களை மக்கள் நிராகரிக்க வேண்டும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் யுத்த ஓய்வா, யுத்த காலமா? தீர்மானம் உங்களிடமே.

திருமலை தாமரைமகன்


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):–4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


## வாசக[ர்] சாலை




### அன்பான முரசுக்கு

ஆயிரம் வந்தனங்கள்.
கடந்த வார முரசில் இடம்பெற்ற
சிறப்புத் தகவல் பெட்டி
உண்மையிலேயே சிறப்பானது.
மனிதருள் புனிதரான மறைந்த
மாட்சிமை பொருந்திய பாப்பரசரின்
விசேட சந்திப்புக்களைப் படம் போட்டுக்
காட்டி, எமது மனங்களிலும் மன்னிப்பின்
மகத்துவத்தையும், உயர்விலும்
தாழ்மையை உணர வைத்த உன் புகழ்
உலகெங்கும் உயர உளமார்ந்த
வாழ்த்துக்களுடன், மறு மலரை
ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்

கொழும்பு வாசகி வினோதா.

### முத்தான முரசுக்கு!

முரசு எனும் மாலையில்
கோர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு
முத்துக்களும் ஒவ்வொரு ரகம்.
எல்லாக் கட்டுரைகளும் ஒவ்வொரு
விதத்தில் நம்மை சிந்திக்கவும்
சிரிக்கவும் வைக்கின்றன. ஆனாலும்
இதில் சிற்சில குறைபாடுகள்
இருப்பினும், உன் உள்ளடக்கங்கள்
எம்மை நிறைவடையச் செய்கின்றன.
என்ன மந்திர ஜாலம்
பண்ணுகிறாயோ. பிழைகள் செய்த
போதும் அரவணைக்கவே மனம்
ஆவல் கொள்கிறது. வாழ்க நீ
என்றென்றும் வளமுடன்.

சுசிலா – யாழ்ப்பாணம்

### அன்பான முரசுக்கு!

வியாழன் வந்தாய்!
கண்ணைக் கவர்ந்தாய்
கருத்தை நிறைத்தாய், உள்ளம்
நுழைந்தாய். அத்தோடு விலை
அதிகரிப்பு என்ற சிறு
அதிர்ச்சியையும் தந்தாய். ஏன்
முரசே ஏழை வாசகர்களைப்
பாடாய் படுத்துகிறாய். என்ன
செய்ய உனக்கு நாங்கள்
இசைவாக்கம் அடைந்து
விட்டோம். எனவே எவ்வளவு
விலை அதிகரித்தாலும்,
வாங்கியே ஆகவேண்டும் என்று
உள்ளம் உவகை கொள்கிறது.
ஏனெனில் உன்னில் சுமந்து
வரும் ஆக்கங்கள் விலை
மதிப்பற்றவை. புதிதாக
ஆரம்பிக்கப்பட்டுள்ள நள்ளிரவு
மல்லிகை ஆரம்பமே
அசத்தலாக உள்ளது.
நிச்சயம் இவ்வாறான
தொடர்கள் உமக்கு மேலும்
வாசகர்களைத் தேடித் தரும்
என்ற நம்பிக்கை
பிறந்துள்ளது.
வெற்றிப்பாதையில் முன்னேறிச்
செல்ல எமது வாழ்த்துக்கள்.

அபிமான வாசகன்
ஆனந்தராஜா – சிலாபம்.

# திருமலைக்குத் தீ மூட்ட இருதரப்புத் தீயசக்திகளும் முயற்சி

## தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மக்கள் கோரிக்கை

மூவின மக்களும் பரந்தும் செறிந்தும் வாழும் திருகோணமலையில் சமயத்தின் பெயரால் சண்டாளத்தனங்களும் கடவுளர்களின் போர்வைக்குள் காடைத்தனங்களும் கட்டவிழ்த்து விடப்படுவதால் திருமலை மட்டுமல்ல, நாடே தீப்பற்றி எரியக் கூடிய ஆபத்து நிலவுகிறது. இதனைத் தடுத்து நிறுத்த அரசாங்கமும் பொறுப்புவாய்ந்த அரசியல், சமூக, சமயத் தலைவர்களும் முன்வர வேண்டுமென்று திருகோணமலை மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

போரின் அவலங்கள் குறித்தும் அஹிம்சையின் அவசியத் தேவை குறித்தும் அசோகச் சக்கரவர்த்திக்கு போதனை புரிந்து, மனதை மாற்றிய புத்த பிரானின் பேரால் பொது இடமொன்றில் இரவோடிரவாகத் தீய நோக்கோடு, தீயசக்திகளால் புத்தர் சிலை நிறுவப்பட்டமை கண்டனத்துக்குரியது. இது அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்று திருமலை நீதிமன்றமே உத்தரவிட்ட பின்னரும் இது அப்புறப்படுத்தப்படாமல் இருப்பது வேதனைக்குரியது. இதனைச் சர்ச்சையாக்கி இரு தரப்பு இனவாத சக்திகளும் ஆட்கொல்லிக் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தத்தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே கைக்குண்டு வீச்சு, வாள்வெட்டு போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபடுகின்றனர். இரு தரப்பினரும் ஹர்த்தாலென்றும் கடையடைப்பென்றும் கதையளக்கின்றனர். அப்பாவி மக்கள் தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்க முடியாமல் வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்க வேண்டியிருக்கிறது.

ஆட்டோச் சாரதிகள் சிலரும் காவியுடைகளுக்குள் பதுங்கியிருக்கும் முற்றும் துறக்காத துறவிகள் சிலரும் தீய நோக்கோடு நிறுவிய இந்தச் சிலை விவகாரம் மறுதரப்பிலிருக்கும் மாய் மால சக்திகளையும் தூண்டிவிட்டிருக்கிறது.

புத்தர் சிலைக்காக ஐம்பதாயிரம் பேரையும் பலிகொடுக்கத் தயாரென்று கூறுகின்ற துறவிகள், இனவாதத்தை இன்னமும் துறக்கவில்லையென்பது வேதனைக்குரியது. சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நீதிமன்ற உத்தரவை அனுசரித்துத் தற்காலிகமாகவேனும், இச் சிலை அப்புறப்படுத்தப்படுவதே நியாய மானது என்றும் மக்கள் கூறுகின்றனர்.

இலங்கை, சமய சகிப்புத்தன்மையும் சமய சௌஜன்யத்தையும் பேணிவரும் ஒரு நாடு பல் சமயச் சிந்தனைகளுக்கும் தத்துவங்களுக்கும் மதிப்பளிக்கும் சமூக அமைப்பைக் கொண்டது. ஒரு பிரேத ஊர்வலமே 1915ஆம் ஆண்டு இங்கு சிங்கள - முஸ்லிம் கலவரங்களுக்கு வித்திட்டது. இனப் பிரச்சினையால் சீரழிந்து போயிருக்கும் இந்த நாட்டில் சமயத்தின் பேரால் மற்றொரு அழிவுக்கு வித்திட முயற்சியெடுக்கப்படுகிறது. இது தடுக்கப்பட வேண்டுமென்று திருமலை மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பௌத்த மக்களின் உணர்வுகளை மதித்து வெசாக் காலத்தில் ஹர்த்தால் கைவிடப்பட்டமை பாராட்டுக்குரியது. இதேபோன்று அரசு பாதுகாப்புக்காக மேலும் 1,500 பந்தோபஸ்துப் படையினரை அனுப்பி வைத்திருப்பதும் பாராட்டுக்குரியது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு ஆஸி. அரசு நேரடியாக உதவுவதில்லை

**-வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர்**

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுனாமி நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குப் பயங்கரவாத இயக்கமெனத் தடை செய்யப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்துடன் தொடர்பிருப்பதாக நம்பிக்கையான ஆதாரங்கள் உள்ளன. எனவேதான் அவுஸ்திரேலிய அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நேரடியாக உதவிகள் செய்வதில்லையென்று அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் கடந்த பதினொராம் திகதி அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எதிர்க்கட்சியான தொழிற்கட்சி எம்.பி.யான ஜோன் மர்பி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கைத் தமிழ் மக்கள் பெருமளவு வாழும் நியூ சவுத் வேல்ஸ் தொகுதி எம்.பி.யே, வெளிவிவகார அமைச்சர் டவுனர் என்பது குறிப்பிடத் தக்கது. அவுஸ்திரேலியாவின் பயங்கரவாதப் பட்டியலில் புலிகள் இயக்கம் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் சொன்னார்.

## முகவரி தேடும் முன்னணி எழுத்தாளருக்குக் கௌரவம்

சோ.இராமேஸ்வரன் எழுதிய 'முகவரியைத் தேடுகிறார்கள்' எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டது. கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் எழுத்தாளர் இராமேஸ்வரன் இந்த நூலை அமைச்சரிடம் கையளித்தார். இதுவரை 31 நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இராமேஸ்வரனை ஊக்குவிக்கும் வகையில் அமைச்சரின் பணிப்புரையின் பேரில் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கொள்வனவு செய்துள்ளது.

## பேச்சுவார்த்தை குறித்த புலிகளின் கடப்பாட்டில் இந்தியா சந்தேகம்

புலிகள் இயக்கம் கொண்டிருக்கும் விமான படையணியும் அவர்கள் பெற்றிருக்கும் விமானங்களும் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அவர்கள் கொண்டிருக்கும் கடப்பாட்டினைப் பெரும் கேள்விக் குறியாக்கியுள்ளதென்று 'டைம்ஸ் ஒப் இந்தியா' என்ற பத்திரிகையின் அரசியல் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். "உலகிலுள்ள ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட வேறெந்தப் பயங்கரவாத இயக்கமும் தாமாகவே விமானங்களைப் பெற்றதில்லை. உலகிலுள்ள மிகச் சிறந்த ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட பயங்கரவாத அமைப்பாக அல்-குவெய்தாவை உலகம் கணித்துக் கொண்டிருக்கையில், விமான ஓடுபாதையொன்றினை நிர்மாணித்து, விமானங்களைப் பெற்றுப் பெரும் முன்னேற்றப் பாயச்சலைப் புலிகள் இயக்கம் ஏற்படுத்தியுள்ளது" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதிகள் வருமாறு :-

"இந்தப் புதிய வான் பறப்புத் திறன்களைப் பெற்றதன் மூலம் இப் பிராந்தியத்திலுள்ள பயங்கரவாதக் குழுக்கள் மத்தியில் முக்கிய இடமொன்றினைப் புலிகள் இயக்கம் பெற்றுள்ளது. அரச அதிகாரத் துக்கு இருக்கக்கூடிய இவ்வாறான வெளிப்படையான உபகரணங்கள் அல்-குவெய்தாவிடம் கூட இருப்பதாகத் தெரியவில்லை. 2004ஆம் ஆண்டு புலிகளின் விமானத்திறன் பற்றிய ஆதாரங்களை இந்தியா பெற்றுக் கொண்டபோது, அயல்நாட்டில் ஸ்திரமின்மை தொடர்வது குறித்து அக்கறை கொள்ளத் தொடங்கியது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு புலிகளின் கப்பல்கள் ஆயுதங்களையும் மற்றும் இராணுவ உபகரணங்களையும் கொண்டு வருவதாகவும் தகவல்கள் கிடைத்தன. 2003-2004ஆம் ஆண்டு கால ஸ்திரமற்ற யுத்த நிறுத்தத்தைத் தனது இராணுவத் திறன்களை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் வழமைபோல் புலிகள் பயன்படுத்தியுள்ளனரென்ற இந்தியாவின் பயத்தை இது ஊர்ஜிதம் செய்கிறது."

## ராஜீவ் காந்தி நினைவு தினம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகள் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுதாரியான தனுவினால் கொலை செய்யப்பட்டுப் பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன. 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத்தின் ஸ்ரீபெரம்புதூரில் அவர் கொலை செய்யப்பட்டார். இந்த நினைவு தினத்தையொட்டி இலங்கையிலுள்ள தமிழ் ஊடகங்களெதுவும் நினைவுக் கட்டுரைகளை வெளியிடாதது வேதனைக்குரியதென அரசியல் ஆய்வாளரான மணிவண்ணன் தெரிவித்தார். இலங்கை இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குக் கௌரவமான தீர்வு கிட்டவேண்டுமென்றும் விரும்பியவர் அவர். இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாகுவதற்கு உந்துசக்தியா கவும் திழ்ந்தவர் அவரென்றும் மணிவண்ணன் மேலும் கூறினார்.

## சேது சமுத்தித் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

கிட்டத்தட்ட 145 வருடங்கள் பழைமை வாய்ந்த சேது சமுத்திரத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி காட்டியுள்ள நிலையில் இது தொடர்பான சாதக பாதக அம்சங்கள் பற்றி விரைவில் இரு நாடுகளுக்குமிடையிலான சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளுக்கிடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவிருக்கிறது. இரு தரப்பிலும் கப்பல்துறை, கடல் வள மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான அதிகாரிகள் கலந்துரையாட விருக்கின்றனர்

## இந்துக் குருமார் ஒன்றியத்துக்கு உதவி

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்துக்கு முதற் கட்ட நிதியுதவியாக மூன்று இலட்ச ரூபாவை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கையளித்தார். அத்துடன் ஒரு லொறி நிறைய உலர் உணவுப் பொருட்களும் கையளிக்கப்பட்டன. ஏற்கனவே கடந்த இருபதாம் திகதி அமைச்சரை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்த ஒன்றியப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்துக் குருமார்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் சமாதான நீதிவான் பட்டங்கள் ஆகியவற்றை விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

## அம்பாறை, யாழ்ப்பாணத்தில் இடைத்தங்கல் வசதிகள் நன்று


**-பவ்ரல் அறிக்கை**

சுனாமி நிவாரண மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைப் பொறுத்தவரை மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அம்பாந்தோட்டை, மாத்தறை, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடைத்தங்கல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஏனைய பாதிக்கப்பட்ட மாவட்டங்களை விடப் பெரு முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக சுதந்திரமான, நீதியான தேர்தலுக்கான மக்கள் செயலணி (பவ்ரல்) வெளியிட்ட இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாத செயற்பாடுகள் குறித்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்வேறு மாவட்டங்களில் நடத்திய ஆய்வுகளின் பெறுபேறுகளை வைத்தே இந்த மூன்றாவது இடைக்கால அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. வடக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம், நிதி மோசடி, நிவாரண மோசடி குறித்துக் குறிப்பிடத்தக்களவு குற்றச்சாட்டுகள் இல்லையென்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல், வாழ்வாதாரங்களை வழங்குதல் போன்ற விடயங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பு இல்லை யென்றும் அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## பொதுக்கட்டமைப்பு பற்றி இவ்வாரம் முக்கிய முடிவு?

வடக்கு, கிழக்கில் சுனாமி கடற்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மண்ணுக்கும் நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள் வதற்காக அமைக்கப்படவிருக்குத் உத்தேச பொதுக்கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதி இவ்வாரம் இறுதியில் முக்கிய தீர்வுகளை அறிவிப்பாரென்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாரம் இந்திய தலைவர்களுடன் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நாடு திரும்பிய பின்னர் அரசின் முக்கிய பங்காளிக் கட்சிகளோடு பேச்சுக்களை நடத்திய பின்னர் தமது முடிவுகளை வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் இந்து சேவா சங்கம், வாழும் கலைப் பயிற்சி நிறுவனம் ஆகியவை நாட்டின் பல பகுதிகளில் ஆன்மீக எழுச்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றன. யாழ்ப்பாணம், சாவகச்சேரி, திருகோணமலை, அக்கரைப்பற்று, இரத்தினபுரி, நுவரெலியா உட்படப் பல இடங்களில் இப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இப் பட்டறைகளில் உச்சாடனம், தியானம், யோகாசனம், பஜனை என்பவற்றுடன் இந்துசமய தத்துவங்களும் போதிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்தவாரம் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறை யில் இளைஞர், யுவதிகள் யோகாசனத்தில் ஈடுபட்டிருந்தபோது பிடிக்கப்பட்ட படம்.



## ரி.பி.சி.ராமராஜுக்கு மீண்டும் கொலை மிரட்டல்கள்

லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ரி.பி.சி. (தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) வானொலியின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் ராமராஜுக்கும் அவரது நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கும் தொடர்ச்சியாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் எனவே பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கும்படியும் ஹரோ பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் ராமராஜ் கோரியுள்ளார்.

ஜெயதேவன் என்ற பிரிட்டிஷ் பிரஜை, வன்னியில் புலிகளால் சிறைவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு அவரது சொத்துக்கள் கபடத்தனமாக அபகரிக்கப்பட்ட விடயத்தை ரி.பி.சி. வானொலி அம்பலப்படுத்தியதையடுத்து அவர் விடுவிக்கப்பட்டார். தனக்கு நேர்ந்த அவலங்கள் குறித்து ஜெயதேவன் ரி.பி.சி. வானொலி மூலம் அம்பலப்படுத்தியதையடுத்து தனக்கு தொலைபேசி மூலமான கொலை மிரட்டல்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் குரோங்லி என்ற இடத்திலிருந்து தன்னை சுரேஷ் என்று இனங்காட்டிக் கொண்ட ஒருவர் ரி.பி.சி. வானொலி ஒலிபரப்பை நிறுத்துமாறும் இல்லையேல் சுட்டுக் கொன்றுவிடுவேனென்று கடந்த இரண்டாம் திகதி மிரட்டினாரென்றும் அதே நபர் தன்னை ராஜனென்று கூறிக்கொண்டு மீண்டும் அன்றைய தினம் மேலும் இரு தடவைகள் மிரட்டினாரென்றும், ராமராஜ் தன் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இப்படி சுரேஷ் என்றும் ராஜன் என்றும் கூறிக்கொண்டு மிரட்டியவர் 0794 750 5756 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து பேசினாரென்றும் நிகழ்ச்சிப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனில் தடைசெய்யப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்தின் சார்பில் பேசுவதாகக் கூறிக்கொண்டு இவ்வாறு பல அநாமதேய தொலைபேசி மிரட்டல்கள் தனக்கு வந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கும் ராமராஜ், தமது வானொலியில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

## யாழ். புதிய சிறைச்சாலை இரு வாரங்களில் நிர்மாண வேலை

யாழ்ப்பாணம், பண்ணைப் பகுதியில் புதிய சிறைச்சாலையை அமைக்கும் பணிகள் இரு வாரங்களில் ஆரம்பிக்கப்படுமென்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ரூமி மர்சூக் தெரிவித்தார். ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் புதிய சிறைச்சாலையை அமைப்பதற்கென பண்ணையில் இரண்டு ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது. பின்னர் சிறைச்சாலையை மண்டைதீவில் அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. மண்டைதீவு கடலால் சூழப்பட்டிருப்பதால் கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிப்புகள் ஏற்படலாமென்ற அச்சம் காரணமாக மீண்டும் பண்ணையிலேயே சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது.

## பிடில் வாசிக்கும் நீரோ மன்னர்கள்

திருமலை சம்பவத்தைப் பூதாகரமாக எடுத்துக் காட்டி இரு தரப்பினரையும் உசுப்பி விடும் முயற்சிகளில் அரச சார்பு ஊடகங்களைத் தவிர ஏனைய அனைத்து ஊடகங்களும் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலான சிங்களப் பத்திரிகைகள் சிங்களப் பேரினவாதிகளை உசுப்பிவிடும் வகையிலும் தமிழ்ப் பத்திரிகைகள் தமிழர் தரப்பைத் தூண்டிவிடும் வகையிலும் பக்கச் சார்பாகச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ரோம் நகரம் பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதைதான் எங்கள் பத்திரிகைகளின் வேலையும் ஆங்கிலப் பத்திரிகைகளும் கூட இதே பாணியில்தான் செயல்படுகின்றன என்கிறார் பத்திரிகையாளர் அஹமத்டீன்

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## சாத்தியமான வழியில் பிரச்சினைகளை அணுகுங்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

திருகோணமலையில் பஸ் தரிப்பிடத்தில் புதிதாக புத்தர் சிலை ஒன்றை நிறுவியது தொடர்பான விவகாரம், தொடர் ஹர்த்தாலுக்கும், தொடர்ச்சியான வன்முறைக்கும் வித்திட்டுள்ளது. ஹர்த்தாலின் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விடவும், திருகோணமலை மாவட்டமானது தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவினங்களும் மிக நெருக்கமாக வாழ்கின்ற மாவட்டம் என்ற வகையில் இவ்வாறான பிரச்சினைகள், இனங்களுக்கிடையேயான முறுகலையே தோற்றுவிக்கும். எனவே இப்பிரச்சினையை உருவாக்கியவர்களும், எதிர்க்கிறவர்களும் தீர்வுகளுக்காக அணுகுகின்ற விதத்தில் மிகவும் அவதானமாகவும், பொறுப்போடும் நடந்துகொள்வது அவசியமாகும்.

புத்தர் சிலை அமைக்கப்பட்டதிலிருந்து நான்கு நாட்களாக நடந்த ஹர்த்தால்களைத் தொடர்ந்து, 21-05-05 அன்று இடம்பெற்ற உயர்மட்ட சந்திப்புக்கள் எவ்வித இணக்கப்பாடுகளையும் எட்டாமை பெரும் ஏமாற்றமே. இதைத் தொடர்ந்து பௌத்த பிக்குகள் தெரிவித்து வரும் கருத்துக்கள் பொறுப்பற்றதாகும். ஐம்பதினாயிரம் பேரைப் பலிகொடுத்தாலும், நாட்டில் இரத்த ஆறு ஓடினாலும் மேற்படி புத்தர் சிலையை அகற்ற முடியாது என்ற கருத்துக்களானது, எரிந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சினையை, ஆரம்பித்த புள்ளியிலேயே மீண்டும் கொண்டு போய் நிறுத்துவதாக உள்ளது.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை அத்துமீறிய குடியிருப்புகள், கிராம அபகரிப்புகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பனவே போராட்டத்தில் குதிக்கக் காரணமாய் அமைந்தன. இன்றைக்கு இருவேறு திசையாக தமிழர் சக்தி பிரிந்து கிடந்தாலும் இலக்கு ஒன்றேயாகும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வது நன்மை பயக்கும். புலிகள் போர், ஹர்த்தால் என்றும், ஈ.பி.டி.பி. போன்ற மாற்றுச் சக்திகள் பேச்சுவார்த்தை, அரசியல் இணக்கப்பாடுகள் என்றும் இருவேறு வழிகளில் நடத்தும் போராட்டமாக இருந்தாலும், தமிழர் பிரதேசத்தைப் பாதுகாப்பதும், தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வைக் காண்பதுமே இலக்காகும். இதில் புலிகளின் அணுகுமுறையானது வன்முறைக்கும் பதற்றத்திற்கும் இட்டுச் செல்வதால் சில வேளைகளில் சுமுக நிலையும், மக்களின் நிம்மதியும் கேள்விக்குள்ளாகின்றன. ஆகவே பெரும்பான்மைச் சமூகத்தை தமிழரின் நியாயமானதும், உணர்ச்சிமிக்கதுமான கோரிக்கைகளை நிதானத்தோடு அணுக வைக்க வேண்டியது அரசின் கடமையாகும். இலங்கை வாழ் மக்களின் சுமுக வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கும் தார்மீகப் பொறுப்பிலிருந்து தவறிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா செய்த சரித்திரத் தவறு மீண்டும் இந்நாட்டில் நடந்துவிடக் கூடாது.

ஆகவே, இவ்விடயத்தில் துணிச்சல் மிக்க ஜனாதிபதி என்ற வகையில், ஜனாதிபதி சந்திரிகா தலையிட்டு உடனடியானதும், நியாயமானதுமான தீர்வைக் காண வேண்டும். அதே வேளை, புலிகளும் இவ் விடயத்தைக் குழப்பி இனங்களுக்கிடையேயான முறுகலை ஏற்படுத்தாமல் இருப்பதும் அவசியமாகும். எந்தத் தரப்பாக இருந்தாலும் சாத்தியமானதும், நியாயமானதுமான வழியில் இவ் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

ந ர ன்

# சிறுவர் விவகாரத்தில் அம்பலமாகும் புலிகள்

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சிறுவர்களைத் தமது படையணிகளில் சேர்த்துக் கொள்ளும் பல தீவிரவாத இயக்கங்கள் இயங்கி வருவதால், இவற்றைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளில் ஐ.நா.பாதுகாப்புச் சபை இறங்கவுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த வகையில் இலங்கையில் புலிகள் இயக்கமும் சிறுவர் போராளிகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் கடுமையான கண்டனத்துக்கு இலக்காகியுள்ளது. ஐ.நா.வின் சிறுவர் விவகாரங்கள் தொடர்பான விசேட பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணு, சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்து சிறுவர் தொடர்பான பல்வேறு விடயங்களை ஆராய்ந்து ஐ.நா.வுக்கு அறிக்கையும் சமர்ப்பித்திருந்தார். அவர் தனது இலங்கை விஜயத்தின்போது வன்னிக்குச் சென்று புலிகளின் உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். அப்போது பிள்ளைகளைப் படையணிகளில் சேர்த்துக்கொள்ள மாட்டோமென்று உறுதியளித்த புலிகள் இது தொடர்பான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டனர். அதன் பின்னர் படையணிகளில் சேர்ந்து இயங்கிய சிறுவர் போராளிகளின் எதிர்காலத்தைச் சீரமைத்து அவர்களையும் சமூகத்தின் மதிப்புமிக்க பிரஜைகளாக வாழவைப்பதற்கு இடைத் தங்கல் முகாமொன்றினையும் புலிகள் கிளிநொச்சியில் அமைத்தனர். இந்த இடைத்தங்கல் முகாமில் சுமார் 41 பிள்ளைகளைப் புலிகள் சேர்ப்பித்தனர். இச் சம்பவம் நடைபெற்று பல வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இந்த 41 பிள்ளைகளுக்குப் புறம்பாக வேறு பிள்ளைகள் எவரும் இப் புனர்வாழ்வு நிலையத்தில் சேர்க்கப்படவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இந்தப் புனர்வாழ்வு முகாம் இப்போது செயலற்றுக் கிடக்கிறது.



புலிகளின் சிறுவர் போராளிகள்

புலிகள், பிள்ளைகளை வலுக்கட்டாயமாகப் பெற்றோர்களின் பிடியிலிருந்து கடத்திச் சென்று ஆயுதப் பயிற்சியளித்துத் தமது படையணிகளில் சேர்த்து போருக்குப் பயன்படுத்தி வருகின்றனரென்று ஐ.நா. சபையும் பல்வேறு சர்வதேச ஸ்தாபனங்களும் அவ்வப் போது கண்டனம் தெரிவித்து வந்திருக்கின்றன. ஐ.நா.வின் சிறுவர் தொடர்பான உப அமைப்பான 'யுனிசெப்'பும் பல தடவைகள் புலிகளைக் கண்டித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் புலிகள் 29 பிள்ளைகளைப் பெற்றோர் களிடம் கையளித்தனரென்ற செய்தி வெளிவந்த கையோடு ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் புலிகளைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

நான்கு வருடங்களுக்குள் 4,700 பிள்ளைகளைப் புலிகள் கடத்திச் சென்றிருக்கின்றனரென்று குறிப்பிட்ட கொபி அனான், இவர்களில் 2,900 பேரைப் புலிகள் விடுவித்தனரென்றும் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பிள்ளைகள் எப்படி விடுவிக்கப்பட்டனரென்று கொபி அனானின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் புலிகள் இயக்கத்துக்குள் பிரபா கரனுக்கும் கருணா அம்மானுக்குமிடையிலான முரண்பாடு வெடித்து உச்சநிலையையடைந்ததையடுத்து கருணா தனது கட்டுப்பாட்டிலிருந்த சுமார் ஆறாயிரம் பேரைக் கொண்ட படையணிகளைக் கலைத்தார். அப்போதுதான் இந்த 2900 சிறுவர், சிறுமிகளும் விடுவிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தப் பிள்ளைகளில் பலரைப் புலிகள் மீண்டும் தமது படையணிகளில் வலுக்கட்டாயமாகச் சேர்த்துக் கொண்டுள்ளனரென்பது குறிப்பிடத் தக்கது. பதினொரு வயதுப் பிள்ளைகளைக் கூடப் புலிகள் தமது படையணிகளில் சேர்த்துக்கொண்டுள்ளனரென்று கண்டனம் தெரிவித்த கொபி அனான், சுமார் 550 சிறுவர் சிறுமிகள் புலிகளின் பிடியிலிருந்து தப்பியோடி விட்டனரென்றும் கூறியிருந்தார்.

கொபி அனானின் அறிக்கையைத் தவறெனக் கண்டித்த தமிழ்ச்செல்வன், போரினால் அநாதைகளான பிள்ளைகளுக்குத் தாம் தஞ்சமளித்து, மனிதாபிமான உதவிகள் புரிவதாகத் தெரிவித்திருந்தார். "யாரினாலும் வெல்லப்பட முடியாத இந்த யுத்தத்தில் கொல்லப்படும் பெற்றோர்களின் பிள்ளைகளைப் 'பலிக்கடாக்களாக'வே புலிகள் வளர்க்கிறார்களென்பது அவர்களால் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

மட்டக்களப்பு - அம்பாறை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இனந்தெரியாதவர்களால் கடந்த பெப்ரவரி ஏழாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சுட்டுக் கொல்லப்பட்டு ஒரு வாரத்துக்குள் கொபி அனானின் புலிகளைக் கண்டிக்கும் அறிக்கை வெளியானது. கௌசல்யனோடு கொல்லப்பட்ட ஆறு பேரில் விதுமாறன் என்ற பதினாறு வயதுச் சிறுவனும் ஒருவனாவான். பதினொரு வயதில் புலிகளால் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்ட இந்தச் சிறுவன், புலிகளிடம் பூரண பயிற்சி பெற்றவனாவான். மரணத்தின் பின்னர் இவனுக்கு இரண்டாவது லெப்டினன்ட் பதவி புலிகளால் வழங்கப்பட்டது. உலகிலேயே மிகச் சிறுவயதில் அதாவது பதினாறு வயதில் லெப்டினன்ட் அதிகாரி தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டவன் இச் சிறுவன். இதுவும் புலிகள் நிகழ்த்திய சாதனைதான்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொள்ளுப்பிட்டியிலுள்ள அமைச்சுக் காரியாயலத்தில் வைத்துக் கொல்ல முயற்சியெடுத்துத் தோல்வியுற்று, பொலிஸ் நிலையத்தில் குண்டினை வெடிக்க வைத்துத் தன்னைத் தானே அழித்துக் கொண்ட தற்கொலைக் குண்டுதாரி, பதினைந்து வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டவனென்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சுனாமி கடல்கோள் பேரழிவின் பின்னர் அகதி முகாம்களிலிருந்து பிள்ளைகளைப் புலிகள் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்கின்றனரென்று தொண்டர் ஸ்தாபனங்களும் 'யுனிசெப்' போன்ற ஐ.நா. அமைப்புகளும் தெரிவித்துள்ளன. சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளை கிழக்கு மாகாண அகதி முகாம்களிலிருந்து கடத்திச் சென்றிருக்கின்றனரென்று தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை, தம்பிலுவிலுள்ள அகதி முகாமொன்றிலிருந்து நாற்பது பிள்ளைகளைப் புலிகள் கடத்திச் செல்ல முனைந்தபோது, பெற்றோர்களின் புகாரையடுத்து அதிரடிப் படையினர் தலையிட்டனர். இதனால் புலிகளுக்கும் அதிரடிப்படையினருக்குமிடையில் முறுகல் நிலையுமேற்பட்டது. புலி உறுப்பினர்களைக் கொண்டியங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் இப் பிள்ளைகளின் கடத்தல் முயற்சிகளுக்கு உதவினர். இப் பிள்ளைகளைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதையடுத்து மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள் இப் பிள்ளைகளை நேரில் சந்தித்து உரையாட முனைந்தனர். ஆனால் பிள்ளைகள் அவர்களிடம் பேச மறுத்துவிட்டனர். பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் புலிகள் மிரட்டல் விடுத்ததே இதற்கான காரணமாகும். இவ்வாறு கிழக்கில் பெற்றோர்களை மிரட்டிவிட்டு நூற்றுக்கணக்கான பிள்ளைகளைப் புலிகள் கடத்திச் சென்றிருக்கின்றனர். மனித உரிமை அமைப்புகளிடமோ யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமோ முறையிட்டால் வீடுகளைக் கொளுத்தி விடுவோமென்று புலிகள் எச்சரிக்கின்றனர். இதனால் மௌனக் கண்ணீர் வடிக்கும் நிலைக்குப் பெற்றோர்கள் தள்ளப்படுகின்றனர்.

மட்டக்களப்பு, கோடைவனம் என்ற இடத்தில் கடந்த ஜனவரி மாதம் பதினேழாம் திகதி வயலில் வேலை செய்து கொண்டிருந்த பதினைந்து வயதுச் சிறுவனொருவனைப் புலிகள் கடத்திச் சென்றனரென்று 'சிறுவர் பாதுகாப்புக்கான பல்லினக் கூட்டமைப்பு என்ற ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. குடும்பத்துக்கு வருமானத்தை ஈட்டித்தரும் முக்கிய நபரான இச் சிறுவனை புலி இயக்கத்தைச் சேர்ந்த ஏழு பேர் வந்து கடத்திச் சென்றனரென்றும் இது குறித்து எவருக்காவது முறைப்பாடு செய்தால் சுட்டுக் கொல்வோமென்று மிரட் டினார்களென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

கருணா அணியின் பிரிவும் சுனாமித் தாக்கமும் புலிகளின் போராட்ட சக்தியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கருணாவின் பிரிவுக்கு முன்னர் புலிகளின் எழுவானமாகத் திகழ்ந்த கிழக்கு மாகாணம் இப்போது புலிகளின் படுவானமாக மாறிக்கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு ஒதுங்கிப் போக முனைந்த கருணா தரப்பைப் பிரபா அணி சீண்டிப் பார்க்கப் புறப்பட்டதையடுத்து கருணா அணியும் தாக்கத் தொடங்கியது. இதனால், கிழக்கில் பிரபா அணிப் புலிகளுக்கும் சவக்குழிகள் தோண்டப்படுகின்றன.

புலிகள் இயக்கத்திலும் சரி, அல்லது வேறெந்தப் போராட்ட இயக்கங்களிலும் சரி, சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் இணைந்து கொள்வதற்கும் இணைத்துக் கொள்ளப்படுவதற்கும் அக, புற நிலைக் காரணிகள் இருக்கின்றன. இராணுவச் சீருடை அணிவது, துப்பாக்கி தூக்குவது போன்றவை சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மனோரீதியான கிளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவை. இன்னும் சிலர் ஏதோ சரியான இலட்சியத்துக்காகப் போராடுகிறோமென்று நினைத்துக்கொண்டு இயக்கங்களில் இணைந்து கொள்கிறார்கள். இவை மனோரீதியான அகக் காரணிகள். போரினால் பாதிக்கப்பட்டு வறுமையின் பிடிக்குள் வாடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கிடைக்கும் அற்ப சொற்ப வருமானத்துக்காகப் படையணிகளில் சேர்ந்து கொள்கிறார்கள். இன்னும் சிலர் தமது சகோதரனோ பெற்றோரோ இராணுவச் சிப்பாய்களால் கொல்லப்பட் டிருந்தால் பழிவாங்கும் மனோபாவத்தோடு புலிகள் இயக்கத்தோடு இணைந்து கொள்கிறார்கள். இவர்கள் வெகு சிறு தொகையினரே. இதற்காகத்தான் கிளர்ச்சியூட்டும் பிரசாரங்களைப் புலிகள் செய்கிறார்கள். மக்களின் மனதைக் கொப்புளிக்க வைக்கும் பாடல்களை ஒலிபரப்புகிறார்கள். வீடியோ காட்சிகளைக் காண்பிக்கிறார்கள்.

இவற்றுக்கும் அப்பால், வலுக்கட்டாயமாகப் பிள்ளைகளையும் இளைஞர்களையும் கடத்திச் செல்கிறார்கள்.

சிறு பிள்ளைகளின் சிந்திக்கும் திறனை மழுங்கடித்து, அவர்களுக்கு மூளைச் சலவை செய்வது இலகுவானது. எனவேதான் பிள்ளைகளைக் கடத்திச் செல்வதில் புலிகள் முனைப்புக் காட்டுகிறார்கள். பயங்கரவாத இயக்கங்களில் என்றுமே ஜனநாயகமும் பன்முகத்தன்மையும் இருப்பதில்லை. மேலிருந்து கீழ்வரை துப்பாக்கி அராஜகமே அரசோச்சும். தலைமை வழிபாடு அல்லது தனிநபர் வழிபாடு, பயங்கரவாத இயக்கங்களில் முக்கியமாக இழையோடும். எனவேதான் சூரியதேவனாக மதிக்கப்படும் பிரபாகரனுக்குப் புலி இயக்கப் போராளிகள் விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டியது அந்த இயக்கத்தின் முதலும் முக்கியமுமான விதியாகும்.

கரும் புலிகளைப் பொறுத்தவரை துப்பாக்கிக் குண்டுகள் விளையாட்டுப் பந்துகள் என்பது உண்மையே. ஆனால் மாற்றுக் கருத்துக்கள் அவர்களை உருத் தெரியாமல் மாற்றிவிடுமென்பதற்காகத்தான் அவர்களைத் தனிமையில் அடைத்து வைத்து 'சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன'.

சிறுசுகளைப் போராட்டப் படையணிகளில் சேர்த்துக் கொள்ளும் புலிகளைப் பற்றித் தொடர்ந்தும் அறிக்கைகளை மட்டும் வெளியிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லையென்பதை ஐக்கிய நாடுகள் அமைப்புகள் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் புலிகள் தொடர்ந்தும், பிளாக் சீப்களாகவே (கறுத்த ஆடுகள்) இருக்கப் போகிறார்கள். அறிக்கைகள் வேண்டும் தான் அவர்களை அம்பலப்படுத்த. ஆனால் அதேவேளை அதிரடி நடவடிக்கைகளும் வேண்டுமே.

## பிழைதிருத்தம்


'சிவராமும் சின்னபாலாவும்' என்ற தலைப்பில் கடந்த வாரம் 12ஆம் திகதி எழுதப்பட்ட எக்ஸ்ரே ரிப்போர்ட் என்ற விடயதானத்தின் முதற்பந்தியில் ஊடகவியலாளர் ஐ. நடேசன் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்று தவறுதலாக குறிப்பிடப்பட்டு விட்டது. அவர் யாழ்ப்பாணம், நெல்லியடியினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இதே போன்று அதே பந்தியில் இவர் நெல்லியடியில் வைத்து புலிகளால் கைது செய்யப்பட்டாரென்பதும் தவறு. அவர் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டு பேரப் பேச்சுக்களின் பின்னர் விடுவிக்கப்பட்டாரென்பதே சரியானது.

# கிழக்குப் படுகொலைகள் கிளப்பும் சந்தேகங்கள்

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு படுகொலை நடந்து வருகிறது. இக் கொலைகளானது திடீர் திட்டமிடல்களாலோ, கோபதாபங்களாலோ அல்லாமல் மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட சம்பவங்களாகும். வடக்கு - கிழக்கு மாகாணங்களானது தமிழரின் தாயக பூமி என்ற அடிப்படையில் பேரினவாதத்திடமிருந்து தமிழ் மக்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தவும், சுதந்திரத்தை மீட்கவுமே போராட்டத்தின் தேவையை தமிழர் மீது சுமத்தியது. அந்த நேரத்தில் அரசியல் தலைவர்களாக இருந்த தந்தை செல்வா, செல்வா, தமிழர்களின் தேசியத் தலைவர் அமிர்தலிங்கம், தங்கத்துரை போன்றோர் அப்போதைய பேரினவாத சிங்கள அரசுகளுடன் இதற்காகப் போராடினர். அதன் விளைவாக பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்களும் வேறு சில எழுதப்படாத இணக்கப்பாடுகளும் அகிம்சை வழியில் ஏற்படுத்தப்பட்டபோதும் அவை ஏற்படுத்தப்பட்ட வேகத்திலேயே மறுக்கப்பட்டதும், தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதுமே ஆயுதப் போராட்டத்துக்குள் தமிழ் மக்களைத் தள்ளியது. பின்னர் ஆயுதமுனைப் போராட்டம் உத்வேகமடைந்து பல இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இயக்கங்களின் இந்த வளர்ச்சியையும், தமிழர்கள் இதற்குக் காட்டிய ஆதரவையும் அகிம்சை வழிப் போராளிகளாக இருந்த தமிழ் அரசியல் தலைமைகள் ஆதரிக்கவும் செய்தன. சில வன்முறைப்போக்கை விமர்சிக்கவும் செய்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அப்போதைய பேரினவாத சிங்கள அரசு முழுத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதச் சாயம் பூசி சர்வதேச சமூகத்துக்குக் காட்டத் தலைப்பட்டது.

அவ்வாறு ஒட்டுமொத்தத் தமிழர்கள் மீதும் தனது அடக்குமுறையையும்,



தமிழர்களின் தேசியத் தலைவர் அமிர்தலிங்கம்



தந்தை செல்வா



தங்கத்துரை

அடாவடித்தனத்தையும் கட்டவிழ்த்துவிட்டது. அப்போது

> **உயிர் தியாகங்களைச் செய்வதில் அதிகரித்த எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத்தவர்கள் தலைமைப் பொறுப்புக்கு வருவதில் அல்லது நிர்வாகக் கட்டமைப்புகளில் முன்னிலைப் படுத்தப்படுவதில் ஏன் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள்?**

ஆட்சியிலிருந்தது ஐக்கிய தேசியக் கட்சி ஆகும். அதன் தலைவராகவும் அப்போதைய ஜனாதிபதியாகவும் இருந்து வந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இவரே 'கறுப்பு ஜூலை'க் கலவரத்தைத் தூண்டி தமிழர்கள் மீது படுகொலைகளை நிகழ்த்தத் திட்டம் தீட்டியவருமாவார். இதற்காக ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு நாளும் வருந்தியதுமில்லை; தவறு என்று ஏற்றுக்கொள்ளவுமில்லை.

ஒரு பெரும்பான்மை அரசு, தன் சொந்த நாட்டு மக்களாகிய சிறுபான்மைச் சமூகத்தின் மீது இரும்புக் கரங்கொண்டு அடக்க முற்பட்டதன் வெளிப்பாடு தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார்கள். இந்தப் போராட்டத்தில் வடக்கிலிருந்து தலைமை தாங்கிய போதும், கிழக்கு மாகாணத்திலிருந்தே பெரும்பாலான போராளிகள் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வந்தனர்.

இரண்டு தசாப்தத்தையும் தாண்டி இன்றுவரை தொடரும் தமிழர்களுக்கான போராட்டக் களத்தில் கூடுதலான உயிர்த் தியாகங்களைச் செய்தவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. எல்.ரி.ரி.ஈ.யாக இருக்கட்டும், ஈ.பி.ஆர்.எல்.எப்.ஆக இருக்கட்டும், ஈரோஸ் ஆக இருக்கட்டும், புளொட் ஆக இருக்கட்டும், ரெலோ ஆக இருக்கட்டும், ஈ.என்.டி.எல்.எஃப். ஆக இருக்கட்டும், ரீ.யூ.எல்.எஃப். ஆக இருக்கட்டும், ரீ.என்.ஏ.ஆக இருக்கட்டும், அகிம்சை வழிப் போராட்டமோ, ஆயுத வழிப் போராட்டமோ - எதுவாக இருந்தாலும் அதில் பெரும்பான்மையாகவும், மூர்க்கத்தனமாகவும் பங்களிப்புச் செய்தவர்களின் விகிதாசார அடிப்படையில் பார்க்கும்போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே முன்னிலை வகிக்கின்றனர்.

இப்படி இருக்கும்போதும், உயிர் தியாகங்களைச் செய்வதில் அதிகரித்த எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத்தவர்கள் தலைமைப் பொறுப்புக்கு வருவதில் அல்லது நிர்வாகக் கட்டமைப்புகளில் முன்னிலைப்படுத்தப்படுவதில் ஏன் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள்? விரும்பியே பின் வாங்கினார்களா? அல்லது அவர்கள் சார்ந்திருந்த இயக்கங்கள் - அமைப்புகள் - கட்சிகளால் பின்னுக்குத் தள்ளப்பட்டார்களா? இந்தக் கேள்விகளை ஒப்பீடு செய்து பார்க்கின்றபோது பல கொலைகளும், ஏமாற்றுத்தனங்களுமே உண்மைகளாக அல்லது பதிலாக இருக்கின்றன.

இச் சம்பவங்களின் தொடர்ச்சியாகவே தற்போதும் நடைபெற்றுவரும் படுகொலைகளையும் பார்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஆய்வு செய்வதன் நோக்கம் பிரதேச ரீதியான பிரிவினையை ஊக்குவிப்பதோ, பிரதேசவாதத்தைத் தூண்டி விடுவதோ அல்ல. மாறாக, எழுதப்படாத சட்டங்களைப்போல், உச்சரிக்கப்படாத பிரதேசவாதத்தின் அடிப்படையில் நடத்தப்படும் படுகொலைகளையும், கிழக்கு மாகாண மக்கள் மீது திணிக்கப்படும் தலைமை வெறியையுமேயாகும்.

கால ஓட்டத்தில் ஏனைய இயக்கங்கள் தமது வலிமையை இழந்தும், தலைமையை பாசிஸத்துக்குப் பலிகொடுத்தும் விட்டன. அதன் தொண்டர்கள், தோழர்கள் அதன் பின்னான தலைமைகளினால் கைவிடப்பட்ட நிலையில் நிர்க்கதியாகி நிற்கின்றனர். அதேபோல் தமிழரசுக் கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என்றும் இப்போது மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றும் அரசியல் வழித்தோன்றல்களாக - அர்ப்பணிப்பு மிக்க தலைமைகளை இழந்தவர்கள் - இன்று தேசியத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு திரிகின்ற

அலசுவது
**- மதியூசி -**

அவமானம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தளவில் இன்று தமிழ் மக்களின் விடுதலைக்கான பயணத்தைத் தீர்மானிக்கும் இரு சக்திகளாக ஒரு பாதையை புலிகளும், மற்றப் பாதையை ஈ.பி.டி.பி.யும் காட்டுகின்றனர்.

இவற்றில் புலிகள் காட்டும் வழியானது போர் என்றும், ஈ.பி.டி.பி. காட்டுகின்ற வழியானது சமஷ்டி என்றும் உள்ளது. இவ்வாறாகத் தமிழர்களின் போராட்டம் சுருங்கிப் போவதற்கு பெரும் காரணம், தமிழர்களுக்குள்ளேயே புரியப்பட்ட சகோதரப் படுகொலைகளும் தலைமை வெறியுமாகும். இதில் ஈ.பி.டி.பி. அரசியல் கட்சி என்றளவில் அதன் அரசியல் நடைமுறைகளை ஆராய்வதற்கு முன்னர், புலிகளின் போக்கு குறித்து வரலாற்றையும் திரும்பிப் பார்க்கின்றபோது, கிழக்குத் தமிழர்களுக்குப் புலிகள் பெரும் வரலாற்றுத் துரோகத்தை செய்துள்ளனர். இன்றும் செய்து கொண்டு வருகின்றனர். இந்த விபரங்களையும், நடந்த தவறுகளையும் அடுத்த வாரம் விரிவாகப் பார்ப்போம்.

---

## அதிரடி அய்யாத்துரை



**ரெண்டெழுத்தார்** செய்யிற கொலைகள் பிழையெண்டும் அது கண்டிக்கப்பட வேண்டியதுதான் எண்டும் கூட்டான தமிழ்க்கட்சி எம்.பி. ஒருவர் சொல்லிக் கொண்டு திரியிறாராம். ஆரெண்டு யோசிக்காதேங்கோ. அது வேறையாருமில்லை பிரேமமான சந்திரர்தான். தனக்கு நெருக்கமான பிரியமானவையளிட்டை புலம்பிக் கொண்டு திரியிறாராம். காலம் செய்த கோலத்தைப் பாத்தியளோ. ஒரு பிழையைக் கூட குரலை உயர்த்தி வெளியாலை கேக்கும்படியா பேச முடியாதபடி செய்து போட்டுது. ஒரு காலத்திலை இவர் வாரார் எண்டால் ரெண்டெழுத்தார் அந்த ஏரியாவுலையே நிக்கமாட்டினம். இண்டைக்கு ஆள் டோட்டலா மாறிட்டார். அவையைக் கண்டால் இவர் அப்படியே ஒடுங்கிப் போயிடுறார். எல்லாம் ஒரு தேசிய மரியாதைதானோ?

**என்னவெல்லாம்** நடக்காதெண்டு யோசிக்கிறமோ, அதுகள் சில நேரத்தில நடந்துடுது. அதானுங்கோ போனவாரம், பார்ளிமெண்டில நடந்த சம்பவம். அப்படியே மெய் சிலிர்த்துப் போட்டுது. வீணைக் கட்சியின்ர தலைவர் உரையாற்றுறா ரெண்டால் என்ன ஏதெண்டு கேட்காமலே காட்டுக் கத்தல் போட்டு இடையூறு செய்யிற எங்கட கூத்தமைப்பு எம்.பி. செவாலியே லிங்கத்தார், போனவாரம் சபை முதல்வராக இருக்கேக்க தேவமானவரை உரையாற்றச் சொன்னாராம். தேவமானவர் உரையாற்றேக்க மற்ற கூத்தமைப்பு எம்.பி.மார் குய்யோமுறையோ எண்டு கத்தேக்க, லிங்கத்தார் வாய் திறக்க ஏலாத முதல்வர் ஆசனத்தில இருந்ததால ஒண்டும் செய்ய ஏலாமப் போயிட்டுது. முள்ளுக்கு மேல இருந்தவர் மாதிரி மனிசன் நெளிஞ்ச விதத்தைப் பார்த்தவைக்கு சிரிப்போ சிரிப்பாம்.

பொறுக்க ஏலாம தேவமானவரிட்டை இன்னும் ரெண்டு நிமிஷம்தான் இருக்கு எண்டு சொல்லவும், அதுக்கு தேவமானவர் தனக்கு அரச சார்பிலிருந்து இன்னும் மேலதிகமாக ரெண்டு நிமிஷம் வேணும் எண்டு கேட்டு தொடர்ந்து உரையாற்றினவராம். மரியாதைக்குரிய சீட்டில இருந்து கொண்டு ஒண்டும் செய்ய முடியாத லிங்கத்தாரின்ர முகத்தில அசடு வழிஞ்சதைப் பார்க்கணுமே. அந்தக் காட்சியைப் பார்க்க ஒரு கோடி கண்கள் வேணுமுங்கோ. ஏனையவைக்கும் முதல்வர் சீட் குடுபட்டிருந்தால் ஹாட் அட்டேக் வந்தே சுபமடைஞ்சிருவினம் போல......

**போனவாரம்** பார்ளிமெண்டில நடந்த இன்னொரு மயிர் கூச்செறியும் சம்பவம் கேள்விப்பட்டியளோ. சிவப்புச் சட்டைக்கார வீரமான எம்.பி. உரையாற்றிக் கொண்டிருக்கேக்க, குறுக்கீடு செய்து சம்பந்தமானவர் பேசினவராம். அதக் கண்டித்து வீரமான வம்சத்துக்காரர் சம்பந்தமானவரிட்டை நீங்கள் வன்னியில சு.ப.னாவின்ர கட்டளையைப் பாடமாக்கிக் கொண்டு பேசுறீங்கள் எண்டாராம். அதுக்கு சம்ந்தமானவர் நேவஸாகி நான் யாருடைய பேச்சையும் கேட்டுக்கொண்டு பேசத்தேவையில்லை. நான் சுதந்திரமாகவே பேசுகிறேன் என்று வீரம் கொப்புளிக்கச் சொல்லிப் போட்டாராம். என்னதான் இருந்தாலும் சு.ப. சொன்னதைத்தான் ஒப்புவிக்கிறன் எண்டு ஏற்றுக்கொள்ள ஏலாதுதான். இவரின்ர எக்ஸ்பீரியன்ஸ் எங்கே? சு.ப. எங்கே? கிட்டவும் வரமுடியுமே? உதை சு.ப. வெல்லோ புரிஞ்சுகொள்ளவேணும். சின்னப் பிள்ளைகளைக் கூப்பிட்டுச் சொல்லித்தருமாப் போல சொன்னால் இப்புடி எகத்தாளமா கேட்பினம் தானே எண்டு சம்பந்தமானவர் ராஜமான சகாவுக்கு இரகசியமாகச் சொன்னாராம். சம்பந்தா உமது சமத்தே சமத்து.....

**திருவாணமலையில** தொடர்ந்து ஹர்த்தால் நடத்திறதாலை மக்கள் எழுச்சிக்குப் பதிலா எரிச்சல் கொண்டிருக்கினமாம். ஒரு புத்தர் சிலை விவகாரத்தை உப்பிடிப் போட்டு உருட்டுவாங்கள் எண்டு சனம் நம்பயில்லையாம். அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் எடுக்க முடியாம ஹர்த்தால், ஹர்த்தால் எண்டு மாவட்டத்தைத் தொடர்ந்து ஸ்தம்பிக்கச் செய்யினமாம். அதாலை ஆத்திரமுற்ற அரசாங்க ஊழியர்கள் ஹர்த்தாலுக்கு அறிவிக்கிற பேரவைத் தலைவருக்கு போன்போட்டுத் திட்டினமாம். அந்தாள் திட்டுத்தாங்க முடியாமல் ஐயோ நான் என்ன வில்லங்கத்திலேயே ஹர்த்தால் எண்டு சொல்லுறன்? அவையெல்லோ உப்பிடிச் சொல்லச் சொல்லினம் எண்டு புலம்புறாராம். இப்ப தெரியுதோ, ஹர்த்தாலை யார் கண்காணிக்கினம் எண்டு. அவையுங்கோ...அவை....ஹீ....ஹீ....

**ரெண்டெழுத்தாரிட்டை** விமானப்படை இருக்கெண்ட நியூஸ் காற்றுத் தீ போலை பரவின உடனேயே அண்டை நாட்டுக்காரர் ஆபத்து ஆபத்து எண்டு அலறினம். சட்லைட்டில போட்டோ பிடிக்கப் போறம். பிராந்தியத்துக்கு ஆபத்தெண்டு துள்ளினம். இது எப்படி இருக்கு தெரியுமோ. பொக்கேற்றுக்குள்ள பூராணை விட்ட மாதிரி இருக்கெண்டு பொலிரிக் தெரிஞ்சவை பகிடிவிடுகினம். ஆனால் ரெண்டெழுத்தாரின்ர தளபதிகளுக்கு அவையின்ர தலைவர் கூட்டம் வச்சி என்ன சொன்னவர் தெரியுமோ. எங்கட வளர்ச்சியைக் கண்டு அண்டை நாடு பயந்திட்டுது. உந்தப் பயமிருந்தாப் போதும் எண்டு சத்தமாச் சிரிச்சவராம். ஏற்கனவே வாங்கின அண்டை நாடு, திரும்பவும் எங்களிட்டை தன்ர மூக்கை நுழைக்காது எண்டு அவருக்கு அவ்வளவு நம்பிக்கையாம். அவரின்ர கருத்துப்படிப் பார்த்தால் அண்டை நாட்டின்ர உந்தக் கத்தல் பரபரப்பெல்லாத்தையும் இந்து சமுத்திரத்துக்கு அந்தப் பக்கமே வச்சிக் கொண்டால் சரிதான் எண்டது தானாம். அப்படிப்போடு அருவாலை.

# சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யங்கள்

**இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டு உலகின் பலபாகங்களிலும் பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட சர்வாதிகாரிகளைச் சுமந்து நின்றது. குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மோசமான சர்வாதிகார வரலாறுகளைக் கொண்டுள்ளது. இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் ஆர்ஜென்டீனாவில், பொலிவியாவில், பிறேஸிலில், சிலியில், பராகுவேயில், உருகுவேயில் தமது விஷக் கரங்களைப் பதித்தார்கள். எதிர்க் கருத்துள்ளேரரை வேட்டையாடினார்கள். இந்த நாடுகளில் எல்லாம் கொலை, கைது, காணாமல் போதல் என்பனவே அன்றாட வாழ்க்கையாயிற்று.**

சென்ற வாரத் தொடர்ச்சி......

பினாசெயின் சர்வாதிகார ஆட்சிக்கால கட்டத்தில் 1973ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம்19ஆம் திகதி தமது மகனான எத்தியன் பெஸ்லே கைதுசெய்யப்பட்டு காணாமல் போன பின் தற்போது பிரான்ஸில் வாழ்ந்து வரும் றொபேட்டோ பெஸ்லே மகிழ்ச்சியுடன் இப்படிக் கூறுகிறார். "நான் நினைக்கிறேன் இது ஒன்றின் முடிவு அதேவேளை இன்னுமொன்றின் ஆரம்பம்."

பினாசெயை மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழும் முன்னாள், இந்நாள் சர்வாதிகாரிகளைக் கலங்க வைத்திருக்கும் நிகழ்வு இப்படித்தான் நடந்தது. கடந்த வருடம் அக்டோபர் மாதம் 3ஆம் திகதி பினாசெ பிரான்ஸுக்கு வருவதற்கு விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

ஏற்கெனவே பிரான்ஸில் வாழும் சிலி நாட்டு குடும்பங்களில் பலர், பினாசெயில் அரக்க ஆட்சியின் கீழ் வதைபட்டவர்கள். குடும்ப அங்கத்தவர்கள் இழந்தவர்கள். இவர்களில் பலர் பிரெஞ்சு நீதி மன்றங்களில் பினாசெக்கு எதிரான வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர். எனவே சிக்கலில் சிக்கிக்கொள்ள விரும்பாத பிரெஞ்சு அரசு பினாசெயின் விசா விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டது.

இதற்கிடையில் செப்ரெம்பர் 22ஆம் திகதி லண்டனுக்குச் சென்றுவிட்ட பினாசெ, பிரான்ஸ் விசா நிராகரிக்கப்பட்டதால் லண்டனில் உள்ள தனியார் மருத்துவநிலையத்தில் சிகிச்சையைப் பெறத் தொடங்கினார். அவருக்கு அங்கு சத்திரசிகிச்சை முடிந்த ஒரு வாரத்தின்பின், அக்டோபர் 16ஆம் திகதி ஸ்பானிய நீதியரசர் ஹர்சோனின் பணிப்பின்பேரில் பினாசெ கைது செய்யப்பட்டார். இந்தக் கைதுக்கான காரணம் தற்போது 82 வயதுடைய சிலியின் முன்னாள் இராணுவ ஜெனரலான ஒகஸ்ரோ பினாசெ தமது ஆட்சிக்காலமான 11 செப்டெம்பர் 1973க்கும் 31 டிசெம்பர் 1983க்கும் இடையில் சிலியில் கொல்லப்பட்ட 79 ஸ்பானிய பிரஜைகளின் கொலைக்கு இராணுவ ஆட்சித் தலைவர் என்ற வகையில் பொறுப்பேற்க வேண்டும். எனவே இவரைக் கைது செய்யும் ஆணையை ஸ்பெயினின் மட்ரிட்டிலுள்ள நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. ஐரோப்பிய கூட்டமைப்பு ஒப்பந்தங்களின் கீழ் இவரை கைதுசெய்து தம்மிடம் ஒப்படைக்குமாறு ஸ்பெயின் அரசு பிரித்தானியாவைக் கேட்டது. இவரை ஸ்பெயினிடம் ஒப்படைப்பது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் பிரித்தானிய நீதிமன்றம், பிரபுக்கள் சபை என்று மாதக் கணக்காக தொடர்கிற போதிலும் நேற்றைய சர்வாதிகாரி பினாசெ இன்று கைதியாகவே இருக்கிறார். காப்பாற்றுவதற்கு சிலி அரசாங்கத்தைத் தவிர வேறு யாருமே இல்லாத நிலையில் கைவிடப்பட்டிருக்கிறார். சிலியின் ஜனாதிபதியான EDUARDOFRE இராணுவத்தின் மிரட்டல் காரணமாகவே பினாசெயை விடுவிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார். ஆனால் பினாசெ தண்டிக்கப்பட வேண்டும் எனக்கோரும் ஆர்ப்பாட்டங்கள் லண்டனிலும் சிலியிலும் தொடர்ந்து நடக்கின்றன. இத்தகைய ஆர்ப்பாட்டமொன்றில் "உன்னுடைய குற்றச் செயல்களுக்கான தண்டனையை நீ அனுபவிக்க வேண்டிய காலகட்டம் இப்போது வந்துவிட்டது" என்ற பதாதை ஒன்று வெகு பொருத்தமாகத் தொங்கவிடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல ரொனி பிளேயரின் தலைமையிலான தொழிற்கட்சி அரசு இக்கைதுக்கான பச்சைக்கொடியைக் காட்டியது என்று INDEPENDANT நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. பிரதமர் அலுவலகம் இக் கைது குறித்து தாம் அறிவிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தது. பிரித்தானிய வெளிவிவகார அமைச்சோ இது ஒரு அரசியல் பிரச்சினையல்ல பொலிஸும் நீதித்துறையும் சம்பந்தப்பட்ட பிரச்சினை எனக் கூறிவிட்டது. மிக முக்கிமான அரசியல் பிரமுகர் என்ற நிலையைக் கொண்டவரை மதிக்க மறுத்த பிரித்தானிய அரசு அநீதி இழைத்துவிட்டது. என்ற சிலி ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு, "எம்மைப் பொறுத்தவரை பினாசெ மிக முக்கிய அரசியல் பிரமுகரல்ல" என்று பிரித்தானிய அரசு இறுக்கமாகப் பதிலளித்துவிட்டது. இவையெல்லாம் சர்வாதிகாரிகள் தொடர்பாக ஐரோப்பாவில் குறிப்பாக பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளின் சோசலிச அல்லது சமூக ஜனநாயக அரசுகளின் அணுகுமுறைகள் மாறத் தொடங்கிவிட்டதன் அம்சமாகும். இதற்கு இன்னுமொரு உதாரணம் பினாசெயின் கைதுபற்றி பிரான்ஸின் சோசலிச அரசின் பிரதமர் லியொனல் யொஸ்பன் இப்படிக் கூறுகிறார். "இச்செய்தி ஒரு அதிசயம், இச் செய்தி மிக மகிழ்ச்சியானது. ஆனால் சர்வாதிகாரிகளுக்கு இது ஒரு மோசமான செய்தி" என்கிறார். சோசலிச அரசின் கூட்டுக்கட்சியான பசுமைக்கட்சி "சர்வாதிகாரிகளுக்கான மிக மோசமான காலகட்டம் இது" எனக் கூறியுள்ளது. அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபை பினாசெயின் கைது குறித்து, "இது வரலாற்றில் முதல் சம்பவம். இத்தோடு சர்வாதிகாரிகள் விசேட அரசியல் பிரமுகர்கள் என்ற போர்வையில் வலம்வருவது நிறுத்தப்படும். பினாசே போன்றவர்கள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவேண்டும்" என்று கோரியுள்ளது. "மனித உரிமைமீறல்களுக்கு எதிரான போராட்டத்தில் கிடைத்துள்ள மிகப் பிரதான வெற்றி இது" என ஜெனிவாவில் உள்ள சர்வதேச யூரிகள் சபை கூறியுள்ளது.

இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டு உலகின் பல பாகங்களிலும் பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட சர்வாதிகாரிகளைச் சுமந்து நின்றது. குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மோசமான சர்வாதிகார வரலாறுகளைக் கொண்டுள்ளது. இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் ஆர்ஜென்ரைனாவில், பொலிவியாவில், பிறேஸிலில், சிலியில், பராகுவேயில், உருகுவேயில் தமது விஷக் கரங்களைப் பதித்தார்கள். எதிர்க்கருத்துள்ளோரை வேட்டையாடினார்கள். இந்த நாடுகளில் எல்லாம் கொலை, கைது, காணாமல் போதல் என்பனவே அன்றாட வாழ்க்கையாயிற்று. இக் கொடுமைகளில் பிரசித்தி பெற்றவர்கள் சிலியினதும் பராகுவேயினதும் இரகசிப் பொலிஸார். இவர்களது செயற்பாடுகளுக்கான ஆசீர்வாதமும் நிதியும் பயிற்சியும் ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றி வாய் கிழியப் பேசும் அமெரிக்காவிலேயே வழங்கப்பட்டது. இதிலே இன்னுமொரு கேவலமான விடயம் என்னவென்றால் மேற்குறிப்பிட்ட நாடுகளிலே இந்த இராணுவச் சர்வாதிகாரிகளின் ஆட்சிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும்கூட புதிதாகப் பதவியேற்ற ஜனநாயக அரசாங்கங்கள், தமது அரசாங்கங்கள் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு உட்பட்டு விடக்கூடாது என்ற அச்சத்தில் இந்தச் சர்வாதிகாரிகளுடன் சமரசம் செய்துகொண்டு, அவர்கள் செய்த மனித உரிமை மீறல்களை அலட்சியம் செய்துவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, இச்சர்வாதிகாரிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் சட்டங்களையும் நிறைவேற்றிவிடுகிறார்கள். இதன் காரணமாக இந்தச் சர்வாதிகாரிகளால் பாதிக்கப்பட்டோர் நடத்திவரும் போராட்டங்கள் பலமிழந்து பயனிழந்து போய்விட்டன. இலத்தீன் அமெரிக்காவின் இதர சர்வாதிகாரிகளைப் போலன்றி பினாசே நாகரீகப் போர்வை போர்த்திய நரித்தனமானவர். இவர் தனது சொந்தத் திறமையால் இராணுவத்தில் ஜெனரலாகவில்லை. இவரது மனைவியின் குடும்பத்தின் உதவியினாலேயே இவருக்கு இப்பதவி கிடைத்தது. இக்காலகட்டத்தில்தான் 1970 செப்டெம்பர் மாதம் சோசலிஸ்ட்டான சல்வடோர் அலண்டே சிலியின் ஜனாதிபதியாகத் தோ்ந்தெடுக்கப்பட்டார். இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி அலை பரவிவிடுமோ என்ற அச்சம் அமெரிக்காவின் அடிவயிற்றில் நெருப்பை மூட்டியது. வழக்கம்போல பொருளாதார அழுத்தங்கள் மூலம் சிலியின் உள்நாட்டு அமைதி நிலையை அமெரிக்கா சீர்குலைக்கத் தொடங்கியது. சி.ஐ.ஏ.யினூடாக அலண்டேயின் அரசைக் கவிழ்ப்பதற்கான காய்களை அமெரிக்கா நகர்த்த ஆரம்பித்தது. விளைவு பினாசெயின் பணியைப் பாராட்டி சிலியின் உள் நாட்டமைச்சர் ஜெனரல் பிறாற்ஸ் தரைப்படையின் தலைவராக்கினார். அலண்டேயின் ஆட்சியைக் கவிழ்க்க முயலும் அமெரிக்கச் சதிக்கு பினாசெ துணைபோனார். 1973ஆம்

## அமரர் உமாகாந்தன் எழுதியதிலிருந்து.....

ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி பினாசெயின் தலைமையில் அலண்டேயின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அலண்டேயின் மக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பெருமளவில் கைதுசெய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். நீதி விசாரணையற்ற கொலைகளும், கொடுரமான சித்திரவதைகளும் அன்றாட நிகழ்வுகளாயின. 1974ஆம் ஆண்டு யூன் மாதம் பினாசெ சிலியின் உயர் தலைவராகத் தன்னைத்தானே பிரகடனம் செய்துகொண்டார்.

*நன்றி :- தோற்றுத்தான் போவோமோ...*

(தொடர்ச்சி அடுத்த வாரம்....)

## தினமுரசு சந்தா விபரம்

### சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.


அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:


| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3500 | ரூ.1750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4400 | ரூ.2200 | ரூ.1100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06 . Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவதத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager Thinamurasun" என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta,Colombo-06 .என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.





மலையாள மாந்திரீக சக்தி

(1) மலையாள தேசத்தில் வசிப்பவளே ஸ்ரீ துர்க்கா தேவி ! ஸ்ரீ துர்க்கா தேவியின் பீடம் மலையாளமே! மலையாள தேசத்தின் தனி மகத்துவம் மலையாள மாந்திரீகம். அது மட்டுமா? விதியின் விபரணம் சாஸ்திரம், சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளமே! மலையாள மாந்திரிக பேராரசர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P ஐயா அவர்களே

(2) இலங்கையில் தொண்டு தொட்டு 46 வருடகாலமாக நுவரெலியாவிலும் கொழும்பிலும் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயங்களை அமைத்து அன்றாடு 6 மணித்தியால அக்கினி குண்டலி பூஜை நடை பெருவதாலேயே! எண்ணியது எண்ணியவாறு நிறைவேறுகிறது

(3) உண்மைக்கு எடுத்து காட்டாக இது ஒரு வரையருக்கப்பட்ட தனியார் துரை P.K. Saamy Associate (Pvt) Ltd நிறுவனமாக இயக்கி வருவதால் வாங்கும் பணத்திற்கு ரசீதும் மாந்திரிக சித்த ஞானத்தால் காரியம் நிறைவேறும் திகதியை உடனே கூறிவிடும் சக்தி இங்கு இருக்கிறது.

(4) மேலும் ஐயாவின் பிரதான அவசரனையுடன் வழங்கும் ஞாயிறு தோறும் சக்தி தொலை காட்சியில் இரவு 7 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பார்த்து வேலன் மகிமையை கண்டறியுங்கள். மேலும் கை அளவு உலகு ஐரோப்பா முழுவதும் வெள்ளிதோறும் London நேரப்படி காலை 9.30 மணிக்கு கை ரேகை தொடர் நிகழ்ச்சியை Vectone TV பார்க்க தவறாதீர்கள். மேலும் விபரம் அறிய வெப்தலத்தை நாடுங்கள் www.drpksamy.com www.gangatharan.com

(5) இங்கு தீய வேலைகளுக்கு ஒருபோதும் இடமில்லை மனித ரூபத்தில் ஸ்ரீ துர்க்கா தேவியின் மகிமையை கண்டறிய மாதம் தோறும் இறுதியில் நடைபெறும் 11 மணித்தியால அக்கினி குண்டலி யாக பூஜையில் கலந்து கொண்டால் இவ் அற்புதத்தை கண்டறியலாம். அன்று அன்னதானமும் அடியார்களுக்கு வழங்கபடும்

(6) இனி உங்கள் பிரச்சனை என்ன?
தீராத நோய் தீர வேண்டுமா? ஆஸ்மா நோயால் அவஸ்தையா? பாரிச வாதமா? பக்க வாத விளைவுகளா? கை கால் உழைச்சலா? மன பேதளிப்பா? விரக்கிதியா-படபடப்பா? பில்லி சூனியமா? பேய் சேட்டையா? எதிரிகளின் சதிதிட்டத்தில் விடுபட வேண்டுமா?

(7) மற்றும் பிரிந்து போன கணவன்-மனைவி-காதலன் காதலி ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாணத்தடை நீங்க, மது போதையில் இருந்த விடுபட, குபேர வாழ்வு அச்சர கூடு அணிந்து கொள்ள, கல்வி ஞான கவசம் பெற, தலைமுடி உதிர்வதை தடுத்து கொள்ள, இளம் நரையை போக்க, தலைமுடி வளர, சோம்பலை தவிர்க்க, வியாபாரம் விருத்தியடைய, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் நன்மை பெற, கடற் தொழில் வியாபாரம் முன்னேற, வண்டி (வாகனம்) இலாபத்துடன் செயல்பட, விரும்பிய தொழில் கிட்ட, சென்றவர்கள் தேடிவர, முன்வினை தோஷம் கரும தோஷம் செவ்வாய் தோஷம் பரிகாரம் செய்து கொள்ள, குழந்தை பேறு கிட்ட, அதிஸ்டகல் மோதிரம் அணிந்து கொள்ள, இன்னும் உங்கள் குறைகளுக்கு நேரில் என்னை சந்தித்து ஆலோசிக்கவும்.(வெள்ளி ஞாயிறு கிழமை தவிர்ந்து)

(8) இன்னும் அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே! பிழைத்தது இல்லை நடந்தது நடக்கபோவது, நடக்க இருப்பது, எத்தனையாம் திகதி திருமணம், எத்தனை மணிக்கு எத்தனையாம் திகதி பிரயாணம், எத்தனையாம் திகதி-எண்ணியது நடக்கும், சரிவருமா? சரிவராதா? என்பது இத்தனையாம் திகதி சரிவந்து விடும், என்று அறிந்த தெரிந்து செயல் பட முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும்.

(9) தொலைபேசியில் விளக்கம் பெற விரும்புவோர் எனது சிரேஸ்ட தெளிவுரையாளர் சிவா விடம் நேரத்தை ஒதுக்கி கொண்டு தெளிவு பெறலாம் அணைத்து தொலை பேசிக்கும் எம்மிடம் (C.L.I) உண்டு வெளிநாட்டவருக்கு விஷேட தொலைபேசி வசதியுண்டு.

**உலக மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி**

**பேராசிரியர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N.) J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரிக உச்சாடன பீடம் 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.

தொலைபேசி (CLI) :- (0094 -11)- 2342463,2342464,2470615,2449110, 2431137, 4616331, 4616127, 46131124, 4613133, Fax: 2344831

Mobile :- +0094 777-588405 E-mail:- drpksamy@sltnet.lk web:- www.drpksamy.com, www.gangatharan.com

கிளைகள் } நுவரெலியாவில் (P.T.R ஐயாவை சந்தியுங்கள்) ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் 33, கண்டி வீதி, தொ.பே: 0094-052-2222508/4490031/2223093
வெள்ளவத்தையில் 107/B, காலி வீதி, கொழும்பு-06. தொ.பே :- 0094 -11- 2552485

# இன்னொருவர் பார்வையில்



**இலங்கையில் இந்திய அமைதிப் படை நிலைகொண்டிருந்த 1987-90ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதன் புலனாய்வுப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய ஆர். ஹரிகரன் என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது. இக் கட்டுரை சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' என்ற பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. கடந்த இரு வாரங்களாக உலகில் விமானப் படையணி வைத்திருக்கும் தீவிரவாத இயக்கங்கள் பற்றியும், குறிப்பாகக் கடந்த வாரம் புலிகளின் விமானப் படையணி பற்றியும் கட்டுரைகளை வெளியிட்டிருந்தோம். இக் கட்டுரைகளின் பின்புலத்தில் ஹரிகரன் அவர்களின் விடயதானத்தை வாசிப்பது வாசகர்களுக்குப் பயன்மிக்கதாக அமையுமென நம்புகிறோம். "புலிகளின் வான்பறப்புத் திறனும் ஏற்படக்கூடிய அபாயங்களும்" என்ற தலைப்பில் ஹரிகரனின் கட்டுரை பிரசுரமாகியிருந்தது.**

# புலிகளின் விமானப்படையணியும் ஏற்படக்கூடிய அபாயங்களும்

புலிகள் எவ்வித பயமுமின்றிச் சமாதான வழிமுறைகளின் உணர்வு களை மீறி யுத்தத்தைத் தொடுப்பதற்கான தமது திறனை வலுப்படுத்தியுள்ளனர். இது சர்வதேச சமூகம் அக்கறைகொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

கடந்த வருட இறுதியிலிருந்து புலிகள் புதிதாகப் பெற்றிருக்கும் விமானத் திறன்கள் பற்றி இலங்கை ஊடகங்கள் அவ்வப்போது குறிப்பிட்டும் வந்திருக்கின்றன. சுனாமிப் பேரழிவு பற்றியும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ்ஷுக்கும், பில் கிளின்டனுக்கும் ஜனாதிபதி சந்திரிகா 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விளங்கப்படுத்தியிருந்தார். அப்போது புலிகள் விமானங்கள் வைத்திருப்பது குறித்து இந்த இரு முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் சந்திரிகா பண்டாரநாயக்கா கூறினாரென்று பத்திரிகை அறிக்கையொன்று தெரிவித்தது.

ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் பெறப்பட்ட புலிகளின் விமானத் திறன் பற்றிய தகவலை 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அப்போதைய விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எடுத்து விளக்கியிருந்தார். வன்னியிலுள்ள இரணைமடுக்குளப் பகுதிக்கு அண்மையில் புலிகள் விமான ஓடுபாதையொன்றினை நிர்மாணித்திருப்பதையும் அங்கு மென்ரக விமானமொன்று காணப்பட்டதையும் இந்த உளவு விமானங்கள் தெரியப்படுத்தியிருந்தன. அப்பகுதியில் 1250 மீற்றர்கள் நீளமான விமான ஓடுபாதை ஒன்று இருப்பதனைப் பல்வேறு உளவுச் செயற்பாடுகள் எடுத்துக் காட்டியிருந்தனவென்று தெரிவிக்கப் பட்டது. இந்த விமான ஓடுபாதையில் ஆகக் குறைந்தது ஒரு மென்ரக விமானமாவது தரித்து நின்றதை வீடியோ படக்கருவிகள் எடுத்துக் காட்டியிருந்தன. அநேகமாக மேலுமொரு மென்ரக விமானம் அங்கு நிலைகொண்டிருக்கலாம். புதிய விமான ஓடுபாதையில் காணப்பட்ட இரு மென்ரக விமானங்களும் செக் நாட்டு உற்பத்தியான Zlin - Z143 ரக விமானத்தை ஒத்தவையென்று எயர் மார்ஷல் பெரேரா தெரிவித்திருந்தார். புலிகள் தமது விமானமோட்டிகளுக்குப் பயிற்சியளிக்கிறார்கள் என்றும், பூரணத்துவம் வாய்ந்த விமானப் படையொன்றினைக் கட்டியெழுப்பும் வேலைகளில் ஈடுபட்டுள்ளன ரென்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்த விமான ஓடுபாதையின் நீளம், டொர்னியர்ஸ் போன்ற நடுத்தர அளவிலான விமானங்களின் செயற்பாட்டுக்கு இலகுவாகப் பயன்படுத்த முடியுமென்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த டொர்னியர்ஸ் ரக விமானங்கள் இந்திய பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படுகின்றன. கமாண்டோ படையினரின் ஒரு பிரிவினரையும் (12இலிருந்து 14பேர் வரை) அவர்களின் 1.2 தொன் பொருட்களையும் ஏற்றிச் செல்லக்கூடியவை இந்த டொர்னியஸ் ரக விமானங்கள். வான் பறப்புத் திறனைப் புலிகள் பெற்றிருக்கிறார்களென்பது அடிப்படையில், இலங்கையின் வானப் பரப்பில் தனது திறமையான கட்டுப்பாட்டினை அரசாங்கம் இழக்கிறதென்றே அர்த்தப்பட முடியும்.

இதற்குமப்பால், எவ்வித எச்சரிக்கையுமின்றித் தான் விரும்பும் ஓரிடத்தைப் புலிகளால் தாக்கமுடியுமென்பதனையும் இது காட்டுகிறது. இவ்வாறு புலிகள் கொண்டிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட விமானப் பறப்புத் திறன் கட்டுநாயக்கா விமானத்தளத்தின்மீது புலிகள் நடத்திய தாக்குதலைப் போன்று கமாண்டோ பாணியிலான தாக்குதலை இலகுவில் நடத்தக்கூடியதாக இருக்கும். மென்ரக விமானமொன்று அதன் சிறிய தன்மை காரணமாகவும், கீழ் மட்டத்தில் பறக்கக் கூடிய தன்மை, திறன் கொண்டதென்பதாலும் ரடார் கருவியினால் கண்டுபிடிக்க முடியாமல் தப்பித்துக்கொள்ள முடியும். மென்ரக விமானமொன்றினைச் சில மிக மோசமான பயங்கரவாதச் செயற்பாடு களுக்குப் பயன்படுத்த முடியும். அத்தகைய விமானங்கள் ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களை நித்திரையின்றி இரவுகளைக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளக்கூடியவை. அமெரிக்காவில்கூட வெள்ளை மாளிகைக்கு மேலான வானப் பரப்பு மிகவும் பாதுகாப்பானவை. இங்குள்ள பாதுகாப்பு அமைப்புகளையும் ஊடுருவிக் கொண்டு பல தடவைகள் மென்ரக விமானங் கள் அத்துமீறிப் பறந்துள்ளன.

## மென்ரக விமானங்களின் பயங்கரப் பாவனை

அமெரிக்காவில் செப்டெம்பர் பதினொன்று தற்கொலைத் தாக்குதல்களுக்கு மென்ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்குமப்பால் பல்வேறு தாக்குதல்களுக்கு மென்ரக விமானங்களைப் புலிகளால் பயன்படுத்த முடியும். விமானமூலம் சென்று கடலிலும், தரையிலும் விமானத் தாக்குதல்களை நடத்துவது, வெளிநாட்டிலிருந்து ஆயுதங்களையும் ஏனைய பொருட்களையும் விமான மூலம் கொண்டு வருவது, கடற்படைக் கப்பல்களையும், கடற்படைகளையும் கண்காணித்தல், ஏவுகணை நெருப்புத் தாக்குதல்களை விமான வழிகாட்டலின் மூலம் நடத்துதல், காயப்பட்டவர்களை ஏற்றிச் செல்லுதல், குறுகிய கால அறிவுறுத்தலில் தலைவர்களை வேறிடங்களுக்கு அப்புறப்படுத்துதல் போன்றவை மென்ரக விமானங்கள் மூலம் மேற்கொள்ளக் கூடிய சில வேலைகளாகும்.

2000ஆம் ஆண்டுக்கும் 2004ஆம் ஆண்டின் இறுதிக்குமிடையில் இந்த விமான ஓடுபாதையைப் புலிகள் நிர்மாணித்திருக்கலாமெனத் தோன்றுகிறது. இக் கால கட்டத்தில் தான் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கோரிவந்தார்கள். இதுவே புலிகளின் வழமையான செயற்பாடுகளாகும். இரட்டை நாக்கினால் பேசும் அவர்களின் தந்திரோபாயம் இது. சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் அதே வேளை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அதிரடிச் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்ற புலிகளின் தந்திரோபாயம் இது.

## சக்தியைப் பெருப்பிக்கத் தொழில் நுட்பப் பயன்பாடு

எக் காலத்திலும், அது யுத்த காலமாகட்டும் அல்லது சமாதான காலமாகட்டும் புதிய இராணுவ நுட்பங்களைப் பெற்றுக்கொள்வது புலிகளின் விருப்பமாகும். இச் செயற்பாட்டுமுறை அவர்களுக்கு மூன்று விதங்களில் உதவுகிறது. போராளிகளின் மனோதிடம் சீர்குலையாமல் இருக்க அது உதவுகிறது. இது அவர்களுக்கு புதிய வழிகளை ஏற்படுத்துவதோடு புதிய செயற்பாட்டு முறைகளுக்கும் வழிவகுக்கிறது. அத்துடன் எதிரியைத் தடுமாற வைக்கும் தந்திரோபாய மற்றும் கேந்திர அதிர்ச்சித் தாக்குதல் நடவடிக்கைகள். சமாதானத் தீர்வொன்று ஏற்படும்போது வர்த்தகப் பரிமாற்றங்களில் சிறந்த பேரம் பேசும் சக்தியையும் இது தரும்.

> **1988ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் செயற்பாடுகளின் போது புலிகளின் மறைவிடங்களிலிருந்து நுண்ரக விமானங்களின் உதிரிப் பாகங்கள், திட்டங்கள், அவை தொடர்பான கை நூல்கள் ஆகியவற்றை நாம் கண்டுபிடித்தோம். பின்னர் இலங்கைப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது, விமான உதிரிப் பாகங்களோடு, புலிகளின் பொறியியல் வேலைத்தளமொன்றினையும் கண்டுபிடித்தனர்.**

விமானத் திறன்கள் தம்மிடம் இருக்க வேண்டுமென்ற இலட்சியம் புலிகளுக்கு என்றுமே உண்டு. 1988ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் செயற்பாடுகளின் போது, புலிகளின் மறைவிடங்களிலிருந்து நுண்ரக விமானங்களின் உதிரிப் பாகங்கள், திட்டங்கள், அவை தொடர்பான கை நூல்கள் ஆகியவற்றை நாம் கண்டுபிடித்தோம். பின்னர் இலங்கைப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது, விமான உதிரிப் பாகங்களோடு, புலிகளின் பொறியியல் வேலைத்தளமொன்றினையும் கண்டுபிடித்தனர். 1988ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தரையிலிருந்து வான்பரப்புக்கு ஏவக்கூடிய ஏவுகணைகளைப் புலிகள் பெற்றுக்கொண்டார்கள். பின்னாட்களில் இலங்கை விமானப் படையணியினருக்கெதிராக புலிகள் இவற்றைப் பயன்படுத்தினர்.

அன்றிலிருந்து புலிகள் ஏவுகணைகளை, ரடார் கருவிகளை, கடற்படைத் திறன்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினர். எனவே சம்பூரணமான ஆயுதப் படையொன்றினைக் கட்டியெழுப்பும் புலிகளின் நோக்கத்துக்கு ஏற்பவே வானப் பறப்புத் திறன்களைப் புலிகள் பெற்றுள்ளனர்.

## தமிழீழ நோக்கு

விமானத் திறன்களைப் புலிகள் பெற்றிருப்பதானது, உலகின் மிகச் சிறந்த [illegible] மேலும் மேம்படுத்துகிறது. நிலத்தில், கடலில், வானப் பரப்பில் சுதந்திரமாகச் செயற்பட வேண்டுமென்ற புலிகளின் நோக்கத்துக்கு, அவர்கள் வடிவமும், விடயங்களும் கொடுக்கின்றார்கள் என்பதையே இது காட்டுகிறது. விமான வசதிகளைப் பெறுவதற்கு பெறுமதிமிக்க நேரம், சக்தி, பணம் ஆகிய தமது வளங்களைப் புலிகள் முதலீடு செய்துள்ளனர். தற்போதைய சமாதான முன்முயற்சிகளுக்கு மத்தியிலும் தமது போராட்ட சக்தியை மேம்படுத்துவதற்காகப் புதிய தொழில் நுட்பங்களைப் புலிகள் பெறுவார்களென்பதோடு, தொழில்நுட்ப மெருகூட்டல்களைத் தொடர்ந்தும் மேற்கொள்வார்களென்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

சுருங்கச் சொல்வதானால், இறுதியில் சமஷ்டி அமைப்பு முறைக்குள் தமிழீழம் அமைக்க அல்லது அதற்கு மாறாகத் தனிநாடு அமைக்கப் போராட்ட சக்தியென்ற வகையில் புலிகள் தொடர்ந்தும் செயற்படுவார்கள். சமஷ்டி வரைமுறையொன்றுக்குள் தீர்வினை ஏற்றுக்கொள்ளப் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் தயாராகவுள்ளாரென்றும் சொல்லப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கது.

## அமெரிக்கத் தடைகளைத் தோற்கடிக்கும் திறமை

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய யூனியனின் தடைகளுக்கு மத்தியிலும் புலிகள் தமது திட்டங்களுக்குத் தேவையான சர்வதேச ரீதியாகப் பெருமளவு நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களைப் பெற்று, அவற்றை இரகசியமாக இலங்கைக்குக் கொண்டுவரக் கூடிய திறமை தமக்குண்டென்பதையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இது இலங்கைக்கோ அல்லது அயல் நாடான இந்தியாவுக்கோ மகிழ்ச்சியான நிலையை ஏற்படுத்தப் போவதில்லை.

ஒவ்வொரு சமாதான காலத்தையும் மேலும் ஆயுதங்கள் வாங்குவதற்கெனப் புலிகள் பயன்படுத்தினார்கள் என்பதையே அவர்களின் வரலாறு காட்டுகிறது. தற்போதைய சமாதான முன்முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து 2004ஆம் ஆண்டில் முதல் அரையாண்டுப் பகுதிக்குள் பதினொரு கப்பல்களில் ஆயுதங்களைப் புலிகள் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு எவ்வித பயமுமின்றி சமாதான முன்முயற்சிகளை மீறி, தமது யுத்தத்திறனைப் புலிகள் வலுப்படுத்துவதானது சர்வதேச சமூகம் அக்கறை எடுக்க வேண்டிய ஒரு விடயமாகும். இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயல் திறனற்ற தன்மையையும் இது எடுத்துக் காட்டுகின்றது. இக் குழுவின் செயற்பாட்டு முறைகள் பயனற்றவை. சக்தியில்லாத இந்தக் குழுவினால் வெறும் அறிக்கைகளை மட்டுமே வெளியிட முடிகிறது.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பான பிரச்சினையில், இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளிடையே காணப்படும் ஐக்கியமின்மை, சமாதான பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதைத் தாமதப்படுத்துகிறது. தனது தாக்குதல் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கு இந்தத் தாமதத்தைப் புலிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படும்போது, நன்கு பேரம் பேசும் நிலையிலிருக்கக்கூடிய வலிமையான புலிகளின் சமாதானப் பேச்சாளர்களைக் கொழும்பு அரசாங்கத் தரப்பினர் சந்திக்க வேண்டியிருக்கும்.

புலிகளின் ஒரேயொரு விமான ஓடுபாதையும் அவற்றின் சில மென்ரக விமானங்களும் மரபு ரீதியான முறையில் பார்க்கையில் இந்தியாவின் பந்தோபஸ்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையப் போவதில்லை. எனினும் இது குறித்து, இந்தியா இரு மட்டங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஒன்று - இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைகள். மற்றது - வளர்ச்சி பெற்றுள்ள புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிரான பந்தோபஸ்து நடவடிக்கைகள்.

இந்திய அமைதிப் படை காலத்திலிருந்தே புலிகள் இயக்கம் மிகவும் கொடூரமான - நன்கு ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட - கொலை இயந்திரமாகத் தோற்றம் பெற்றுள்ளது. எனவே இந்திய வெளிநாட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துவதில் புதிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதுவும் கடற் புலிகள் ஒரு கடற்படைச் சக்தியாகவுள்ள இந்தத் தருணத்தில் - எவ்வித சட்டபூர்வ அந்தஸ்துமில்லாமலேயே இலங்கை, இந்திய கடற்பரப்புக்குள் ஊடுருவக்கூடிய மூன்றாவது சக்தியாகவுள்ள தருணத்தில் - இந்தியா, அதனை வெறுமனே அசட்டை செய்துவிட முடியாது. கடற்புலிகளை இலங்கைக் கடற்படையினரோடு சமப்படுத்திய இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பார்வையில் புலிகள் சட்டபூர்வ அந்தஸ்தைப் பெற்றிருக்கலாம்.

இந்த வகையில் பார்க்கும்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங் வெளியிட்ட சாந்தமான அறிக்கை ஏமாற்றம் தருகிறது. "புலிகளிடம் விமான ஓடுபாதையொன்று இருப்பது குறித்தும், அவர்கள் இரு விமானங்கள் வைத்திருப்பது குறித்தும், மேலும் விமானங்களை அவர்கள் பெறவுள்ளதாக வரும் செய்திகள் குறித்தும் நாம் கவலையடைகிறோம்" என வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங் தெரிவித்துள்ளார். 'த ஹிந்து' பத்திரிகைக்கு மே 7ஆம் திகதி அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்தியாவின் வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண், மே மாதம் பதினொராம் திகதி நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை புதுடில்லியில் சந்தித்தபோது, 'புலிகளின் சர்வாதிகாரத்தை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரத்தோடு சம்பந்தப்பட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இந்திய அரசாங்கம் விரிவான அறிக்கையொன்றினை வெளியிட வேண்டும். புலிகள் பற்றியும் சமஷ்டி இலங்கைக்குள் தமக்குத் தாமே எஜமான்களாகும் தமிழர்களின் உரிமை குறித்தும், சமாதான முயற்சிகள் குறித்தும் விரிவான நிலைப்பாடு தெரிவிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த உப கண்டத்தின் பகுதியில் சமாதானத்துக்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் புலிகள் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள்.

பாதுகாப்பு அம்சங்களைப் பொறுத்தவரை புலிகள் தமது விமானத் திறன்களைப் பயன்படுத்திக் கமாண்டோ தாக்குதல்களை நடத்தக் கூடியளவுக்குத் தமது திறன்களை வளர்த்துள்ளனரென்பதைக் கவனத்தில் கொண்டு நாம் பந்தோபஸ்து முன்முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பயங்கரவாதிகளால் நன்கு செயற்படமுடியுமென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியத் துருப்புகள் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர், இதே புலிகள் இயக்கத்தாலேயே ராஜீவ் காந்தி திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டாரென்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எனவே, முன்னெச்சரிக்கை நடிவடிக்கைகளை இந்தியா எடுக்க வேண்டும். பெருமளவுக்குப் பாவனையில் இல்லாத விமான ஓடு பாதைகளைக் கண்காணிக்கும் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும். விமான உதிரிப் பாகங்கள், விமானத்துக்குத் தேவையான பெற்றோல் ஆகிய கொள்வனவுகள் தொடர்பாகத் தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும். இதற்காக உளவுத் துறையினரைப் பயன்படுத்த வேண்டும். தமிழ் நாட்டிலும் அயல் மாநிலங்களிலும் புலிகளின் விமானமோட்டிகள் பயிற்சி பெறுகிறார்களா என்பதைக் கண்டறிய புலனாய்வுத் துறையினர் பயன்படுத்தப்பட வேண்டும். புலிகளின் இரணைமடுக்குள விமான ஓடுபாதையில் இடம்பெறும் நடவடிக்கைகளை இந்தியா தொடர்ந்தும் கண்கா[illegible] வேண்டும்.

நன்றி: த ஹிந்து


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

நீ -
பள்ளி யாசிரியர்க்குப்
பிள்ளையாய்ப் பிறந்ததால்
தந்தையின் தொழிலைத்
தொடர்ந்து செய்கிறாய்;
ஆம்!
அவர் கற்றுத் தந்தது
படிப்பு!
நீ
கற்றுத்தருவது
நடிப்பு!

உன்
அன்பை
அங்கீகரிக்கிறார்.
நீ -
முதலாளியை
முன்னுக்குக் கொண்டு வந்த
தொழிலாளி;
உன்னால்தான் -
இந்தத் தொழிலாளி
இன்று முதலாளி யானான்.

சத்திய மாயிற்று;
சத்தியத்தைக்
கடைப்பிடித்ததால்தான் -
வெற்றி உனக்கு
சாத்திய மாயிற்று!'
உன்னை -
ஒரு கவிதைக்குள் அடக்குவது
எனக்குக்
கஷ்டமான காரியம்
இருப்பினும்
அதுதான் எனக்கு
இஷ்டமான காரியம்;
காரணம்
என்
இதயத்தில் நீ!'



செல்லம்மாள் -
உன்னை ஈன்றதால்
நல்லம்மாள் ஆனாள்
நீ -
நெருப்பை மூட்டும்வரை
அந்தக்
கருப்பை உன்னால்
கௌரவிக்கப் பட்டது!
அதனால்தான்
பட்டம் பெறாத உன்னை
ஒரு
பட்டதாரி
மணந்து கெண்டாள்!
கட்சியைக் கொண்டு
காசு சேர்க்காத
கண்ணியவான் நீ;
உன்னைக்
கதராடையில் உலவும்
சிகப்புக்
காமராசன் எனலாம்!
அதனால்தான்
மூப்பனார் கூடத்
தன்
தோப்பனார் போல்

நான் உன்னிடம்
அட்சரப் பாத்திரம்
ஏந்தி வந்தேன்;
அதில்
அன்ன மிட்ட
அட்சயப் பாத்திரம் நீ!
உன் அண்ணன்
ராமசாமி
இந்த வாலியை
அம்பு கொண்டு
வீழ்த்தியவ னல்ல;
அன்பு கொண்டு
வாழ்த்தியவன்.
எங்களுக்குத்தான்
நீ -
ஸ்ரீநிவாசன்;
ஆனால்
ராமசாமிக்கு
நீ -
இலக்குவன்!
'தம்பியுடையான்
படைக்கஞ்சான்'
எனும் தமிழ் மொழி
உன்னால்

### அத்தைமடி மெத்தையடி!

ஔவையாரின் பாடல் ஒன்று இவ்வாறு சொல்கிறது.

**ஆலைப் பலாவாக்க லாமோ?**
**அருஞ்சுணங்கன்**
**வாலை நிமிர்த்த வசமாமோ?**

இயலாத காரியம் தான்; இருப்பினும் இறைவன் திருவுள்ளம் அவ்வாறிருப்பின், ஆலும் பலாவாகும்; அருஞ்சுணங்கன் வாலும் நிமிர்ந்து நிற்கும். மனித யத்தனத்தில் எது சாத்தியமில்லை எனக் கருதப்படுகிறதோ அது தெய்வயத்தனத்தில் இமைக்கும் நேரத்தில் ஈடேறிவிடுகிறது.

வாசிக்க வைக்கவும் மனிதனை யோசிக்க வைக்கவும் எத்துணையோ அற நூல்கள் இருக்கின்றன. ஆனால் வாசிக்கும் புத்தகங்களைக் காட்டிலும் வியத்தகு உண்மைகளை வாழ்க்கை போதித்து விடுகிறது.

(தொடரும்......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




**ப**யங்கரமான நோய்களை உண்டாக்கக் கூடிய கிருமிகளை கேஸ்ட்ரோவின் உடலில் ரகசியமாகச் செலுத்தி அவரைக் கொல்ல முடியுமா என்று CIA திட்டமிட்டதும் உண்டு. இந்த நோய்க் கிருமிகள் உடலுக்குள் சென்றதும் உடனடியாக எந்த விளைவும் இருக்காது. காலம் செல்லச் செல்ல இந்த நோய்க் கிருமிகள் வீரியம் அடைந்து ஆளைக் கொன்றுவிடும். எவ்வளவோ முயன்றும் அந்தத் திட்டத்தையும் CIA யினரால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை. இப்போதும் கூட கியூபா நாட்டிலுள்ள கேஸ்ட்ரோவின் எதிர்ப்பாளருக்கு ஏராளமான பண உதவியைச் செய்து அவரை ஒழித்துக் கட்டும் முயற்சிகளில் CIA வினர் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஹார்வர்டு பல்கலைக்கழகம், மாசாசூசெட்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வேலை பார்க்கும் பேராசிரியர்கள் கூட பகுதி நேர ஊழியர்களாக CIA வுக்காக வேலை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களில் யாருக்கு CIA வுடன் தொடர்பு இருக்கிறது என்று கண்டுபிடிப்பது கஷ்டம். 1960இல் கலிஃபோர்னியாவிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று கல்வி நிறுவனங்களுக்கும் CIA விற்கும் இடையிலிருந்த உறவை அம்பலப்படுத்தியது. தெற்கு வியட்நாமில் CIA செயல்படுவதற்கு மிச்சிகன் பல்கலைக்கழகம் முழு ஒத்துழைப்பைக் கொடுத்ததாக அந்தப் பத்திரிகை குற்றம் சாட்டியது. 1955 இலிருந்து 59 வரை விசேஷ பொலிஸ் பயிற்சியை CIA நிறுவனத்திற்காக இந்தப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்க பல்கலைக்கழகங்களில் சிலவற்றின் விசேஷ விஞ்ஞான அமைப்புகளுக்கும் CIA நிதியுதவி செய்வதாகவும் சொல்லப்படுகிறது.

### கல்வி நிறுவனங்கள் தயாரிக்கும் உளவாளிகள் :

அமெரிக்காவில் தேசிய மாணவர் கழகம் என்கிற ஒரு அமைப்பு செயல்பட்டது. இதற்கான நிதியுதவியினை CIA அளித்தது. இந்தக் கழகம் பதினைந்து ஆண்டுகள் நடைபெற்றது. இந்தக் கழகத்தின் முக்கியமான பணி என்னவென்றால் நாடெங்கும் உள்ள மாணவ சமுதாயத்தில் கம்யூனிஸ ஆதரவு மாணவர்கள் யாராவது உருவாகிறார்களா என்று கண்டுபிடிப்பதாகும். இந்தக் கழகம் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விசேஷமான பயிற்சியளித்தது. தவறான தகவல்களைக் கொடுத்தாவது மாணவச் சமுதாயத்தினரிடையே கம்யூனிஸ எதிர்ப்பு அபிப்பிராயத்தை உருவாக்குவதே பயிற்சி பெற்றவர்களின் வேலை.

CIA நிதியுதவி பெறாத அமைப்புகளே அமெரிக்காவில் இல்லை என்று சொல்லி விடலாம். தொழிற்சங்கங்கள், செய்தி நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள், கலாசார அமைப்புகள், சங்கீத குழுக்கள் என்று பலவற்றிற்கும் CIA நிதியுதவி வழங்குகிறது. இந்தப் போக்கு எல்லை மீறிப் போனபோது, அமெரிக்காவிலேயே இது குறித்து கடுமையான கண்டனங்கள் எழுந்தன. இது பற்றிய விசாரணை நடத்த அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த லிண்டன் ஜான்சன் ஏற்பாடு செய்தார். இது வெறும் கண்துடைப்பு வேலை என்பது எல்லோருக்குமே தெரியும். விசாரணையின் முடிவு என்ன தெரியுமா? CIA வுக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்பதாகும். அரசாங்க ஆதரவு நடவடிக்கைகளைத் தவிர வேறு தவறான எந்தக் காரியத்திலும் CIA ஈடுபடவில்லை என விசாரணை அறிக்கை தீர்ப்பு வழங்கியது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# அமெரிக்காவில் குறிவைக்கப்படும் கர்ப்பிணிகள்!

**அ**மெரிக்காவில் கர்ப்பிணிப் பெண்கள் மிக அதிகளவில் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் மிசூரி மாநிலத்தில் வைத்து பொபி எனும் 7 மாத கர்ப்பிணிப் பெண் கொலை செய்யப்பட்டார். இவரது வயிற்றில் இருந்த குழந்தை பின்னர் வயிற்றைக் கிழித்து எடுக்கப்பட்டு கடத்தப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.



கொலை செய்யப்பட்ட பொபி

29 வயதுடைய தாரா வெம்பர்ஸ் கடந்த ஜூன் மாதம் வட கெரோலினா பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டார். 16 வயதுடைய ரெபேக்கா ஜோன்சன் தனது 'பிக்கப்' வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது ஒக்லஹாமாவில் ஒரு பாழடைந்த வீதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். எனா டியாஸ் எனும் பெண் தனது தோழி ஒருவரை ஏற்றிவருவதற்காக காரில் சென்று கொண்டிருந்த சமயம் சுட்டுக் கொல்லப்பட்டார்.


இக் கொலைகள் அனைத்திலும் குறிப்பிடத்தக்கதொரு விஷேட அம்சத்தைக் காணமுடிகின்றது. அதாவது இப் பெண்கள் அனைவருமே கர்ப்பம் தரித்து இருந்தபோதே கொல்லப்பட்டுள்ளார்கள். கடந்த பல வருடங்களாக கர்ப்பிணிகள் கொலை செய்யப்படுகின்ற சம்பவங்கள் அமெரிக்காவில் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனினும் கொலையாளிகள் உரிய வகையில் இன்னமும் இனங் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஐக்கிய அமெரிக்க குடியேற்றங்களான மேரிலேண்ட், மிசிசிபி, கலிபோர்னியா, கென்சாஸ் போன்ற பகுதிகளில் இவ்வாறான கொலைகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

24 வயதுடைய ஜெனி மெக்மேன் அவரது வீட்டில் வைத்தும் 29 வயதுடைய கெலி ரெப் அவரது வீட்டு படுக்கையறையிலும் வைத்துக் கொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் ஓரிசன் மாநிலத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகளாவர்.


பொபி கொலையின் சந்தேகநபர்

'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை மேற்கொண்டுள்ள ஆய்வின் பிரகாரம் 1990ஆம் வருடம் முதல் 2004ஆம் வருடம் வரை படிப்படியாக 1367 கர்ப்பிணிகள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் புதிதாக குழந்தை பிறந்த பெண்களும் அடங்குவர். எனினும் இத் தொகையானது இதைவிட அதிகரிக்கக் கூடுமென சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



அங்குள்ள காவல் துறையினர்க்கு இது தலையிடி தரக் கூடிய ஒரு நிகழ்வாக இருந்து வருகிறது. இச் சம்பவங்கள் தொடர்பில் சரியான தகவல்களை ஆராய்ந்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர். நீதிமன்றங்களில் முன்வைக்கப்பட்ட வழக்குகளில் கொலைசெய்யப்பட்ட பெண்களின் கணவன்மாரும், காதலர்களும் என மரண தண்டனை விதிக்கப்பெற்றுள்ளார்கள்.

பல்வேறுபட்ட மனித சமூகங்கள் மற்றும் சமூக நிலைகளை வைத்தே இக் கொலைகள் இடம்பெறுவதாக 'வொஷிங்டன் போஸ்ட்' கூறுகின்றது. இதன்படி பார்க்கும்போது கொலை செய்யப்பட்டவர்களில் நூற்றுக்கு 67 வீதமானவர்கள் துப்பாக்கிகளை உபயோகித்தே கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் படுக்கையறை, முற்றம், வராந்தா போன்ற இடங்களில் வைத்தே கொல்லப்பட்டுள்ளதுடன் இவர்களது சடலங்களை கணவர்கள் அல்லது காதலர்கள் தான் முதன் முதலில் கண்டுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

ஐக்கிய குடியரசு மேற்கொண்டுள்ள ஓர் ஆய்வின்படி கொலை செய்யப்பட்டுள்ள பெரும்பாலான கர்ப்பிணிகள் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிய வருகின்றது. இவர்களது ஆய்வின்படி மேரிலேண்ட் மாநிலத்தில் மாத்திரம் கடந்த 6 வருட காலகட்டத்தினுள் 50 முதல் 247க்கு இடைப்பட்ட கர்ப்பிணிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

"இக் கொலைகள் அநேகமாக எவரும் எண்ணியும் பார்க்காத வேளைகளில் நினைத்தும் பார்க்காத பகுதிகளில், எதிர்பாராதவிதமாக இடம் பெறுவதால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதானது கடினமானதொரு காரியமாகவுள்ளதாக" ஐக்கியக் குடியரசின் பேச்சாளர் ஒருவர் கூறுகின்றார்.

2002ஆம் வருடம் கிறிஸ்மஸ் தினத்துக்கு 5 நாட்கள் முன்பதாக எட்டு மாதக் கர்ப்பிணியான லெசி பீற்றர்சன் என்பவர் காணாமற் போய், பின்னர் அவரது சடலம் 2003ஆம் வருடம் ஏப்ரல் மாதம் சென்ட் பிரான்சிஸ்கோ துறைமுகத்தின் அருகில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது. இவர் காணாமற்போய் சுமார் 4 மாதங்கள் வரையில் எங்கு இருந்தார்? என்ன செய்தார்? என்பது பற்றி எவருக்கும் தெரியாது. எனவே இவ்வாறான கர்ப்பிணிகள் இன்னும் எத்தனைப் பேர் கடத்தப்பட்டுள்ளனர் அல்லது காணாமற் போயுள்ளனர் என்பது பற்றி எவருக்கும் கூற இயலாது.

ஐக்கிய குடியரசின் பெடரல் புலனாய்வுத் துறையும் இக் கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக விசேட பிரிவொன்றை உருவாக்கியுள்ள போதும் இவர்களாலும் அதில் வெற்றி காண முடியாதுள்ளது.

அநேகமாக இக் கொலைகள் தொடர்பில் கொலை செய்யப்படுகின்ற பெண்களின் கணவர்கள் அல்லது காதலர்களே சந்தேகத்துக்கு உள்ளாகின்றனர். இதில் கூட நியாயமான காரணங்கள் இல்லாமலில்லை.

8 மாத கர்ப்பிணியான க்வினிசா தோமஸ் தனது வீட்டுக்கருகில் இருந்த கடையொன்றுக்கு நடந்து சென்று கொண்டிருந்த சமயம் தலையில் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

இக்கொலை அவரது முன்னாள் காதலனால் மேற்கொள்ளப்பட்டதென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

'வொஷிங்டன் போஸ்ட்' கூறும் வகையில் 2002ஆம் வருடத்தில் மாத்திரம் அமெரிக்காவில் உள்ள 24 மாநிலங்களில் 72 கர்ப்பிணிப் பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது குடும்ப உறவினர்களை விசாரித்ததிலிருந்து கொலை செய்யப்பட்ட பெண்களுக்குக் குடும்பப் பிரச்சினைகள் இருந்து வந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் கலாசாரம் பாரியளவில் வீழ்ச்சி பெற்று வருவதனாலும், பொருளாதார சீர்கேடுகளினாலும் ஏற்படுகின்ற குடும்பப் பிரச்சினைகள் காரணமாக, இப் பெண்கள் கணவர்களினால் அல்லது காதலர்களினால் கொல்லப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதே நேரம் கொல்லப்படுகின்ற கர்ப்பிணிப் பெண்களில் பெரும்பாலானவர்கள் குறைந்த வயதினையுடையவர்களாகவே காணப்படுகின்றனர். வாழ்க்கை அனுபவங்கள் குன்றிய நிலையில், குறை வயதில் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு கர்ப்பம் தரிப்பதன் காரணமாகவும் இப் பெண்கள் தங்களது காதலர்களால் கொல்லப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே அமெரிக்க குடும்ப அமைப்பானது மிக விரைவில் வீழ்ச்சியை நோக்கிச் செல்வதையே இச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்காவின் சமூக, நலன்புரி நிறுவனங்களின் புள்ளிவிபர பிரசுரம் ஒன்றின்படி 1,60,000க்கும் 3,20,000க்கும் இடைப்பட்ட கர்ப்பிணிகள் தங்களது கணவர்களால் அல்லது காதலர்களால் பயங்கரமான வகையில் உடல் ரீதியிலான சித்திரவதைகளுக்கு ஆளாகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. இதன் இறுதிக்கட்ட நடவடிக்கையாக இப் பெண்கள் கொல்லப்படலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

20

**ச**ங்கரமடம் அமைந்துள்ள காஞ்சிபுரத்திலும் மற்றும் கும்மிடிப்பூண்டியென்ற தொகுதியிலும் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. வெற்றியீட்டியுள்ளது. சங்கரராமன் கொலை தொடர்பாக சங்கராச்சாரியார்கள் இருவரும் கைது செய்யப்பட்ட விவகாரம் காஞ்சி இடைத் தேர்தலில் பெரும் தேர்தல் உத்தியாகவும் கையாளப்பட்டது. தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராகக் கொதித்துக் கொண்டிருந்த காஞ்சி சங்கர மடமும், மடத்து விசுவாசிகளும் ஜெயலலிதாவின் கொட்டத்தை அடக்குவோமென்ற பாணியில் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதே வேளை சங்கரராமனின் நண்பர்களோ அ.தி.மு.க.வுக்காக களமிறங்கிச் செயலாற்றினார்கள்.

சங்கரராமன் கொலை வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றும்படி கோரி உச்ச நீதிமன்றத்தில் ஜெயேந்திரர் தரப்பு மனுத் தாக்கல் செய்திருக்கிறது. இந்த நிலையில்தான் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுந்தரேச ஐயர், ரகு, அப்பு, கதிரவன் ஆகியோர் உள்ளிட்ட பதினொரு பேரை காஞ்சிபுரம் இடைத்தேர்தலுக்குச் சில நாட்கள் முன்னதாகவே குண்டர் தடுப்புச் சட்டத்திலிருந்து விடுவித்திருக்கிறது சென்னை உச்ச நீதி மன்றம். குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் ஒரு வருட காலத்துக்கு ஜாமீனில் வெளியே வர முடியாது. பொது அமைதிக்குப் பங்கமேற்படும் விதத்தில் யாராவது நடந்து கொண்டால் மட்டுமே குண்டர் சட்டத்தின் கீழ் அவர்களைக் கைது செய்ய முடியும். எனவே இந்தப் பதினொரு பேர் மீதும் குண்டர் சட்டம் ஏவப்பட்டது தவறு என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

சங்கரராமன் கொலை நடந்த பிறகு, பொது அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டதென்பதற்கோ மக்களின் வாழ்க்கை முறை பாதிக்கப்பட்டதென்பதற்கோ எந்த விதமான ஆதாரங்களையும் காஞ்சிபுரம் கலெக்டர் முன் போலிஸ் சமர்ப்பிக்கவில்லை. கொலைக்குப் பிறகு அப் பகுதியிலே சகஜ நிலை பாதிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. இவ்வாறான நிலையில் குண்டர் தடைச் சட்டத்தைப் பாய்ச்ச கலெக்டர் எப்படி உத்தரவிட்டாரென்பது தெரியவில்லை என்று நீதிபதிகள் தெரிவித்தனர். நீதிபதிகள் தமது தீர்ப்புக்கு ஆதாரமாகப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு வழக்கை மேற்கோள் காட்டினார்கள். தாமரைக்கனி மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கலையரங்கமொன்றில் நடைபெற்ற கூட்டத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சரொருவர் மீது பெற்றோல் நிரப்பிய புட்டியை வீச முயன்றாரென்று குற்றஞ்சாட்டப்பட்டுக் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகியிருந்தார் தாமரைக்கனி. இந்தக் கைதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் தாமரைக்கனியின் மனைவி. கலையரங்கத்தில் நடந்த இந்தச் சம்பவத்தால் கூட்டம் ஆரம்பிக்கக் கொஞ்ச நேரம் தாமதமானது. மற்றப்படி பொது அமைதிக்கு எவ்வித பங்கமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனவே தாமரைக்கனி மீது குண்டர் தடுப்புச் சட்டத்தை ஏவியது தவறென்று தெரிவித்த நீதிபதிகள், குண்டர் தடுப்புச் சட்டத்திலிருந்து தாமரைக்கனியை விடுவித்திருந்தனர்.

காஞ்சிபுரம் இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது எதிர்க்கட்சிகள் சங்கரராமன் கொலை வழக்குப் பற்றி எதுவும் பேசாவிட்டாலும், சங்கராச்சாரியார்கள் கைது செய்யப்பட்டமையைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தினார்கள். ஜெயலலிதா தரப்பினரும் சங்கரராமனின் நண்பர்களையும் உறவினர்களையும் நன்கு பயன்படுத்தினார்கள். சங்கரராமன் நிர்வாகியாகப் பணிபுரிந்த காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயப் பகுதிக்கே முதல்வர் ஜெயலலிதா சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவு திரட்டும் வேலைகளிலும் ஈடுபட்டார். வரதராஜப் பெருமாள் கோயிலில் பணிபுரியும் ராஜம் பட்டர், சம்பத்குமார் பட்டர் ஆகியோர் சங்கரராமனின் நண்பரான கண்ணன் என்பவரோடு சேர்ந்து முதல்வரை வரவேற்றிருக்கின்றனர். விஷ்ணு காஞ்சி ஏரியாவில் வாழும் பிராமண சமூகத்தவர்களும் முதல்வரை வரவேற்கத் திரண்டிருந்தனர்.

தி.மு.க. அணிக்கு ஜெயேந்திரர் மறைமுக ஆதரவு காட்டியிருக்கிறாரென்பது காஞ்சிபுரத்தில் நிலவும் குற்றச்சாட்டு. சென்னை, பாரதிய வித்யா பவனில் கடந்த எட்டாம் திகதி வேதவியாசர் அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவில் பங்குபற்றிய ஜெயேந்திரர் தனது உரையில் அரசியல் 'பொடி வைத்து'ப் பேசினாரென்று குற்றஞ்சாட்டப்படுகிறது. ஜெயலலிதா மீது கொண்டிருக்கும் மனக் குமுறல், ஆத்திரம் ஆகியவற்றின் காரணத்தால் சூசகமான முறையில் அ.தி.மு.க.வுக்கு எதிரான பிரசாரத்தில் ஜெயேந்திரர் ஈடுபட்டார் என்கின்றனர் அவரை எதிர்ப்பவர்கள்.

"வருகிற பதினான்காம் திகதிதான் ஆதிசங்கரர் ஜெயந்தி. ஆனால், முன்கூட்டியே விழாவை நடத்துகிறார்கள். நல்ல காரியத்தை இன்றே, இப்பொழுதே நடத்த வேண்டும் என்பார்கள். அதற்காகச் செய்திருக்கின்றீர்கள். ஆனால் 14ஆம் திகதியை மறந்துவிடக் கூடாது. நல்ல வாசம் கொஞ்சமாவது இருக்க வேண்டும். அதற்காக நல்ல காரியங்களில் ஈடுபட வேண்டும்" என்று பேசியிருக்கிறார் ஜெயேந்திரர்.

காஞ்சிபுரம் இடைத்தேர்தல் 14ஆம் திகதி நடைபெறுவதை மனதில் வைத்தே, 14ஆம் திகதியை மறந்துவிடக் கூடாது என்று ஜெயேந்திரர் அழுத்திச் சொல்லியிருக்கிறார். இதே வேளை அ.தி.மு.க.வுக்கெதிரான தேர்தல் பிரசார வேலைகளில் தனது நம்பிக்கைக்குரியவர்களை ஜெயேந்திரர் இறக்கியிருந்தாரென்றும் பேசப்படுகிறது. சங்கராச்சாரியார்களைக் கைது செய்த ஒரே காரணத்துக்காகவே காஞ்சிபுரத்தில் ஜெயலலிதாவுக்கு ஆதரவாகத் தீவிர பிரசாரத்தில் இறங்கியிருந்தார் திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி. திராவிடக் கழகத்தினர் தெருத் தெருவாகப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். "இது சங்கராச்சாரியார்களுக்கும் பேரறிஞர் அண்ணாவுக்குமிடையில் நடைபெறும் தேர்தல்" என்று புது விளக்கம் கொடுத்திருக்கிறார் திராவிடக் கழகப் பேச்சாளரான 'பெரியார்' செல்வம்.

அகில இந்திய இலட்சிய தி.மு.க. தலைவர் விஜய் டி இராஜேந்திரரோ, அடுக்கு மொழியில் ஜெயலலிதாவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்திருக்கிறார். "சட்டத்தின் முன் சந்தனக் கடத்தல் வீரப்பனும் ஒண்ணுதான், சங்கராச்சாரியார்களும் ஒண்ணுதான்னு நிரூபித்தவர் ஜெயலலிதா. கலைஞருக்குச் சங்கரமடத்துச் செக்கியூரிட்டியைக் கைது செய்யும் துணிச்சல் கூடக் கிடையாது. சங்கராச்சாரியாரைக் கைது பண்ணினது ஜெயலலிதாதான். ஆனா, கைது பண்ணச் சொன்னது யாரு? கைது பண்ணத் தூண்டினது யாரு? பிள்ளையைக் கிள்ளிவிட்டது யாரு?.... இதையெல்லாம் செய்த கலைஞர் இப்ப தொட்டிலை ஆட்டுறாரு.

ஐயா, நான் ஆன்மீகவாதி. நான் சொல்றேன். ஜெயிலுக்குப் போனது ஜெயேந்திரரோட தலை விதி. இதுக்காக ஜெயலலிதா செய்யவில்லைச் சதி. இதையும் அரசியலாக்குவது கலைஞரின் கெட்ட மதி" என்று வெளுத்து வாங்கியிருக்கிறார் டி.இராஜேந்தர்.

காஞ்சிபுரத்தில் பிராமண சமூகத்தவர் அதிகமாக வாழும் பகுதிகளில் சங்கரராமனின் நண்பர்கள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகத் தெருத் தெருவாகப் பிரசார வேலைகளில் ஈடுபட்டனர். வரதராஜப் பெருமாள் கோயில், யதோத்காளி கோயில், வைகுண்டப் பெருமாள் கோயில், பச்சை வண்ணத் தெரு, பவள வண்ணத் தெரு, எல்லப்ப நகர், சின்னக் காஞ்சிபுரம், பெரியார் நகர், திருப்புட்குழி ஆகிய பகுதிகளில் பிராமண சமூகத்தினரே அதிகமாக வாழ்கின்றனர். சங்கராச்சாரியார்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஜெயலலிதா மீது பிராமணர்கள் கோபம் கொண்டாலும் தி.மு.க.வுக்கு வாக்களிக்க மாட்டார்களென்று இவர்கள் பிரசாரம் செய்தார்கள்.

சங்கராச்சாரியார்கள் கைது விவகாரம் காஞ்சிபுரம் இடைத்தேர்தலில் ஒரு பிரச்சினையாக்கப்பட்ட போதும், முதல்வர் ஜெயலலிதாவின் கட்சி அங்கு வெற்றிவாகை சூடியது பெரிய விடயமே என்கின்றனர் அத்தொகுதி மக்கள். இதனையே ஜெயலலிதா இவ்வாறு சொல்கிறார். "காஞ்சிபுரத்தில் தி.மு.க. தலைமையிலான ஏழு கட்சிகளையல்ல எட்டுக் கட்சிகளை எதிர்த்து வென்றோம். அந்த எட்டாவது கட்சி எதுவென்பது எல்லோருக்குமே தெரியும். காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரரே இந்த எட்டாவது கட்சி என்பதைச் சொல்லாமலேயே புரிந்து கொள்ள முடியும்".

காஞ்சி சங்கரமடத்தை தனது பொறுப்பில் எடுக்கத் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டதாகப் பரவலாகச் செய்திகள் அடிபட்டன. ஏனோ திடீரென்று இந்த முயற்சிகள் நின்றுபோனதாகவும் கூடப் பேச்சுக்கள் அடிபட்டன. இது தொடர்பாக அவசர சட்டமொன்றினை இயற்றிய தமிழக அரசு, அதனை ஒப்புதல் பெறுவதற்காகத் தமிழக கவர்னரிடம் அனுப்பி வைத்ததாம். அந்தச் சட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பதா? இல்லையா? என்று திண்டாடிக்கொண்டிருந்தாராம் கவர்னர். இது தொடர்பாகப் பிரதமரிடமும், செல்வாக்குமிக்க மத்திய உள்துறை அமைச்சு அதிகாரியொருவரிடமும் ஆலோசனை கேட்டுவிட்டு ஒப்புதல் கையெழுத்து வைக்காமலேயே சட்ட கோவையை தமிழக அரசுக்குத் திருப்பி அனுப்பிவிட்டாராம் கவர்னர்.


சென்னை வித்யா பவனில் நடைபெற்ற ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவில் ஜெயேந்திரர் உரையாற்றுகிறார்

**(தொடரும்.....)**

**காஞ்சிபுரத்திலிருந்து**
**அருண் கண்ணன்**

## காவித் தலைவரும் காஞ்சித் தலைவியும் இடைத்தேர்தலில் சிலேடை மோதல்



கடந்த சில நாட்களுக்கு முன்னர் காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி ஆகிய இரு தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் தி.மு.க. தலைமையில் போட்டியிட்ட ஏழு கட்சிக் கூட்டணியை முறியடித்து, தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. சங்கராச்சாரியார் ஜெயேந்திரர், தி.மு.க.வுக்குச் சார்பாகச் சூசகமாகப் பிரசாரம் செய்தார். சங்கராச் சாரியார்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் காஞ்சிபுரத் தேர்தலில் எதிரொலித்தது.

வேதவியாசர் அறக்கட்டளை, தேர்தலுக்கு ஆறு நாட்கள் முன்னராகச் சென்னை வித்யா பவனில் நடத்திய ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவில் ஜெயேந்திரர் கீழ்க்கண்டவாறு பேசியிருக்கிறார். "வருகிற பதினான்காம் திகதிதான் ஆதிசங்கரர் ஜெயந்தி. ஆனால் முன்கூட்டியே விழாவை நடத்துகின்றார்கள். நல்ல காரியத்தை இன்றே, இப்பொழுதே நடத்த வேண்டும் என்பார்கள். அதற்காகச் செய்திருக்கின்றீர்கள். அதற்காகப் பதினான்காம் திகதியை மறந்துவிடக் கூடாது" என்று கூறியிருக்கிறார் ஜெயேந்திரர். 14ஆம் திகதி நடைபெற்ற காஞ்சிபுரம் இடைத் தேர்தலை மனதில் வைத்தே இவ்வாறு ஜெயேந்திரர் பேசியிருக்கிறார். ஜெயேந்திரரின் இந்தச் சிலேடைப் பேச்சுக்கு தேர்தலில் வெற்றி கிட்டிய பின்னர் பதிலடி கொடுத்திருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா.

"காஞ்சிபுரத்தில் தி.மு.க. தலைமையிலான ஏழு கட்சிகளையல்ல, எட்டுக் கட்சிகளை எதிர்த்து வென்றோம். அந்த எட்டாவது கட்சி எதுவென்று எல்லோருக்குமே தெரியும்" என்று சிலேடையாகவே கூறியிருக்கிறார் ஜெயலலிதா. இந்த எட்டாவது கட்சி ஜெயேந்திரர்தான்.

*22ஆம் பக்கத் தொடர்ச்சி.....*

பல்லுக்குப் பல்! பழிக்குப் பழி! இரத்தத்திற்கு இரத்தம் என்ற அடிப்படையில் நாமும் இறங்கி எமது மக்களின் சமாதானக்கனவுகளை உடைத்துப்போட ஈ.பி.டி.பி. ஒரு போதும் எண்ணியதில்லை! நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் மக்கள் நலன் சார்ந்த எமது ஜனநாயக வழிமுறையினை பலவீனமாக யாரும் கருதுவீர்களேயானால் அது அவர்களது அறியாத்தனம் என்றே கருத இடமுண்டு! இந்த யதார்த்த நிலைமைகளை உணர்ந்து எமது மன உணர்வுகளை இந்தச் சபை புரிந்து கொள்ளும் என நாம் நம்புகின்றோம்.

புலிகள் பொதுக்கட்டமைப்பு குறித்த கோரிக்கையினை எழுப்பி வருகிறார்கள். உண்மையில் புலிகளின் உள்நோக்கம் இதில் எதுவாக இருக்கும் என உலகறிந்த விடயம்! ஆனாலும் சுனாமியால் பாதிக்கப்பட்டு இன்னமும் துயரப்பட்டிருக்கும் மக்களின் நலன் குறித்து நாம் இது விடயத்தில் ஒரு தெளிவான நிலைப்பாட்டினை எடுத்திருக்கின்றோம்!


இன அடிப்படையிலும் அரசியல் அடிப்படையிலும் பன்மைத்துவம் பேணப்பட வேண்டும் என்றும் சகல மட்டங்களிலிருந்தும் அதற்கான ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் பொதுக் கட்டமைப்பு குறித்து எமது மாற்று யோசனைகளை நாம் சமர்ப்பித்திருக்கிறோம்! பொதுக் கட்டமைப்போடு நின்று விடாமல் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையும் தொடரப்படவேண்டும் என நாம் வலியுறுத்தியுள்ளோம்!

ஜனநாயக பன்மைத்துவ அம்சங்களுடனான பொதுக் கட்டமைப்பு என்பது அரசியல் தீர்வு நோக்கிய நகர்வுக்கான ஒரு படிக்கல்லாக அமையும் என நாம் நம்புகிறோம்!

ஆகவேதான் பாதிக்கப்பட்ட எம் தேசத்து மக்களின் துயர் துடைப்பதற்காகவும், இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய ஆரம்ப நகர்வுக்காகவும் ஜனாதிபதியின் சமாதான எண்ணங்களுக்குப் பலம் சேர்ப்பதற்காகவும் நாம் இந்த விடயத்தை ஆதரித்து நிற்கின்றோம்!

தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்குவதும், தமிழ் பேசும் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கான ஏற்பாடுகளை மிகத் திறந்த மனதுடன் செய்வதன் ஊடாக, தமிழ் பேசும் மக்களை வெற்றி கொள்வதுதான், புலிகளை வழிக்குக் கொண்டு வருவதற்கான ஒரே வழியாகும். இப்பணியை நாம் அனைவரும் ஒன்றுபட்டு மேற்கொள்வதற்கு உங்களுக்கு நான் எமது கட்சியின் சார்பிலும், தமிழ் பேசும் மக்கள் சார்பிலும் அழைப்பு விடுக்கிறேன்!

அரசியல் தீர்வு என்பது புலிகளுக்கு அல்ல! அல்லது வேறு யாருக்கும் அல்ல! அது துயரப்படும் மக்களுக்கு மட்டுமே! ஒடுக்கப்பட்ட எமது மக்களுக்கு மட்டுமே! மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் அதை ஏற்க தயாராகட்டும் என்பதை எமது மக்கள் சார்பாக தெரியப்படுத்தி எனது உரையினை முடிக்கிறேன்!






யாதுமாகி நின்றாய் - காளி எங்கும் நீநி றைந்தாய்;
தீது நன்மை யெல்லாம் - காளி! தெய்வ லீலை யன்றோ!
பூத மைந்தும் ஆனாய் - காளி! பொறிக ளைந்தும் ஆனாய்!
போத மாகி நின்றாய் - காளி! - பொறியை விஞ்சி நின்றாய்;

சுப்பிரமணிய பாரதியார்-

# மனிதனும் செருப்பும்




கட்டிலில் படுத்திருந்தான் அந்த மனிதன். வீட்டின் மூலையில் கிடந்த செருப்பானது அந்த மனிதனின் காலைப் பார்த்தது.

"காலே நான் நெடுநாட்களாக இந்த வீட்டின் மூலையிலேயே முடங்கிக் கிடக்கின்றேனே! என் மீது உன்னுடைய கருணைப் பார்வை படாதா? என்னை நீ அணிந்து கொண்டு வெளியே செல்!" என்றது செருப்பு.

உடனே காலானது செருப்பைப் பார்த்து சிரித்தது.

"செருப்பே! நீ சற்று பழையதாகி விட்டதால்தான் உன்னை அணிந்தபடி வெளியே செல்ல என் மனம் இடம் கொடுக்கவில்லை. உன்னை எப்போது அணிந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேனோ அப்போது அணிந்து கொள்கிறேன். அதுவரையிலும் நீ மூலையிலேயே அடங்கியிரு!" என்றது.

"கருணை மிக்க கால்களே. ஒரேயடியாக என்னை ஓரங்கட்டி விடாதீர்கள். உங்களின் அன்பின் பார்வையை என்மீதும் வீசுங்கள். என்னை அணிந்தபடி வெளியே செல்லுங்கள். ஒரேயறையில் நான் இருந்து கொண்டிருப்பதால் எனக்கு பைத்தியம் பிடித்துவிடும் நிலை ஏற்படுகிறது. தயவு செய்து என்னைப் புரிந்துகொண்டு என் மீது கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்றது செருப்பு.



"செருப்பே! நீ என்னதான் அழுதாலும், உன் மீது நாங்கள் கருணை காட்ட முடியாது. உன் தலை விதியை யாரால் மாற்ற முடியும். நீ இப்படியே மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டியதுதான்" என்றன கால்கள்.

இதனைக் கேட்ட செருப்பு வேறு எதுவும் பேசாமல் அமைதியாகி விட்டது.

இனிமேல் இந்த மனிதனின் கால்களிடம் பேசுவதால் நமக்கு எந்தப்பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே நாம் வேறு மனிதனின் கால்களை நாடிச்செல்வதுதான் சரியென முடிவு செய்தது.

'இந்த இடத்தைவிட்டு நாம் எப்படியாவது வெளியே செல்ல வேண்டுமே' என்று நினைத்தது செருப்பு.

அப்போது அந்த வீட்டில் உள்ள பூனையானது செருப்பின் அருகே வந்தது.

"பூனையே! பூனையே! நீ எனக்கொரு உதவி செய்கிறாயா?" என்று கேட்டது செருப்பு.

உடனே பூனையும் "செருப்பே! நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டது.

"பூனையே! நான் நெடுநாட்களாக இந்த மூலையில் முடங்கிக் கிடக்கின்றேன். எனக்கு சுதந்திரம் வேண்டும். எனக்கு சுதந்திரம் தர உன்னால் முடியும். நீ என்னை வாயால் கவ்வி வெளியே சாலையில் போட்டுவிட்டால் நான் வேறு மனிதர்களின் கண்களில் தென்பட்டு அவர்களின் கால்களில் மாட்டப்பட்டு எங்கோ சென்று விடுவேன். என் பொருட்டு நீ இந்த உதவியைச் செய்தால் உனக்கு கண்டிப்பாக புண்ணியம் கிடைக்கும்" என்றது செருப்பு.

செருப்பைப் பார்த்ததும் பூனைக்கு பரிதாபம் ஏற்பட்டது.

"செருப்பே! நீ கவலைப்படாதே; உன்னுடைய நிலைமை எனக்குப் புரிகிறது. ஒருவர் மூலையிலேயே முடங்கிக் கிடந்தால் அவர் மனம் எந்த அளவுக்கு வேதனையடையும் என்பதை நான் நன்கு அறிவேன். எனவே உன்னை இப்போதே கவ்வி எடுத்துச் சென்று சாலையில் போட்டு விடுகிறேன்" என்றது பூனை.

அதனைக் கேட்டதும் செருப்பு மகிழ்ச்சியடைந்தது. பூனையானது செருப்பை தன் வாயில் கவ்வியவாறு வீட்டின் வெளியே வந்தது. பின்னர் சாலையில் கொண்டு போட்டது.

செருப்பு நன்றியோடு பூனையைப் பார்த்தது. "பூனையே! உன்னை நான் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. என் பொருட்டு மனம் இரங்கிய உன்னை நான் என்றுமே மறக்கமாட்டேன்" என்று பூனையைப் பாராட்டியது செருப்பு.

செருப்பின் பாராட்டைக் கேட்டும், கேட்காதது போல் சென்றது பூனை.

செருப்பு சாலையின் ஓரத்தில் கிடந்தது 'யாராவது தன்னைப் பார்க்க மாட்டார்களா? அவர்களோடு சென்று விடலாமே!' என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது செருப்பு.

நீண்ட நேரமாகியும் யாரும் அந்த செருப்பைக் கவனிக்கவில்லை. செருப்பு மிகவும் கவலையோடு காணப்பட்டது.

'நமக்கு அதிர்ஷ்டம் இல்லையென்று தெரிகிறது. அதனால் தான் யாருமே நம்மைக் கவனிக்கவில்லை. இல்லையென்றால் நாம் எவர் காலிலாவது மாட்டப்பட்டுச் சென்றிருக்கலாம்!' என்று நினைத்தது.

சிறிது நேரத்தில் எங்கோ சென்ற பூனையானது மீண்டும் திரும்பி அந்தப்பக்கத்தில் வந்தது.

செருப்பைக் கண்ட பூனை திடுக்கிட்டது. "செருப்பே உன்னை யாருமே இன்னும் அணிந்து கொள்ளவில்லையா?" என்று அக்கறையோடு கேட்டது.

"ஆமாம் பூனையே என்னை இதுவரையிலும் யாருமே அணிந்து கொள்ளவில்லை. எனக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை" என கவலையுடன் கூறியது செருப்பு.

அப்போது சாலையை ஒட்டிய வீட்டில் தபால்காரர் தான் அணிந்திருந்த செருப்பை வெளியே கழற்றி விட்டு வீட்டின் உள்ளே கடிதத்தைக் கொடுக்கச் சென்றார்.

பூனையானது வீட்டின் வெளியே கிடந்த தபால்காரரின் செருப்பைப் பார்த்தது.

உடனே ஓடிச்சென்று அந்தச் செருப்பை கவ்வியபடி மறைந்து கொண்டது.

வெளியே வந்த தபால்காரரோ செருப்பைக் காணாமல் திடுக்கிட்டார்.

'யாரோ என் செருப்பை எடுத்து விட்டார்கள் போலத் தெரிகிறதே! இந்த வெயிலில் நாம் எப்படி செருப்பில்லாமல் நடந்து செல்ல முடியும்?' என்று தவித்தபடி நின்று கொண்டிருந்தார்.

அப்போது சாலையின் ஓரத்தைக் கவனித்தார்.

அங்கு சென்று அந்த செருப்பை அணிந்து கொண்டார்.

தன்னை தபால்காரர் அணிந்தது கண்டு செருப்பு அளவற்ற மகிழ்ச்சியடைந்தது.

மறைந்திருந்தபடி இதனைக் கவனித்துக் கொண்டிருந்த பூனையும் நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.06.2005.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 597
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 595

பரிசுக்குரியவர்:
அ. பராதீபன்,
'ஸ்ரீ தேவி கோயில்' கொம்மாதுறை, செங்கலடி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| என். பத்திமா நஸீலியா, தரம் 7 B, தில்லையடி, புத்தளம். | ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த, மல்வானை. |
| கா. அபிநயா, ப/நெலுவ த.வி., பண்டாரவளை. | ர. வினோ, தரம் 7, T.V.K.மில் வீதி, செங்கலடி. |
| எம்.எச். அமானி, தரம் 3, கஹட்டபிட்டிய முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | என். மாலதி, 275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். |
| எம்.ஐ. மொஹமட் அஸ்லம், 116, ஓடாவியார் வீதி, ஏறாவூர். | வி. மயூரன், 13B, மலிபன் வீதி, கொழும்பு. |
| ர. நிரஞ்சனா, T.V.K.மில் வீதி, செங்கலடி. | ஜெ. திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். |

## ஆத்திசூடி


### காப்பது விரதம்

நீ எதிலும் உறுதி தளராதே. (விரதம் - உறுதி)

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.


## அதிசய உலகம்



### ஆமை கலண்டர்!

பாபுவா நியூகினி நாட்டு மக்களுக்கு கலண்டர் முறை தெரியாது. ஆமைகள் ஒவ்வொரு கிறிஸ்மஸ் சமயமும் முட்டையிட கடற்கரை ஓரங்களுக்கு வருவதைக் கொண்டு தங்கள் வயதைக் கணக்கிடுகின்றனர்.

### புகையிலை காட்சியகம்



அமெரிக்காவில் நாஷ்வில் என்ற நகரில் புகையிலைக்கு என்று பிரத்தியேக அருங்காட்சியகம் உள்ளது.

## உங்கள் பொது அறிவு எப்படி?

| | | |
|---|---|---|
| 1. தென் தீவு (நியூசிலாந்து) | பசுபிக் | 1,54,461 |
| 2. ஜாவா | பசுபிக் | 1,26,884 |
| 3. வட தீவு (நியூசிலாந்து) | பசுபிக் | 1,14,688 |
| 4. கியூபா | அத்திலாந்திக் | 1,14,525 |
| 5. நியூபவுன்லாந்து | அத்திலாந்திக் | 1,10,681 |
| 6. லூ சொன் (பிலிப்பைன்) | பசுபிக் | 1,04,688 |
| 7. ஐஸ்லாந்து | ஆக்டிக் | 1,02,999 |
| 8. மின்மானோ (பிலிப்பைன்ஸ்) | பசுபிக் | 94,631 |
| 9. கொக்கைடோ (ஜப்பான்) | பசுபிக் | 78,663 |
| 10. நோவாயா செம்லியா | ஆக்டிக் | 77,900 |
| 11. சாகரின் | பசுபிக் | 75,078 |
| 12. ஹயிற்ஸி | அத்திலாந்திக் | 78,826 |
| 13. இலங்கை | இந்து | 65,610 |




அமிதாப்பச்சன் உலகில் எவ்வளவு பிரபலமான நடிகர் என்பதை நாம் அறிவோம். ஆனாலும் நாம் அறியாத ஒன்று, அவர் நன்றாகச் சைக்கிள் ஓட்டக்கூடியவர் என்பது. எதிர்வரும் ஜூலை மாதம் இந்திய விருது வழங்கும் விழா ஒன்று நெதர்லாந்தில் நடைபெற இருப்பதைச் சட்டபூர்வமாக அறிவிப்பதற்காக அந் நாட்டிற்குச் சென்ற சமயத்தில் உல்லாசமாகச் சைக்கிள் ஓட்டியபோது பிடித்த படம்.



## ஜாலியான சவாரி



## நண்டின் தலைவிதி


சீனாவின் ஃபுஜியன் பிரதேச உணவு விடுதி ஒன்றில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த இப் பிரமாண்ட நண்டு, மீன்பிடிப்பவர் ஒருவரின் வலையிலே சிக்கியுள்ளது. 11அடி அகலமுடைய இந் நண்டை சமைத்து முடித்த பின்னர் ஏலத்தில் விற்பனை செய்தார்கள்.



## சின்னஞ் சிறிய கார்

உலக சாதனைக்காக அன்றாடம் நாம் கானும் பொருட்களை மிகப் பெரிய அளவிலும் மிகச் சிறிய அளவிலும் செய்து வருவது உண்மைதான். அது போல இங்குள்ள காரும் மிகச் சிறிய அளவில் தயாரிக்கப்பட்டு உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துக் கொண்ட ஒன்றேயாகும்.

இக்காரினை மிச்சிஹரிஓ ஹினோ என்ற ஜப்பானிய நாட்டவர் 2002 இல் வடிவமைத்தார். தான் இருந்து பயணம் செய்வதற்காக அல்ல. உலக சாதனைக்கா. இக் காரின் நீளம் 25 மில்லிமீற்றர் (0.98 அங்குலம்) இக்காரினை ரிமோட் மூலம் தான் இயக்க முடியும் என்பது இன்னொரு தகவல். ஆகவே எரிபொருள் செலவு மிச்சம்.




## டயர் ஓ.கே...

இராட்சத அளவில் எதை எதைச் செய்வதென்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. இங்குள்ள டயர் எந்த வாகனத்திற்கு அளவானது என்று நீங்கள் யோசிப்பது எங்களுக்கு புரிகிறது. இது எந்த வாகனத்திற்கும் பொருந்தாது. இந்த டயர் உலக சாதனைக்காக செய்யப்பட்டது. இது 2001ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது இன்னுமொரு சாதனையையும் தன்னகத்தே கொண்டது என்வென்றால், 81 பேர் சேர்ந்து இந்த டயரை 100 மீற்றர் தூரம் உருட்டிச் சென்றதுதான். இவ்விரட்டைச் சாதனையை டொரண்டோவின் டன்லப் நிறுவனம் தயாரித்தது என்பது் குறிப்பிடத்தக்கது.



ஒவ்வொருவரின் நினைவுக்காகவும் தூபிகள் எழுப்புவது இன்று சாதாரணமாகி விட்டது. அந்த வகையில் இங்குள்ளதும் ஒரு நினைவுத் தூபியே நம்புவீர்களா? இது அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ளது இரண்டாம் உலகப்போரின்போது பயன்படுத்தப்பட்ட இராணுவத் தாங்கியை ஞாபகப்படுத்தும் விதமாகவே இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 35 மீற்றர் (114அடி 9 அங்குலம்) இது 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பழைய நினைவு

# சினி விசிட்



நமீதா இங்கிலீஷ்



ரோஷன் - லயா
திருடிய இதயத்தை

**மு**ரளி கிருஷ்ணா இயக்கத்தில் ஷெரீனின் முன்னாள் காதலர் ரோஷன் நடித்துவரும் 'திருடிய இதயத்தை' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு ஆடுகிறார் பிரபல கவர்ச்சி நடிகை என்று நினைத்து விடாதீர்கள். நம்ம கார்த்திக்தான் ஆடுகிறார். ஒருபுறம் தமிழ்த் திரை சானலில் 'டாக் ஷோ' இன்னொரு புறம் 'சரணாலயம்' என்கிற அமைப்பின் வேலை என சினிமாவைத் தவிர எல்லாவற்றிலும் பிஸியாக இருக்கிறார் கார்த்திக். மே 2ஆவது வாரம் தென் மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து தனது 'சரணாலயம்' அமைப்பை மாவட்டந்தோறும் தோற்றுவிக்க இருக்கிறார் கார்த்திக்.

---

**ஜெ**கன்ஜி இயக்கும் 'கோடம்பாக்கம்' படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் தியா. கதைப்படி கதாநாயகிக்கு சைக்கிள்தான் வாகனம். ஆனால் தியாவுக்கு சைக்கிள் ஓட்டத் தெரியாது. படத்திற்காக இப்போது தன் வீட்டைச் சுற்றி சைக்கிள் ஓட்டிப் பழகுகிறார் தியா.

---

**ப**த்திரிகைகள் பரபரப்புக் குறையும்போதெல்லாம் நடிகைகளின் கதைகளை எழுதி பரபரப்பை உண்டாக்குவார்கள். சினிமாவிலும் அப்படித்தான்போல. திடீரென நடிகைகளின் கதைகளைப் படமாக்கத் தொடங்கியிருக்கிறது கோலிவுட். 'மாயாவி' படத்தில் நடிகை ஜோதிகாவை இரசிகர் சூர்யா கடத்துவதாகக் கதை போனது. இப்போது ராதாபாரதி இயக்கத்தில் ஜெய்ஆகாஷ் இரசிகராகவும் பிரணதி நடிகையாகவும் நடிக்கிறார்கள். இதிலும் கடத்தல் சம்பவம் உண்டாம். இதேபோல் மனோஜ்பாரதி-குணால் நடிக்கும் 'சாதுர்யன்' படத்திலும் இரசிகராக மனோஜ்பாரதி, நடிகையாக நந்தனா நடிக்கிறார்கள். இதில் கடத்தலுக்குப் பதில் கற்பழிப்பு முயற்சியாம். இதுபோக....சேரனின் உதவியாளர் ஜெகன்ஜி கோடம்பாக்கம் என்ற பெயரில் சினிமா நடிகர் - நடிகைகள் பற்றி படம் எடுத்து வருகிறார்.

---

**க**மலின் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் போலிஸ் அதிகாரியாகவும், சர்வதேச கிரிமினலாகவும் இரண்டு வேடங்களில் கமல் நடிக்கிறார். இதில் சர்வதேசக் கிரிமினலைத் தேடி அமெரிக்காவில் இன்வெஸ்டிகேஷன் நடத்துகிறார் கமல். அதனால் படத்தின் பெரும்பகுதி அமெரிக்காவிலேயே எடுக்கப்படவிருக்கிறதாம்.

---

# இளவரசர் இசையமைப்பாளராகிறார்

**பு**துமுக இயக்குநர் யுவன் இயக்கத்தில் ரிச்சர்ட்-சுபாபுன்ஜா நடிக்கும் படம் 'சண்முகா'. இந்தப் படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் ரிச்சர்ட். இப்பவெல்லாம் பொலிஸ்மேல இருந்த மரியாதை போய் பயம்தான் வருது மக்களுக்கு. காவல்துறைமீது மறுபடி மரியாதையை ஏற்படுத்துவது மாதிரி இந்தப் படத்தை உருவாக்கி வருகிறோம் என்கிறார் யுவன்.

படத்தின் ஹைலைட்ஸ் 2.

1. சுபாபுன்ஜாவின் கவர்ச்சி.

2. ஆற்காடு இளவரசர் இந்தப் படத்திற்கு இசையமைப்பது.

என்னது...? இளவரசர் இசை அமைக்கிறாரா? ராயப்பேட்டை அமீர் மகாலுக்கு விரைந்தோம். ஆற்காடு நவாப்பின் மகன் இளவரசர் ஆஸிப் அலியைச் சந்தித்தோம்.

***இசையமைப்பாளராக அவதாரமெடுத்திருக்கிறீர்களாமே? என்று கேட்டோம்.***

முதலில் பாட்டைக் கேளுங்கள். அப்புறம் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் என அரண்மனையிலேயே ஒரு பகுதியில் இருந்த ரெக்கார்டிங் தியேட்டரில் நம்மை உட்காரவைத்து பாடல்களைப் போட்டுக் காட்டினார்.

"என்ன வச்சுக்கடா
என்ன கட்டிக்கடா
சேட்டபண்ணி என்ன படுத்துடா"

என ஒரு கும்மாங்குத்து பாடல் ஒலிக்கத் தொடங்கியது. நம்மையறியாமலே நமது கால்கள் தாளம்போடத் துவங்கியது.


அரிக்குது கை
பக்கத்துல நெய்
அக்கம்பக்கம் பாத்து
கையை வை"

என அடுத்து ஒரு கும்மாங்குத்தைப் போட்டுக் காட்டினார்.

தமிழ் சினிமாவின் டிரெண்டுக்கேத்த கும்மாங்குத்து ஸ்பெஷலிஸ்ட்டாக இருப்பார் போலிருக்கிறதே இந்த இளவரசர் என நினைத்துக்கொண்டிருக்கும்போதே....

"ஒரு நாளைக்கு ஒருதரமேனும்" என சூப்பர் மெலடி ஒன்றையும் போட்டுக் காட்டினார். நிஜமாகவே பாட்டெல்லாம் இரசிக்கும்படி இருந்ததால் அவருக்கு கைகுலுக்கினோம்.

"நான் லண்டன்ல மியூசிக் சம்பந்தமா படிச்சிருக்கேன். 4-வது படிக்கும் போதிலிருந்தே கீபோர்டும் கத்துக்கிட்டு வர்றேன். அமெரிக்கன் டாகுமெண்டரி பிலிம்ஸுக்கு மியூசிக் பண்ணியிருக்கேன். ஹிந்தியிலேயும் ஒரு படம் பண்ணிக்கிட்டிருக்கேன். தென்னாபிரிக்காகாரங்க தமிழில் 'நாளை'ன்னு ஒரு படம் தயாரிச்சாங்க. அது வெளிவரல. அந்தப் படத்துக்கும் நான்தான் மியூசிக். இந்தச் சூழ்நிலையில்தான் என் நண்பர் மூலமா 'சண்முகா' பட வாய்ப்பு வந்தது. அனுராதா ஸ்ரீராம், திப்பு போன்ற முன்னணிக் கலைஞர்களோட சாய்சுந்தர் என்கிற புதிய பாடகரையும் அறிமுகப்படுத்தியிருக்கிறேன்" என்றார் ஆஸிப் அலி.



திருடிய இதயத்தை

***குத்து ஸாங்கில் ஸ்பெஷலிஸ்ட்டாக இருப்பீங்க போலிருக்கே?***

"எல்லாவகையான பாடல்களையும் தர்றதுதானே இசையமைப்பாளரோட வேலை. கதைக்கு என்ன தேவையோ அதை டைரக்டர் கேட்பார். டைரக்டருக்கு என்ன தேவையோ அதைப் பண்ணித்தர்றேன் நான்."

***மத்த இசையமைப்பாளர்களிடமிருந்து எப்படி வேறுபடுறீங்க?***

"பாடல்களைக் கேட்கும்போதே அந்த வித்தியாசத்தை உணருவீர்கள். பாடல்களுக்கு புதிய புதிய வாத்தியங்களைப் பயன்படுத்தியிருக்கேன். பாடல்களில் மட்டும் கவனம் செலுத்தாமல் முழுக் கதையையும் கேட்டு, அந்தக் கதைக்களத்துக்கேற்ப பின்னணி இசையைக் கையாளுவேன். 'சண்முகா' பொலிஸ் ஸ்டோரி. அதற்கேற்ற பின்னணி இசையை கையாண்டு வருகிறேன்."

***தமிழில் ஆல்பம் போன்ற முயற்சிகளில் இறங்கலாமே?***

"தமிழில் பெரிய அளவில் ஆல்பம் ரீச் ஆவதில்லை. சினிமாவில் பேர்வாங்கி அந்தப் பேரை வைத்து ஆல்பம் பண்ணிப் பார்க்கலாம் என்றிருக்கிறேன்" என்றார் இளவரசர். இந்த இசை இளவரசருக்கு வாழ்த்துக்களைச் சொல்லிவிட்டு வந்தோம்.






# படப்பிடிப்பில் சிநேகா கலாட்டா!

**'ஏபிசிடி' ....** வந்தா வாடி.....வராட்டி போடி என சின்னப் பிள்ளைகள் விளையாடுவார்கள். இந்த 'ஏபிசிடி' பட விவகாரத்தில் வந்தா வா.... வரலைன்னா.....என மிரட்டல் விடப்பட்டிருக்கிறது.

சிட்டிசன் படத்திற்குப் பிறகு ஷரவண சுப்பையா இயக்கும் படம் 'ஏபிசிடி'. இதில் சிநேகா கதாநாயகி. ஏற்கனவே துணிமணி உட்பட பல விஷயங்களில் டார்ச்சர் பண்ணிய சிநேகா, சமீபத்தில் ஊட்டிக்குப் படப்பிடிப்புக்குப் போயிருந்தபோது குளுகுளு கேரா வேன் கேட்டாராம். "ஊட்டியில் போய் கேரா வேன் எதற்கு? அதை சென்னையில் இருந்துதான் கொண்டுவர வேண்டும். ஊட்டியே குளு குளு என்றுதானே இருக்கிறது" என்று புரொடக்ஷன் மனேஜர் சொல்ல, சிநேகா டென்ஷன் ஆகிவிட்டார்.

சிநேகா டென்ஷன் ஆனால் படப்பிடிப்புக்கு ஒத்துழைக்கமாட்டாரோ என்று பயந்த ஷரவண சுப்பையா.... புரொடக்ஷன் மனேஜரைப் பார்த்து சவுண்டு விட....அவரோ கிளம்பி சென்னைக்கு வந்துவிட்டார்.



ஸ்ரீகாந்த் - சோனியாஅகர்வால்
ஒருநாள் ஒரு கனவு

எபபடியோ படப்பிடிப்பு முடிந்து சென்னை திரும்பினர். அடுத்த செட்யூல் கும்பகோணத்தில்! ரயிலில் ஏசி கோச்சில் சிநேகாவுக்கு டிக்கெட் போடப்பட்டிருந்தது. ஆனால், "என்னால் ரயிலில் எல்லாம் வரமுடியாது. ஏசி வேன் ஏற்பாடு பண்ணுங்கள்" என சிநேகா தரப்பில் சொல்ல, ரயிலையும் தவறவிட்டு விட்டனர். பொறுமையிழந்த புரொடியூஸர் சிநேகா வீட்டிற்குப் போன் போட்டார்.

"நாளைக்கு காலையில கும்பகோணத்துல இருக்கணும். வரலைன்னா....நடக்குறதே வேற....."என மிரட்டல் விட, துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்கிற கதையாய் தனது காரிலேயே கிளம்பி கும்பகோணம் போய் நின்றாராம் சிநேகா!

---

தற்கொலை முயற்சி, பாத்ருமில் குளியல் எனப் பல சர்ச்சைகளில் சிக்கினார் த்ரிஷா. இதனால் மலையாள ஜோதிடர் ஒருவரின் ஆலோசனையைக் கேட்ட த்ரிஷாவின் அம்மா உஷா, ஜோதிடரின் யோசனைப்படி தன் மகள் மேல் யாருடைய கண்ணும் படாமல் இருக்க, தாயத்து ஒன்றை வாங்கிவந்து த்ரிஷாவுக்குக் கட்டிவிட்டிருக்கிறார்.

---

'இங்கிலீஷ்காரன்' படப் பிடிப்பு கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலையில்..... டெக்னீஷியன்களுக்கு இன்னும் சம்பளப் பாக்கி யாம். இதனால் தயாரிப்பாளரும், இயக்குநருமான ஷக்தி சிதம்பரம் மீது வருத்தத்தில் இருக்கிறார்கள்.



விக்ரம்
அந்நியன்

---

**வி**க்ரம் வீட்டில் ஒரு கிளி உண்டு. 'அண்ணாச்சி, ஓ போடு, போங்க வாங்க, ஜென்னி, எனப் பல வார்த்தைகளைக் கற்றுவைத்துக்கொண்டு அட்டகாசமாகக் கிளிமொழி பேசும் இந்தக் கிளி வயசுக்கு வந்துவிட்டது. கொஞ்சநாளாவே அந்தக் கிளி காதல் ஏக்கத்தில் இருக்க....அதற்கொரு ஜோடிக் கிளியைக் கொண்டுவர முயற்சித்தார் விக்ரம். அதன்படி பொருத்தமான துணைக் கிளி கிடைத்தது. ஜோடி கிடைத்ததும் தமிழ் லாங்வேஜ் பேசி வந்த அந்தக் கிளி, இப்போது பாடி லாங்வேஜ் மட்டுமே பேசுகிறது. எந்தநேரமும் துணையுடன் கிசுகிசுத்துக்கொண்டே வார்த்தைகள் பேச மறுக்கிறதாம். இதற்கிடையே சமீபத்தில் நடந்த விக்ரமின் பிறந்த நாளையொட்டி விக்ரமிற்கு ஒரு வெண்கிளி ஒன்றைப் பரிசளித்திருக்கிறார் பாலா.

---

'**கா**க்க காக்க' படத்தில் டைரக்டர் கௌதமிடம் உதவியாளராக இருந்த மார்கன் இப்போது சிஜடிவி தயாரிப்பில் பிரசாந்த் நடிக்கும் 'டாக்ஸி டிரைவர்' படத்தை இயக்குகிறார். இதற்கிடையே பொலிஸ் தன்னைக் கைது பண்ணிவிடக்கூடாது என முன்ஜாமீன் கேட்டு கோர்ட்டுக்குப் போயிருக்கிறார் மார்கன். கதை எதையும் திருடிவிட்டாரா? அதெல்லாம் இல்லை. வெளிநாட்டு வேலைக்கு ஆள் அனுப்பியது சம்பந்தமான மோசடியில் மார்கனின் அப்பாவைக் கைது செய்திருக்கும் பொலிஸ், மார்கனுக்கும் இதில் சம்பந்தமிருக்கலாம் எனத் துரத்துகிறது.

---

**யா**ராவது அன்னதானம் பண்ணுவதாகச் சொல்லி டொனேஷன் கேட்டால் தயங்காமல் உதவி செய்கிறார் தேவயானி. தன் வீட்டருகே இருக்கும் ஆஞ்சநேயர் கோயிலில் அடிக்கடி தேவயானியே அன்னதானம் செய்துவருகிறார்.

---

**ந**யன்தாராவைப் பற்றி லேட்டஸ்ட்டாய் 3 விஷயங்கள்.

1. நயன்தாரா இடுப்பில் தங்கத்தாயத்துக் கட்டியிருக்கிறார்.
2. நயன்தாராவுக்கு இடது கையில் 6 விரல்.
3. தன் மனேஜர் அஜீத்குமாருக்கு விலை உயர்ந்த கார் ஒன்றைப் பரிசாகத் தந்திருக்கிறார்.

**ப**ழம்பெரும் நடிகை வைஜெயந்திமாலா தனது மகன் சுசீந்திராபாலியைக் கதாநாயகனாக்கப் படாதபாடுபட்டு வருகிறார். ஏற்கனவே 'கண்ணோடு காண்பதெல்லாம்' படத்தில் நடித்திருந்தும் க்ளிக் ஆகவில்லை. இந்தச் சூழ்நிலையில் டைரக்டர் செல்வராகவன் தனது 'துள்ளுவதோ இளமை' படத்தில் நடிக்க தேடிப்போனபோது...வீணாக அலையவிட்டிருக்கிறார் வைஜெயந்திமாலா. செல்வராகவன் இப்போது பெரிய டைரக்டராகி விட்டதால் மறுபடி முயற்சி செய்தார் வைஜெயந்திமாலா. ஆனால் இம்முறை செல்வராகவன் வைஜெயந்திமாலாவை இன்சல்ட் பண்ணிவிட்டார். ஷங்கர் 'பாய்ஸ்' படத்திற்குக் கேட்டபோதும 4-பேரில் ஒருவராக நடிக்கமாட்டார் என் மகன் என அந்த வாய்ப்பையும் விட்டுவிட்டார். இந்நிலையில் தனது மகனை ஹீரோவாக நிலைநிறுத்தியே தீருவது என ஒன்றரை கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டார். இப்போது பிரபல தயாரிப்பாளர் 'விஸ்வாஸ்' சுந்தர், சுசீந்திராவைக் கதாநாயகனாக வைத்துப் படம் தயாரிக்கப் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. வெகு விரைவில் அறிவிப்பு வரலாம்.

---



முகப்பில்
தியா

தியா

## கோபிகா Top 10

- **என்னை** பரத் காதலிப்பதாக பரத்தே கிசுகிசுவைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார் என்று பத்திரிகையில் எழுதுவது சுத்தப் பொய்.
- **நான்** ஸ்ரீகாந்தோடு நெருக்கமாக இருக்கிறேன் என்பது அதைவிடப் பொய்.
- **'கனா கண்டேன்'** படத்தில் அதிகபட்சமாகக் கவர்ச்சி காட்டிவிடவில்லை. என் அப்பாவும் அம்மாவும் ஷூட்டிங் ஸ்பாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். நான் எல்லை மீறினால் அவர்கள் என்னைக் கண்டிக்க மாட்டார்களா?
- **'ஆட்டோகிரா.'பில்'** ஒரு ஹோம்லியான பெண்ணாக என்னைப் பார்த்தீர்கள். கனா கண்டேனில் கொஞ்சம் கவர்ச்சியான பெண்ணாகப் பார்க்கப் போகிறீர்கள். தொட்டி ஜெயாவில் வில்லங்கமாக வருகிறேன். பொன்னியின் செல்வனில் நகைச்சுவை ததும்ப நடித்து வருகிறேன்.
- **எனது** காஸ்ட்யூம்களை நான்தான் தீர்மானிக்கிறேன். அதனால் எனது கிளாமரையும் நானே தீர்மானித்து விடுகிறேன்.
- **கதை** கேட்கும்போது நான், எனது அப்பா, அம்மா மூவரும் சேர்ந்து கேட்கிறோம். ஒத்துவராத காட்சிகளை ஆரம்பத்திலேயே தவிர்த்துவிடச் செய்கிறோம்.
- **நான்** அதிவேகமாகக் கார் ஓட்டுவதைப் பார்த்துவிட்டு, எல்லோரும் அதைப்பற்றியே கவலைப்படுகிறார்கள். இளங்கன்று பயமறியாதே!
- **குறைவான** சம்பளம் என்பதற்காக நான் என் தாய்மொழிப் படங்களில் நடிக்க தவிர்த்து வருகிறேன் என்கிற தகவல் உண்மையல்ல. கால்ஷீட்தான் பிரச்சினை. இப்போதுகூட திலீப்புடன் ஒரு படம் நடிக்கிறேன்.
- **என்** தங்கை க்ளினி நடிக்க வருவது பற்றி எனக்கோ எனது பெற்றோருக்கோ எந்தவித ஆட்சேபமும் இல்லை.
- தமிழ் சினிமாவில் ஒரு நல்ல இடத்தைப் பிடிக்கவேண்டும் என்பதே எனது இலட்சியம்.

---

'**சி**ன்ன வீடா வரட்டுமா' தேஜாஸ்ரீ, ஷூட்டிங் ஸ்பாட்டில் இருந்தால் ஒரே கலகலப்புதான். காரணம்...ரஜினி போல் கண்ணாடியைத் தூக்கிப்போட்டு பிடிப்பது, ஸ்டைலாக நடப்பது, பற்ற வைக்காத சிகரெட்டைத் தூக்கிப்போட்டு பிடிப்பது என ரஜினி ஸ்டைல் பண்ணி எல்லோரையும் சிரிக்க வைக்கிறார்.



கார்த்திக்- ரோஜன்
திருடிய இதயத்தை




## கூண்டுப் பறவை!

அங்கிருப்பதைப்போன்று
இங்கு எதுவுமே பசுமையாக
இல்லை.

முந்திரியம் காடுகளிலும்
சோளம் தோட்டங்களிலும்
மலை இடுக்குகளிலும்
மரப்பொந்துகளிலும்
நதிக்கரைகளிலும்
எனது நேற்றைகள் மிகவும்
அலாதியானது.

சிறு துளையொன்றிலும்
மெலிந்து நுழையும்
தென்றல்போல்
எந்த அணிகளுமின்றி
பாய்ந்தோடிவரும் நதிபோல்
அந்நியக் காடுகளிலும்
எனது சிறகுகள்.

ஆனால்
அங்கிருப்பதைப்போன்று
இங்கு எதுவுமே பசுமையாக
இல்லை.

எனது காடுகளை மேவும்
இரண்டு கால் விலங்குகளும்
வன்மங்களும் சடைத்த
நெருஞ்சிக் காடொன்றில்
நான் சிறையிடப்பட்டுள்ளேன்.

இங்கு பாம்புகள் போலவும்
கழுகுகள் போலவும்
ஒரு விலங்கில்
ஆயிரமாயிரம் முகங்கள்.

அங்கிருப்பதைப்போன்று
இங்கு எதுவுமே பசுமையாக
இல்லை.

உன் பொழுதுகள் பற்றியும்
குழந்தைகள் பிராக்குகள்
பற்றியும்
பிரியத்தனங்கள் இருப்பது
போன்று
என் இருப்புகள் பற்றியும்
காடுகள் பற்றியுமே நான்.

சில சமயம் உன்
சோளத்தோட்டங்களை
நான் நாசம் செய்திருப்பின்
கொலைப்பசியோடு
வந்தொருவனுக்கு
பருக்கைகள்
பரிமாறியதுபோல
என் சிறகுகளை
அவிழ்த்துவிடு.

அங்கிருப்பதைப்போன்று
இங்கு எதுவுமே பசுமையாக
இல்லை.

–ரதுமான் ஏ.ஜமீல், மருதமுனை.

## மூச்சுக்களின் முனகல்....!

மனசு கனக்கும்
வேளைகளில்
கவிதைகளை விட
கண்ணீரின்
ஆதிக்கம்தான்
அதிகமாகிறது....!

ஷட்சன்
விரிகுடாவில் - உன்
வளைக்கரம் பற்ற
நினைத்தேன்
எல்லாமே
கொலம்பிய
விண்கலமாய்
கொழுந்து விட்டு
எரிகிறது...!

மார்க்கழிக் காற்று -
என்
மனசு தொடாமல்
மறைகிறது
காலநிலை கூட
என் காதலை
புரிந்து
கொள்ளவில்லையோ.....


இத்தனை நாள்
செயற்பாட்டிலிருந்து -
உன்
செயற்கை
புன்னகையும்
இன்றோடு
செயலிழந்து
போனது....!

நுஸா - நீ
சிறந்த ஓவியக்காரி
உன்னால்
எனக்காய் என்னவோ
கல்லறைகளை
மட்டுமே
வரைய முடிந்தது!

உன்
இலட்சக்கணக்கான
புன்னகைகளை
புதைத்து வைத்தேனடி
எல்லாதே - என்
இரங்கட் பாவுக்கான
அஸ்திரவாரங்களா?

–புத்தளம், நஸீம்ரூமி.


## முல்லை மகனின் கண்ணீர்



சமாதான ஒப்பந்தம்
வருடம் மூன்றை விழுங்கியும்
தலை கவிழ்ந்து
இருள் தேசத்தில் நான்!

துப்பாக்கி வேட்டுகள்
தற்காலிகமாக ஓய்ந்தாலும்
துளியாவது ஓயவில்லை
கெடுபிடிகளும் இரும்புச்சட்டமும்
முல்லை மண்ணில்!

உறவுகள் என்னிடம் வந்தால்
உள்ளன புலனாய்வு பிரிவின்
தொல்லை!
வெளியே நான் செல்ல நினைத்தால்
விசாரணைப்பிரிவின் தொல்லை!



காட்டிக்கொடுப்பதை
காரணம் சொல்லி
தொலை தொடர்புகளுக்கு தடை!
உளவாளிகள்
உள்வருவதாய் காரணம் சொல்லி
அரசு நடமாற்றத்திற்கு தடை.

தொடரும் அவலப்பட்டியல்
முல்லை நிலத்திற்கு மட்டுமா?
முழு இலங்கைக்குமா?
ஒன்றும் தெரியாமல்
குகையில் வாழும் முல்லை
மகனுக்கு
பதில் அனுப்புங்கள் அன்பர்களே!

– மனித நேசன், யாழ்ப்பாணம்.

## சுமை

பல்வேறு
கவலைகளில்
சூழப்பட்ட
மனிதர்களுக்கு
நடுவே
பழக்கூடையை
சுமந்தபடி பசியால்
நிறைந்திருந்த
முகத்தோற்றத்துடன்
ஒரு பழுத்தமூதாட்டி
இருந்தார்.
தள்ளாத வயசுல
இப்படி சுமை
தூக்கி
கஷ்டப்படனுமா?
என்னப்பா செய்யச்
சொல்றே? பெத்த
பிள்ளைகளுக்கு
நானே
சுமையாகிப்
போயிட்டேன்.
பிச்சை எடுத்துத்
தின்னா வயிறு
நிறையும். இப்படி
உழைச்சுச்
சாப்பிட்டாதானே
மனசு நிறையுது,
என்றார்.
மூதாட்டிக்கு
உதவியாக
பழக் கூடையை
அவர்
தலையில் தூக்கி
வைத்தேன்.
பாரம் ஏறியது என்
நெஞ்சில்.

–க.கிருபாகரன், வாரிதுட்டியூர்.

## சீதன விலங்குடைக்க

பெண்ணுக்குப் பெண்ணவளால்
போட்டுவைத்த விலங்கதுவே
வரதட்சணை என்னும்
வதை தட்சணை விலங்கு

தன் மகனைக் கரைசேர்த்த
தான் கொடுத்த சீதனத்தை
இன்னுமொரு பெண்மீதே
ஏவியவள் கேட்கின்றாள்.

திருமணச் சந்தையிலே
கூறிவிலை குறிக்கின்ற
பேச்சுவார்த்தை
செய்வதெல்லாம்
மாப்பிள்ளையின் தாய்தானே!

வாயிருந்து ஊமையாக
ஆண்மகன் அமர்ந்திருக்க
அடுக்கடுக்காய் சீதனத்தை
அவன் தாயே கேட்டிடுவாள்.

கன்னி கழியவைக்க
காரும் காசும் வேண்டும்
இருமனம் சேர்வதற்கு
எதற்கு வேண்டும் பணம்?

தன்னம்பிக்கை உள்வர்க்கும்
தன்மானம் கொண்டவர்க்கும்
சீதனமும் பிடித்திடாது
அதை வாங்குதற்கும் மனம் விடாது.

சீதனச் சந்தையிலே
சீதன விலங்குடைக்கும்
ஆடவர் வரும் போதேதான்
ஏழைப் பெண்களுக்கு வாழ்வுவரும்.

–மாணிக்கன் இளங்கோ, பட்டித்திடல்.

## ஒரு மழைத்துளியாய்

உன்னிலிருந்து நான்
தூரப்படுத்தப்படுகிறபோது

உனக்கும் எனக்குமான
இடைவெளியின்
தளத்தில்
நான்
சிதைக்கப்படுகிறபொழுது

நிழலுக்குள் சிக்கிய
என் ஆத்மாவால்
உன்னை
நெருங்க
முடியாதபோது.

என் எண்ணத்தை தவிர
எதனாலும் உன்னை
தொட முடியாதபோது.

என் நேசம்
இன்னும் இன்னும்
ஆழமாகிறது.

நீர்த்துளிகளை
நீ சூடிக்கொள்வதில்லைதான்
என் தாமரையே
உன் இறுக்கத்தை
கொஞ்சமாய் தளர்த்திவிடு.

ஒரு மழைத்துளியாய்
உன் மீது
பட்டுவிட்டு உயிர்க்கிறேன்.

–மு.கீர்த்தியன், லபுக்கலையூர்.


# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

“கவிதை என்பது மெய்ப்பட முடியாத மொழியின் சாத்தியப்பாடு, தனிமை நோக்கி நிர்ப்பந்திக்காத புலன்களின் வேதிச் செயல்பாடு. அது வேறொன்றைச் சுட்டாத தனிப்புலம், எதார்த்தத்தை நிர்ப்பந்திக்காத நுண்வடிவ மண்டலம். அது ஒரு வகையில் கலாசாரம் தன் போதாமையை உணர்ந்து கரையும் புற நிலப்பரப்பு. தான் என்பதை, அதாவது, ‘கலாசாரத்தின் தான் என்பதை’ மட்டுமே நிர்ப்பந்திக்கும் மொழிப்பரப்பு கவிதையை நிகழ்த்துவதில்லை. ‘பிற’ என்பதை ‘வெளியே’ என்பதை ‘புறம்’ என்பதை கலைய அனுமதிக்கும் மொழிப்பரப்பே கவிதைகளை நிகழ்த்துகிறது....

ஒரு சமூகம் தனக்கு இன்பமூட்டுவதற்காக சிலவற்றை – சில மொழிச் சேர்க்கைகளை கவிதைகள் என்று பெயரிட்டு அழைத்துக்கொள்ளும் பொழுது அங்கே விமர்சிக்கவோ பேசவோ எதுவும் இல்லை. ஓர் அரசியலானது சிலவற்றை தனது மேலாதிக்கக் குரலாகப் பிரகடனப்படுத்தி அவற்றை கவிதை என்று கூறும்பொழுது நாம் செய்யவோ, அறியவோ எதுவும் இல்லை. அவற்றிற்கு அந்த உரிமையைத் தரவோ மறுக்கவோ நமக்கு எந்த கடப்பாடும் இல்லை. என்று தங்கள் கருத்தை முன்வைக்கும் பிரேம், ரமேஷ் ஆகியோர் பின் நவீனத்துவ கருத்துக்களைத் தமிழில் அறிமுகப்படுத்திக் கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர்கள். அவர்களது நான்கு கவிதைகள் :



### காரணமற்ற அமைதி

எல்லோரும் பேசிக்கொண்டார்கள்
அது ஒரு சரித்திரப் பழிவாங்கல்
எப்போதோ நடந்த படையெடுப்பு
எவரோ விதித்த கூடுதல் வரி
மதமாற்றத்தில் மீந்த மனவடு
இல்லாமல் போன வழிபாட்டிடத்தின்
பழம் சுவடு
ஏதோ சில கோட்டைகளின் இடிபாடு
இப்படி ஏதோ ஒன்றுக்கான பழிதீர்ப்பு
வீடுகள் கொளுத்தப்பட்டதற்கும்
தலைகள் வெட்டப்பட்டதற்கும்
பதுங்கிய குழந்தைகளின் கூட்டம்
சாம்பலாய் மீந்ததற்கும்
கொலை செய்யப்படுவதற்குமுன்
பெண்கள் மிகக் கவனமாக
வன்புணர்ச்சிக்கு
உள்ளாக்கப்பட்டதற்கும்
ஓடி மறைந்தவர்களைத் தேடி
ஒரு கூட்டம் ஆயுதத்துடன்
அலைவதற்கும்
சரித்திரம் ஏதாவது ஒரு காரணத்தை
ஏவிவிடுகிறது.

அந்தச் சில நாட்களின்
அமைதியிலும் நிசப்தத்திலும்
மனிதர்களின் தோலைக்
கிழித்துக்கொண்டு
வெளிவந்தலைகின்றன
இரத்தவெறிபிடித்த புராதன மிருகங்கள்
பிறகு அவை
தெய்வங்களாக உருமாறி
மனிதர்களை
ஆசீர்வதிக்கின்றன
எல்லாம் நடந்து முடிந்த சில
நாட்களிலேயே
இயல்பு வாழ்க்கை எப்படியோ
திரும்பிவிடுகிறது
எதுவும் நடக்காதது போன்ற
தோற்றமும் வந்துவிடுகிறது
இதுவும் கூட சரித்திரத்தின் ஏதாவது
ஒரு பக்கத்தில் ரகசியமாக
எழுதப்பட்டுவிடுகிறது.

மௌனம் பெருமுச்சு மறதி பிறகு
சரித்திரம்
காரணத்துடன் கூடிய வன்முறையை
விட
காரணமற்ற அமைதி
அதிக கொலைவெறியுடன்
காத்திருக்கிறது.

### கதவு

கதவடைக்கும் ஓசை.
எனக்குள் கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

போய் வருகிறேன் என யாருக்கும்
சொல்வதில்லை
என் சாம்பல் வங்கக் கடலில் கரைக்கப்போகும்
காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

கதவடைக்கும் ஓசை
எனக்குள் கேட்டுக்கொண்டேயிருக்கிறது
கதவு திறக்கப்படும்போது உண்டாகும்
சத்தத்தைப்போல.

### மறவனின் நினைவுப் பொருள்


போர்வயிற் பிரிந்த தலைவனை எதிர்பார்த்து
தலைவாயிற் கதவம் இராப்பகல் திறந்திருக்க
சூழும் வணிகர்களின் குளம்பொலிக் கேட்டுப்
புரவி சூழ் தலைவன் வருகிறான் என்று
பதறியடித்து அடுக்களை விடுத்து
ஓடிவந்து பார்த்து அடிக்கடி ஏமாந்த
தலைவிக்குத் தலைவன் கொண்டு வந்ததென்ன
ஆற்றங்கரையில் பாங்கியை மடக்கி
பாங்கன் கேட்டான்; பாங்கியும் சொன்னாள்:
படைக்களம் வீழ்ந்த எதிரி உடல்களின்
காதுகளறுத்து பாலித்தீன் பைகளில்
மூட்டை மூட்டையாய்க் கொண்டு வந்தனன்
இரண்டிரண்டாகக் காதுகள் பிரித்து
மொத்தம் தொள்ளாயிரத்துத்
தொண்ணூற்றொன்பது
ஜோடிகள் உள்ளன; ஐயோ இன்னுமோர்
ஜோடியிருந்தால் கணக்கு ஆயிரம்
முழுமையாய் இருக்கும்; தலைவியின் பூ முகம்
வருத்தம் இழையோடக் கண்ட தலைவன்
தனது காதுகள் இரண்டை அறுத்து
கணக்கு நேர்செய்ய மகிழ்ந்தனள் மலர்ந்தே.

### பறவை போன திசையில்

மரத்திலிருந்து தொங்கிய உடலை
இறக்கிய பிறகு
அந்தக் கிளையை
வெட்டிவிட்டார்கள்
வழக்கமாக வந்தமரும்
கிளையைத் தேடி
சுற்றிச் சுற்றி பறந்துவிட்டு
வேறு கிளையில் அமர மனமின்றி
வெகுதூரம் சென்றுவிட்டது பறவை

உடலைப் புதைத்தார்கள்
கயிறை எரித்தார்கள்
கிளையை வெட்டிய
காயத்தில் குருதி
சொட்டிக்கொண்டிருப்பதை
நிறுத்தும் வழி தெரியாமல்
ஊரை கைவிட்டுவிட்டு
பறவை போன திசையில்
குடிபெயர்ந்தார்கள்.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : எஸ். சஞ்சய்.
வயது : 24
முகவரி : வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.
பொழுதுபோக்கு: கவிதை, புதிய தேடல்



பெயர் : எம்.எஸ். நஜாத்.
வயது : 24
முகவரி : Room No C - 5, Saudi Oger.Ltd, Ciconest Camp, P.O.Box 8293, Riyadh 11482, K.S.A.
பொழுதுபோக்கு : வானொலி.




பெயர் : எஸ்.சிவமதன்.
வயது : 22
முகவரி : 54, Becket Avenue, Eastham, London, E6 6AF, U.K.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி.



பெயர் : ஏ.சீ.எம். யசார்.
வயது : 17
முகவரி : பறங்கி வீதி, சின்னக் குடியிருப்பு, கல்பிட்டி.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரீ.வி., வானொலி.

# நீங்கள் ஐஸ்கிரீம் பிரியரா?




கோடை காலத்தில் தாகத்தைத் தணிக்க ஐஸ், ஐஸ்கிரீம், குளிர் பானங்கள் ஆகியவற்றை அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள். இவை அனைத்தும் உடல் நலத்துக்குக கேடு விளைவிக்கக கூடியவை.

ஐஸ்கிரீம் சாப்பிடும் பழக்கம நல்லதல்ல. தொடர்ந்து அளவுக்கு மீற ஐஸ்கரீம் சாப்பிட்டால் சைனஸ், டான்சில், குரல் பாதிப்பு போன்ற பல பிரச்சினைகள் வரக்கூடும்.

இதைத் தொடர்ந்து சாப்பிட்டு குண்டாகலாம் என நினைப்பார்கள். ஐஸ்கிரீம் சாப்பிட்டு குண்டானால் அதன் எதிர்வினைவுகள் மோசமாக இருக்கும்.

ஐஸ்கிரீமில் இருக்கும் சர்க்கரைச் சத்தும், கொழுப்புப் பொருட்களும் நமது உடலில் கொழுப்பைக் குறைப்பதற்குப் பதிலாக கொழுப்பை அதிகப்படுத்தும். இப்படி கொழுப்பு அதிகமாவதை நாம் குண்டாகுதல் என்கிறோம். கொழுப்புச் சத்து நமது உடலில் இரத்த நாளங்களில் படிந்து இரத்தக் குழாயை சுருக்கி, இரத்த ஓட்டத் தடையை ஏற்படுத்து கிறது. இதயத்துக்குச் செல்லக்கூடிய இரத்தத்தின் அளவும், பிராணவாயுவின் அளவும் குறைந்து உயர் இரத்த அழுத்தம், இதயத்தசை வலுவிழப்பு, மாரடைப்பு போன் றவை நிகழ்கின்றன. ஐஸ்கிரீமில் அடங்கியுள்ள சர்க்கரையால் நீரிழிவு, அதிக இரத்த அழுத்தம் கூட ஏற்படுகிறது.

அதிக சர்க்கரையுடைய ஐஸ்கிரீம் மற்றும் குளிர்பானங்களை அருந்தும் போது அதை ஜீரணம் செய்ய உடனடியாக அதிகளவு இன் சுலின் சுரக்கிறது. இதனால் திடீரென்று உட லில் குளுக்கோஸ் அளவு குறைகிறது. இதன் வெளிப்பாடாக தலைவலி ஏற்படுகிறது.




சாப்பிட்ட பின்பு ஐஸ்கிரீம் உண்பது உணவைச் செரிக்க உதவுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். சாப்பிட்டவுடன் நீர் அருந்து வதே ஜீரணமாகப்போதுமானது.

ஜீரணத்துக்கும் ஐஸ்கிரீமுக்கும் தொடர்பு இல்லை.

அடுத்து நாம் விரும்பிச் சாப்பிடும் ஐஸ்கிரீம் நல்ல, சுத்தமான நீரில் தயாரிக்கப் பட்டதா என்பதை அறிய வாய்ப்பில்லை. எனவே இதில் கலந்துள்ள கிருமிகளால் நோய்த்தொற்று ஏற்படலாம்.

வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்தாலோ விளையாடிவிட்டு வந்தாலோ உட னேயே குளிர்சாதனப்பெட்டியைத் திறந்து குளிர்பானங்களை அருந்துகிறார்கள். அதிகமாகத் தாகம் எடுத்தால் இனிப்பூட்டப் பட்ட குளிர்பானங்களை அருந்துவது மிகவும் தவறு. இதனால் தாகம் தணியாது. அதில் கலந்திருக்கும் சர்க்கரைச் சத்து உடலை அதிகமாகக் கொழுப்பாக்கத்தான் பயன்படுகிறது. தாகம் எடுக்கும்போது நீர் அருந்துவது தான் மிகவும் சிறந்தது. நீர் தாகத் தைப் போக்கும். உடலில் இருந்து வியர்வையாக வெளியேறிய நீர்ச்சத்தை ஈடுகட்டும் அத்துடன் பசியும் அடங்கும்.

அதிக தித்திப்புள்ள பழச்சாறு அருந்துவதையும் தவிர்க்க வேண்டும். எலுமிச்சை மற்றும் சாத்துக்குடி சாறு அருந்தலாம். இதில் அதிகளவு நார்ச்சத்து உள்ளது. இப்பொழுது குறைந்தளவு கலோரியைக் கொடுக்கும் அதிக



இனிப்புடைய ப்ருக்டோஸ் கலந்து குளிர் பானங்கள் தயாரிக்கப்படுகின்றன. சிறிது அதிக மாக அருந்தினாலோ இது வயிற்று வலியைக் கொடுக்கும் தன்மையுடையது. ஒருவேளைக்கும் மேலாக குளிர்பானம் அருந்தினால் வயிற்று வலியாலும், வயிற்றுப் போக்கினாலும் அவதிப்பட வேண்டியதிருக்கும். ஐஸ்கிரீம் சாப்பிடுவதற்குப் பதிலாக பழங்கள் சாப்பிடலாம்.

வெயில் காலத்திக்கு ஏற்ற பானம் தண்ணீர்தான். நமது உடல் தசையிலும், மூளையிலும் 70 சதவீதம் நீர்தான் உள்ளது. இரத்தத்தில் 90 சதவீதம் நீர் உள்ளது. எலும்பில் கூட 20 சதவீதம் நீர் உள்ளது. அதிகம் நீர் அருந்துவதால் உடல் எடை கூட குறையும். எப்படியெனில், நீர் உடலில் உள்ள கொழுப்பை அகற்றி எரிபொருளாக்குகிறது. கழிவுப் பொருட்களை அகற்றுகிறது. உடலிலுள்ள நச்சுப் பொருட்களைக் கரைத்து வெளியேற்றுகிறது.


நீரை நேடியாக குளிர்சாதனப் பெட்டியில் இருந்து எடுத்து அதிகக் குளிர்ச்சியுடன் அருந்துவது தவறு. ஈறுகளுக்கும் பற்களுக்கும் இது கேடு உண்டாக்குகிறது. சளிச் சவ்வையும் செயல் இழக்கச் செய்கிறது. குளிர்ந்த நீருக்கு பாக்டீரியா மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்தும் தன்மை கிடையாது. ஆகவே, அதில் இருக்கும் நோய்க் கிருமிகள் அத்தனையும் உடலுக்குள் செல்லாதவாறு தொண்டையில் இருக்கும் டான்சில் சதை கிருமிகளை வடிகட்டி வைத்துக் கொள்ளும். நோய்க்கிருமிகளின் வீரியம் கூடும்போதோ, உடலில் சக்தி குறையும் போதோ நோய் தொற்றிக் கொள்ளும். ஆகவேதான், பலருக்கு ஐஸ் நீர் அருந்தியவுடன் சைனஸ் அல்லது டான்சில் அல்லது சளியோ ஜு ரமோ வருகிறது.




- பதினைந்து துளிகள் ஆரஞ்சு எண்ணெயுடன் அரைக் கப் பாதாம் எண்ணெய் கலந்து தொடைகளில் தடவிக் குளிக்கவும். அதிகப்படியான சதைகள் குறையும்.
- வேப்பிலையை விழுதாக அரைத்து எலுமிச்சம் பழச்சாற்றுடன் கலந்து முகத்தில் தடவி அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் பளிச்சென மாறும்.

## வழுவழுப்பான வசீகரம் உங்கள் வசம்.....

- பாலாடையில் சிறிது சர்க்கரை சேர்த்து முகத்தில் தடவித் தேய்க்கவும். சர்க்கரை ஊறும் வரை மென்மை யாகத் தேய்க்கவும். பிறகு குளிர்ந்த தண்ணீரால் கழுவிவிடவும். முகச் சருமத்தின் இறந்த செல்கள் நீங்கி முகம் வழுவழுப்பாகும்.
- ஐந்து டேபிள் ஸ்பூன் தேங்காய் எண்ணெய், ஒரு டேபிள் ஸ்பூன் நீலகிரித்தைலம், ஒரு டேபிள் ஸ்பூன் கிராம்புத்தைலம் ஆகிய அனைத்தையும் கலந்து தலையில் தடவி மசாஜ் செய்யவும் வேர்க் கால்கள் பலப்படும்.
- நான்கு டீஸ்பூன் கோதுமை மா, ஒரு டீஸ்பூன் புதினா விழுது, அரை டீஸ்பூன் நல்லெண்ணெய், ஒரு டீஸ்பூன் தண்ணீர் ஆகிய அனைத்தையும் குழைத்து சருமத்தில் எங்கெல்லாம் தேவையற்ற ரோம வளர்ச்சி இருக்கிறதோ அங்கு தடவவும். பதினைந்து நிமிடங்கள் கழித்து குளிர்ந்த தண்ணீரால் கழுவி விடவும். நாளடைவில் ரோமங்கள் உதிரும்.
- விளக்கெண்ணெய் மற்றும் ஆலிவ் எண்ணெயை சம அளவில் எடுத்து தலையில் தடவி மசாஜ் செய்த கொண்டு படுத்துவிடவும். மறுநாள் காலை சீயக்காய் போட்டு தலையை அலசிட அலை அலையான கூந்தல் உங்கள் வசம்.
- ஆலிவ் எண்ணெயை இலேசாக சூடாக்கி தலையில் தடவி மசாஸ் செய்த ஒரு பாலிதீன் பையைத் தலையில் கட்டிக் கொண்டு மசாஜ்செய்த சிறிது நேரம் கழித்து அலசினால் அளவுக்கதிகமான வறண்டு போன கூந்தல் மாறும்.
- பிளீச்சிங் செய்து கொள்ள பயமாக இருக்கிறதா? புதினா அல்லது கொத்தமல்லியை எடுத்து சாறு பிழிந்து அத்துடன் சிறிது தேன் மற்றும் எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறவிடவும். பிறகு முகம் கழுவிட முகம் பிளீச்



போலப் பளபளக்கும்.


- கற்றாழையின் உள்ளே இருக்கும் வெண்மையான சோற்றுப் பத ஜெல்லை முகத்தில் தடவிக் கொண்டு சிறிது நேரம் ஊறவிடவும். பிறகு முகம் கழுவிட முகம் நல்ல நிறம் பெறும். இது இயற்கையான சன் ஸ்கிரீனாகவும் செயல்படும்.
- முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் சிவப்பாக மாறும்.
- தாய்ப்பாலுடன் இளநீர் கலந்து கண்களுக்கடியில் தடவி மென்மையான மசாஜ் செய்து வந்தால் கண்களுக்கடியில் உள்ள கருமை நீங்கும்.
- சாதம் வடித்த கஞ்சியோடு (உப்பு சேர்க்காதது) சீயக்காய் தூளைக் கலந்து தலையில் தடவி சிறிது நேரம் ஊற விட்டு அலசிட கூந்தல் பளபளக்கும். நன்றாக வளரும்.
- எலுமிச்சம் பழத்தின் தோல்களைக் காயவைத்து பொடி செய்து கொள்ளவும். அதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து குழைத்து பாதங்களில் வெடிப்பு உள்ள இடங்களில் அழுத்தமாகத்



தடவி சிறிது நேரம் கழித்து கழுவிட பாதங்கள் அழகாகும்.

## உங்கள் முகப்பரு மறைய....!

பொதுவாக எண்ணெய்ப்பசை சருமம் உள்ளவர்களுக்கும், டீன்-ஏஜ், பெண்களுக்கும் பெரிய பிரச்சினையாக இருப்பது முகப்பரு மற்றும் கட்டிகள். இத்தகைய முகப்பரு மற்றும் கட்டிகள் வராமல் தடுக்கக் கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றலாம்.



இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மென்மையான ஸ்கிரப் அல்லது ஸ்கிரப் ஜெல் கொண்டு முகத்தில் மெதுவாகத் தேய்த்து சொர சொரப்பு தன்மையை எடுக்கலாம்.

வாரம் ஒரு முறை பியூட்டீசியனின் ஆலோசனையின் பேரில் தகுந்தபேஸ்பேக் உபயோகிக்கலாம்.

கைகளை அடிக்கடி கழுவிக் கொள்ள வேண்டும். இதனால் கைகளிலுள்ள பாக்டீரியாக்களினால் வரும் முகப்பருவிற்கு பிரச்சினை குறையும்.

அதிகப்படியாக சுரக்கும் எண்ணெய் தான் சருமப் பிரச்சினைக்கு முழுமுதற் காரணம். எனவே உணவில் எண்ணெய் பதார்த்தங்கள், எண்ணெயில் பொரித்தவை, இனிப்புப் பலகாரங்கள், கேக் போன்ற பேக்கரி உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். இதனால் சரும கழிவுகள் சருமத்துவாரம் மூலம் வெளியேற்றப்படும்.

சருமப் பிரச்சினைகளுக்கு, உடற்பயிற்சி இல்லாமலிருப்பதும் ஒருவகை காரணமாகும். தினமும் அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்வதனால் இரத்த ஓட்டம் சீராக்கப்பட்டு சருமம் பளபளப்பாகிறது.

பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

குளிர்பானங்களை அறவே விலக்கவும். அதற்குப் பதில் பழச்சாறு குடிக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

### மரவள்ளி வடை

15 வடை

*தேவையான பொருட்கள் :-*

மரவள்ளிக்கிழங்கு - 1/2 கி.கிராம்
கோதுமை மா - 1 மே.க. (நிரப்பி)
சிறிதாக வெட்டிய வெங்காயம் - 2 மே.க. (நிரப்பி)
சிறிதாக வெட்டிய பச்சைமிளகாய் - 2 மே.க. (நிரப்பி)
தனி மிளகாய்த் தூள் - 1 தே.க. (நிரப்பி)
உப்புத்தூள் - அளவிற்கு
தேங்காயெண்ணெய் - 1/4 போத்தல்

*செய்முறை :-*

மரவள்ளிக்கிழங்கை தோலுரித்துக் கழுவி ஸ்கிரேப்பரில் துருவி எடுத்துக் கொள்க.

இத்துருவலைப் பாத்திரத்திலிட்டு அரித்த கோதுமை மா, வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், மிளகாய்த்தூள், உப்புத்தூள் என்பவற்றைப் போட்டு நன்கு பிசைந்து குழைத்துக் கொள்க.

தாச்சியில் எண்ணெயைக் கொதிக்க வைத்து குழைத்து வைத்துள்ள கலவையைத் தேசிப்பழமளவு உருண்டைகளாகப் பிடித்து உள்ளங்கையில் வைத்து மெதுவாக அமர்த்திய பின் எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுத்துக் கொள்க.

இவ் வடைகளைச் சூடாகப் பரிமாறும்போது அதிக சுவையாக இருக்கும்.

# ஒரு தாய் மகள் 32

டாக்டரைக் கூப்பிட்டு நீ இப்படிப் பட்டினி கிடப்பதைச் சொல்லுவேன். நரம்பு வழியாக உனக்கு உணவு செலுத்துவார்கள்.” அவள் கையை இறுக்கமாகப் பற்றி எழுப்பினான்.

“சரி, சரி, வருகிறேன்” என்ற பேஜ் வேண்டா வெறுப்பாக அவனைப் பின் தொடர்ந்து சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றாள். அவளை நாற்காலியில் உட்கார்த்தி வைத்து விட்டு, அவன் சென்று இரண்டு கையிலும் ஏராளமான சிற்றுண்டி களைக் கொண்டு வந்தான்.

“மனசில் கஷ்டம் இருக்கும் போதுதான் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று எங்கள் நோர்வே நாட்டில் சொல்வார்கள். டானாவும் நானும் பிரிந்தபோது பல நாட்கள் எனக்கு உணவே பிடிக்கவில்லை. இருந்தாலும் வலுக்கட்டாயமாகச் சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தேன்.” என்றான் தாரென்ஸன். “இன்று நீ வீட்டுக்குப் போய்க் கொஞ்ச நேரம் தூங்கு. நீ வருகிற வரையில் பிராட் இங்கே ஆஸ்பத்திரிக்கு வந்து இருக்கட்டுமே?”

அதைக் கேட்கப் பேஜுக்குச் சங்கடமாக இருந்தது. “பிராட் இன்று ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்கும். காலையில் ஆண்டியை ஸ்கூலுக்கு அனுப்பி விடுவார். ஆனால் சாயந்தரம் அவளைத் திரும்ப அழைத்து வர வேண்டும். மறுபடி பேஸ்பால் விளையாடக் கூட்டிப் போக வேண்டும்....”

“அதை நான் பார்த்துக் கொள்கிறேன். என் மூத்த பையன் நிக்கிற்கு விடுமுறை முடியப் போகிறது. காலேஜுக்குப் போய்விடுவான். சின்னவன் பிஜான், அவனுடைய ஸ்கூலிலேயே இருந்து கொள்வான். என் பெண் க்ளோ இங்கே பத்திரமாக இருக்கிறாள். உனக்கு முடியாதபோது என்னிடம் சொல். ஆண்டி எங்கே போக வேண்டும் என்கிறானோ அங்கே அழைத்துப் போகிறேன். கவலைப்படாதே” என்றான் அவன் புன்னகையுடன்.

“பாவம், உங்களுக்குச் சிரமம்....”

“அதெல்லாம் ஒன்றுமில்லை.”

பேஜ் கொஞ்சம் கொஞ்சம் சிற்றுண்டிகளைச் சாப்பிட்டாள். அவளுடைய கவலைகளை மாற்றுவதற்காகத் தாரென்ஸன் தான் எழுதும் கதைகளைப் பற்றியும், நோர்வேயில் உள்ள தன் உறவினர்களைப் பற்றியும் பேசிக் கொண்டேயிருந்தான். ஆனால் பேஜின் எண்ணங்கள் ஆலிஸனைப் பற்றியும் பிராடைப் பற்றியுமே திரும்பத் திரும்ப ஓடிக் கொண்டிருந்தன.

“பிஜானுக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு பரீட்சை இருக்கிறது. அவனை அழைத்துப் போக வேண்டும். சீக்கிரம் வந்து விடுகிறேன். அதுவரை க்ளோவையும் பார்த்துக் கொள்.” என்று கூறிவிட்டுத் தாரென்ஸன் புறப்பட்டான்.

க்ளோவைத் தீவிர சிகிச்சைப் பிரிவான ஐஸியூவில் கொண்டு வந்து விட்டிருந்தார்கள். அங்கேயேதான் ஆலிஸனும் இருந்தாள். எனவே இருவரையும் ஒருசேரப் பார்த்துக் கொள்ள முடிந்தது. ஆனால் க்ளோ பிரக்ஞை இழந்த நிலையிலேயே இருந்தாள். பேஜ் வந்து நிற்பதே தெரியவில்லை. உணர்வு வந்து வலியினால் அவள் முனகும் போதெல்லாம் மறுபடி ஊசி போட்டுத் தூங்க வைத்தார்கள்.

பகல் உணவு நேரத்தின்போது பிராட் ஆஸ்பத்திரிக்கு வந்தான். ஆலிஸனின் நிலைமையைப் பார்த்து அவன் கண்ணீர் விடுவது வெளிப்படையாகவே தெரிந்தது.

இருவரும் வெயிட்டிங் அறைக்குத் திரும்பினார்கள்.

“ஸாரி பேஜ்.... உன்னை நினைத்து எனக்கு ரொம்பவும் வருத்தமாயிருக்கிறது. ஆலி இப்படி இருக்கிறாள் என்ற வேதனையோடு என் பிரச்சினையும் உனக்குச் சேர்ந்து விட்டது” என்றான் அவன்.

பேஜ் அவனுடைய வருத்தத்தை நம்பத் தயாராயில்லை. வெடுக்கென்று “எப்போது வீட்டை விட்டு வெளியேறப் போகிறீர்கள்? அந்த ஸ்டிபானியுடன் எப்போது போய்ச் சேர்ந்து கொள்ளப் போகிறீர்கள்?” என்றாள்.

வெயிட்டிங் அறை இப்போது ஒரே கூட்டமாக இருந்தது. அன்புக்குரியவர்களின்

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

உடல் நிலை பற்றிப் பயப்பட்ட நபர்களும், கவலைப்பட்ட உறவினர்களும் நெருக்கியடித்துக் கொண்டு போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

”பேஜ், ப்ளீஸ் மெல்லப் பேசு நம் விஷயம் இந்த ஆஸ்பத்திரி மொத்தத்துக்கும் தெரிய வேண்டுமா?” என்றான் பிராட்.

”ஏன்? தெரியட்டுமே? எற்கெனவே உங்கள் ஆபீஸில் எல்லாருக்கும் தெரிந்தாயிற்று. அது தவிர, எவ்வளவு பேர் உங்கள் இரண்டு பேரையும் சேர்த்து எத்தனை இடங்களில் பார்த்திருக்கிறார்களோ? நான்தான் பைத்தியக்காரி உலகத்துக்கெல்லாம் தெரிந்த அசிங்கத்தை தெரிந்து கொள்ளமால் இருந்திருக்கிறேன்.

பேஜின் குரல் உரத்துக் கொண்டே போயிற்று.

ஆஸ்பத்திரியில், அதுவும் பொவோரும் வருவோரும் நிறைந்திருக்கும் வெயிட்டிங் அறையில் உரக்கப்பேசுகிறோமே என்தை முதலில் பேஜ் பொருட்படுத்தவில்லை. பிறகு பல்லைக் கடித்துக் கொண்டு குரலை தாழ்த்திக் கொண்டாள்.

“ஏன்? நான் சொல்வதில் என்ன தப்பு? இவ்வளவு ஆன பிறகு நீங்கள் வீட்டை விட்டுப் பொவதுதானே மேல்! எதற்காகத் தயங்குகிறீர்கள்? உங்கள் மனசில் என்ன தான் நினைப்பு? என்னோடு தொடர்ந்து குடும்பம் நடத்தலாமா வேண்டாமா என்று தயக்கமா? அல்லது அந்தப் பெண் பிள்ளையை நம்பிப் போகலாமா என்ற தயக்கமா? அல்லது வீட்டை விட்டுப் போகப“ பயமாயிருக்கிறதா? என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் பிராட்? சொல்லுங்கள்!” என்று பொரிந்து தள்ளினாள்.

பிராட் மீண்டும் சங்கடத்துடன் சுற்று முற்றும் இருப்பவர்களை ஒருமுறை பார்த்துக் கொண்டான். “கடவுளே! அதெல்லாம் உனக்குத் தெரியாமலே இருந்திருக்கக் கூடாதா? தெரிந்ததுதான் தெரிந்தது, இப்படித் தான் தெரிந்திருக்க வேண்டுமா?” என்றான்.

“எப்படியும் தெரியாமலா போகும்? வெளியூர் போவதாகப் பொய் சொல்லி விட்டு நீங்கள் இங்கேயே அந்த ஸ்டிபானியிடம் கொட்டம் அடித்துக் கொண்டிருப்பதை வேறு யாராவது பார்த்துச் சொல்லியிருப்பார்கள். இல்லா விட்டால் நானே எங்காவது உங்கள் இரண்டு பேரையும்சேர்த்து பார்த்திருப்பேன். என்ன சொல்ல வருகிறீர்கள்? உங்கள் காதல் விவகாரம் ரொம்ப சீரியஸாக முற்றி விட்டது என்று நேற்று ராத்திரி சொன்னீர்களே? அப்படி இல்லையா? நான் தான் தப்பாகக் காதில் வாங்கிக் கொண்டு விட்டேனா?”

‘ஆமாம், நீ தப்பாகப் புரிந்து கொண்டு விட்டாய்’ என்று அவன் சொல்ல மாட்டானா என்று அவள் உள்ளம் ஏங்கியது. அதே சமயம், அவள் மனத்தின் இன்னொரு பகுதி இனி இவர் என்ன சொன்னாலும் தனக்கும் இவருக்கும் உள்ள உறவு கெட்டது கெட்டதுதான் என்பதை உணர்ந்திருந்தது.

(தாய் தொடர்வாள்.....)

**சென்ற வாரம்**

ஆஸ்பத்திரிக்கு வந்த பேஜ் தனது மற்றைய கவலைகளை எல்லாம் ஒரு புறம் வைத்துவிட்டு மகளை பார்த்து அழுது நிற்கிறாள். மகளின் நிலை குறித்து அவள் மிகவும் கவலை அடைந்தவளாகக் காணப்படுகிறாள்.




## தாய் சொல்லைத் தட்டாதே!



மணிரத்தினம் டைரக்ஷனில் ஹேமமாலினியின் செல்ல மகள் இஷா தியோல் நடிக்கிறார். முன்னாள் பாலிவூட் கனவு நாயகியான ஹேமமாலினி தன் மகள்களை இஷ்டம் போல் ஆட்டுவிக்கிறாராம். படத்தின் சப்ஜெக்ட்டிற்கு தகுந்த மாதிரி ஆக்ஷனையும் சொல்லிக் கொடுப்பாராம். பாலிவூட்டில் தன் மகள் சிறந்த ஹீரோயினாக வரவேண்டும் என்பதற்காக ஹேமாவும் வயதான காலத்தில் ஏகத்துகக்கு ரிஸ்க் எடுத்துவருகிறார். மணிரத்தினம் போன்ற டைரக்டர்களிடம் ‘ஒர்க்’ பண்ணும் போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் இஷா தியோலுக்கு பாடங்கள் எடுத்து வருகிறார் ஹேமா. இஷா தியோலை ‘ஜூனியர் ட்ரீம் கேர்ள்’ளாக மாற்றிக் காட்டுவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறார்.

இஷா தியோல்

## துணிச்சல் குமார்



அருண்குமார் - பாயல்

பிரசாத் ஸ்டூடியோவில் ‘துணிச்சல்’ படத்திற்காக அருண்குமாரும், பாயலும் பின்னிப் பிணைந்து ஆடும் ஒரு பாடல் காட்சியை எடுத்துக் கொண்டிருந்தார்கள். இருட்டில் ஓரமாய் நின்று சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன் (பெருமூச்சுடன்) ஆடிமுடித்துவிட்டு வந்த அருண்குமாரிடம் ’ஆமாம். அது என்ன டைட்டில் ‘துணிச்சல்?’ என்றேன்.

இந்தப் படத்தில் எனக்கு ஒரு துணிச்சவ் கேரக்டர் டிவி. மீடியாவில் வேலை செய்கிறேன். அங்கே வேலை செய்யும் பாயல், என்னை விரும்புகிறார். எனக்கு அவரைப் பிடிக்காது. அவரோ துரத்தித் துரத்தி லவ் பண்ணுகிறார். என்னை நினைத்து கனவு காண்கிறார் அந்தப் பாடல்தான் நீங்கள் பார்த்தது’ என்று சொல்லிவிட்டு பாயலை அழைத்து அறிமுகம் செய்து வைத்தார்.

’நீங்கள் ரொம்ப கவர்ச்சி மேடம்... ஹி...ஹி’ என்றேன்.

போதும் வழியுது... தொடச்சுக்குங்க...’ என்றார் அருண்குமார் என் காதில்.

## மாலியின் கதக் ஆட்டம்



மெய்ன் மாதுரி தீட்சித் பொத்தி ஹூன் படத்தில் ஏறத்தாழ மாதுரியாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறாராம் பாலிவூட் கவர்ச்சி ஜில்பான்ஸ் அந்த்ராமாலி. டாப் டான்ஸ், ஜான் டான்ஸ் மட்டுமல்லாமல் பரத நாட்டியம் அந்த்ராமாலிக்கு அத்துப்படி கதைப்படி மாதுரிக்கு தெரிந்த கதக் ஆட்டத்தையும் ஆடி கேரக்டரை கம்பீரமாக நிமிர்த்தியிருக்கிறாரரம். இதற்காக கதக் ஆட கற்றியிருக்கிறார் அந்த்ரா. கேரக்டருக்காக என்ன வேண்டுமானாலும் பண்ணலாம் என பாலிவூட் ஹீரோயின்கள் சொல்வது அதைத் தானே?

மாதுரி

# சமாதானத்தின் இன்றைய நிலை!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உரிமை மடலுக்குப் பதிலாக 20.05.2005 பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை......

*எமது மக்களின் சமாதானக்கனவுகள்*
*இருண்ட சிறைக்கதவுகளுக்குள்*
*இப்போது விலங்கிடப்பட்டுள்ளது!*
*பூட்டிய சிறையின் திறவு கோலை*
*தாங்களே திட்டமிட்டு தூரத்தொலைத்துவிட்டு*
*இங்கு சமாதானக்கனவுகளை*
*அவர்களே தேடிக்கொண்டிருக்கிறார்கள்!*

**இது**தான் இன்றைய சமாதானத்தின் நிலை! சமாதானத்தின் திறவுகோலை யார் திட்டமிட்டுத் தொலைத்துவிட்டார்களோ அவர்களே அதைத் தேடிக்கொண்டிருக்கும் வேடிக்கையான.... விந்தையான நிகழ்வுதான் இங்கு நடந்து கொண்டிருக்கின்றது!

கோயில் திருவிழா ஒன்றில் வைத்து ஒரு பெண்ணின் சங்கிலியைத் திருடிவிட்டு திருடன் ஒருவன் தப்பி ஓடிக்கொண்டிருக்கின்றான்! திருடனைப் பிடியுங்கள்!.... திருடனைப் பிடியுங்கள்!... என்று சத்தமிட்டவாறு உண்மையாகவே திருடனைத்துரத்தும் மக்கள் கூட்டத்தில், திருடர்களும் சேர்ந்து திருடனைப் பிடியுங்கள்!.... திருடனைப்பிடியுங்கள்!... என சத்தமிட்டவாறு துரத்திக்கொண்டிக்கிறார்கள்....! சிலர் பொழுது போக்கிற்காகவும் திருடனைத் துரத்து கிறார்கள்...!

இப்படியாகத்தான் சமாதானம் சமாதானம் என்ற கோசங்களை எழுப்பியபடி சமாதானத்திற்கு எதிரானவர் களும் சமாதானத்தைத் தேடுவதாக கூறிக்கொண்டு இன்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள்!

இன்று சமாதானத்தின் எதிரிகள் யார்?.... எமது மக்களின் சமாதானக்கனவுகளை உடைத்துப்போட்ட வர்கள் யார்? சமாதானத்தை நோக்கிய பயணத்தில் அடியெடுத்து வைக்கும் நம்பிக்கைகளின் கால்களுக்கு சங்கிலி பிணைத்து அவைகளை நகர முடியாது கட்டி வைத்திருப்பவர்கள் யார்...?

ஒரு காலம் இருந்தது! பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டது! டட்லி - செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டது! எழுதிய ஒப்பந்தங்கள் ஈரம் காய்வதற்கு முன்பாகவே அவைகள் கிழித்தெறியப்பட்டன!

அது ஒரு காலம்! பேரினவாத கட்சிகள் என்று அன்று கூறப்பட்டவைகளால் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள், அதே பேரினவாதம் என்ற பெயரில் இருந்த எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பலைகளால் அவ் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட காலம்!

அந்த பேரினவாதத்திற்கு எதிராகத்தான் நாமும் ஆயுதம் ஏந்திய போராட்டக்களத்தில் நின்றிருந்தோம்!

எமது மக்களின் உரிமைகளை அடைவதற்காக.... எமது தேசத்தின் விடுதலையை அடைவதற்காக..... எமது அரசியலுரி மைகளுக்காக.... நாம் ஆயுதம் ஏந்திப்போராடியிருக்கிறோம்!

உண்மையில் பேரினவாதம்தான் எமது மக்களின் உரிமைகளுக்கும் 'சமாதானக்கனவுகளுக்கும் அன்று பிரதான தடையாக இருந்தது!

ஆனால், அந்த நிலை என்பது இலங்கை - இந்திய ஒப்பந்த நிறைவேற்றத்திற்குப் பின்பு தலைகீழாக மாறி விட்டது என்பதை நான் இங்கு மீண்டும் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன்!

எமது மக்களின் உரிமைகளை மறுப்பவர்கள் யார் என்ற விடயத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்!... அதற்கு பின் என்று இரண்டு அத்தியாயங்கள் இருக்கின்றன!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய வரலாறுகள் போரினவாதம்தான் எமது மக்களின் சமாதான கனவுகளை சிதைத்து வந்தது என்பது உண்மை!

ஆனால், அதற்கு பிந்திய வரலாறுகள் யாவும் விடுதலை என்றும் சமாதானம் என்றும் தமிழ் தேசியம் என்றும் கூறிக்கொண்டு யார் துப்பாக்கிகளோடு திரிகின்றார்களோ அவர்களே எமது மக்களின் சமாதானக்கனவுகளுக்குப் பிரதான தடையாக இருந்து வருகின்றனர்!

உள்ளங்கைகளில் சமாதானப்புறாக்களையும் உள்ளத்தில் சமாதானக்கனவுகளை எரித்து சாம்ப லாக்கும் வக்கிரங்களையும் வளர்த்துக்கொண்டு போலி வேடமணிந்து வரும் புலிகளுக்கு புகழ்பாடும் கூட்டத்தினரும் சமாதானத்திற்கு தடையாக இருக்கின்றனர்.

இலங்கை - இந்திய அரசுகளால் தமிழ் பேசும் மக் களுக்கென உருவாக்கப்பட்டதுதான் வடக்கு கிழக்கு மாகாணசபை!

அந்த மாகாண சபையோடு ஈ.பி.டி.பி. எந்த விதத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பதற்காக நாம் அதை எதிர்த்திருக்கவில்லை! அதில் உள்ள நடைமுறை தவறுகளைத் திருத்திக்கொண்டு அதை ஒரு உன்னத இலக்கு நோக்கி நகர்த்தியிருக்கமுடியும் என ஈ.பி.டி.பி. நம்பியிருந்தது!

ஆனால் புலிகள் என்ன செய்தார்கள்?....அந்த மாகாண சபைகளைக் கலைக்கவேண்டும் என்று கங்கணம் கட்டி நின்றதன் மூலம் சமாதானக்கனவுகளைப் புலிகள் சிதறடித் தனர்!



டக்ளஸ் தேவானந்தா

சோனியா காந்தி

தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியாவிடம் ஒப்படைகின் றோம் என சுதுமலைப் பொதுக் கூட்டத்தில் கூறிய பிரபாகரன், இந்தியப்படையை வரிந்து கட்டி சண்டைக்கு இழுத்ததன் மூலம் எமது மக்களுக்கு புலிகள் பேரழிவுகளை ஏற்படுத்தியிருந்தனர்! தமிழனும் சிங்கள வனும் இந்த மண்ணின் மைந்தர்கள். இந்தியப்படைக்கு இங்கென்ன வேலை என்று கபடத்தனமாக கூறி அவர்களை வெளியேறச்சொன்ன புலிகள், பின்நாட்களில் ராஜீவ் காந்தியை கொன்றொழித்து இந்தியாவை எமது மக்களின் பகைமை நாடாக ஆக்கிக்கொண்டனர்!

*அப்போது புலிகள் பிரேமதாசா அரசோடு பேசினார்கள்!* அதற்கு என்ன நடந்தது?... யாருடன் பேசுவதற்காக கைகுலுக்கி நின்றார்களோ அவரது உயிரைப் பறித்ததன் மூலம் எமது மக்களின் சமாதானத்திற்கு விரோதமாகவே புலிகள் நடந்து கொண்டனர்!

அதன்பின்பு 1994 இல் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களோடு பேசினார்கள்! யுத்த நிறுத்த சூழலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திய புலிகள், தாமாக வரிந்து கட்டி படையினரை யுத்தத்திற்கு இழுத்தார்கள்! அதன்மூலம் சமாதானத்திற்கான வாய்ப்பினை புலிகளே சிதறடித்திருந்தனர்.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூறி காட்டுக்குள் இருந்து நாட்டுக்குள் வந்த புலிகள், நாட்டுக்குள்ளேயும் காட்டுத்தர்பார் நடத்தி வருகிறார்கள்!.................

* 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இலங்கைப் படையினர் தமிழ் மக்கள் மீது யுத்தத்தைத் தொடுத்தார் களா? இல்லையே! பருத்தித்துறை தொடங்கி பொத்துவில் வரை வாழும் தமிழ் பேசும் மக்கள், சந்தோச மாகவும் இயல்பாகவும் வாழத்தொடங்கினர். ஆனால் யுத்த காலத்தைவிடவும், சமாதான காலமென்பது மோசமானது என்ற தமிழ் பேசும் மக்களின் அனுபவத்திற்கும் முடிவிற்கும் யார் காரணம்?

* ஹிட்லரின் அராஜகத்தை உலகு ஒன்றுபட்டு நின்று முறியடித்த 60ஆவது வருடத்தை நினைவு கூருகின்றோம். ஹிட்லரின் வாரிசு ஒன்று தமிழ் மக்களுக்குள் வளர்ந்து நிற்கிறது. புலி அடிமைத்தனத்திற்குள் தமிழ் மக்கள் வாழ வேண்டியுள்ளது. எந்த மாற்றுக் கருத்துக்களையும் அங்கீ கரிக்க முடியாத, பொறுத்துக்கொள்ள முடியாத பாசிஸம் தலைவிரித்தாடுகிறது. சமாதானத்தின் பெயரால், தமிழ் தேசியத்தின் பெயரால் புதிய ஹிட்லருக்கு பலம் சேர்க்கப்பட்டிருக்கிறது. நவீன மனித சமுதாயத்தில் கொலை செய்வதற்குப் பிரபாகரனுக்கு தமிழ் மக்களின் பேரால் லைசென்ஸ் வழங்கியது யார்?

* தமிழர்களைத் தமிழர்களே கொலை செய்தது, தமிழர் பிரதேசங்களில் தமிழ் மக்களின் நிம்மதியை இழக்கச்செய்தது யார்? புலிகள்தானே!

* சமாதானத்தின்பெயரால் காட்டுக்குள் இருந்து, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்த புலிகள், அரசியல் பணி செய்ய வந்ததாகக் கூறப்பட்டது. புலிகளின் அரசியல் பணி எதுவாக இருந்தது என பட்டியல் இட்டுப்பார்த்தால்,

- சிறுவர்களைப் புலிப்படைக்கு பிடிப்பது!
- மக்களிடமிருந்து வரியின் பெயரால் கப்பம் வசூலிக்கும் சுரண்டலை இலகுபடுத்தியமை!
- காட்டுக்குள் இருந்தபோது அச்சுறுத்த முடியாமல் இருந்தவர்களின் வீட்டுக்கதவைத் தட்டி காரியம் சாதிப்பது!
- மாற்று ஜனநாயக சக்திகளை, பொதுமக்களை கொலை செய்வது.
- மக்கள் பணத்தில் உல்லாசமாக உலகை சுற்றி வருவது! புலம் பெயர்ந்தவர்களிடம் பொய் சொல்லி பணம் கரப்பது.
- இவைகள்தான் சமாதானத்தின் பெயரால் புலிகள் செய்த அரசியல் பணிகள்.

* புலிகள் ஆயுதங்களைக் கைவிடாத மன நோயாளிகள். ஆயுத ஆட்சிக்கு வழிபாடு நடாத்தும் யுத்த வெறியர்கள். பிரபாகரன் ஒரு அரசியல் குற்றவாளி. யுத்தத்தினபெயரால் ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை அழித்த பிரபாகரன், சமாதான காலகட்டத்தில் மக்கள் மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டிய நபர். புலிகள் இன்றைய நவீன மனித சமூகத்தின் பண்புகளுக்கும், அரசியல், சமூக வழிமுறைகளுக்கும் எதிரான சக்தி என்பதில் எமக்கு எந்தவிதமான சந்தேகமுமில்லை.

* இன்றும் கூட புலிகள் தமது வழிமுறைகளை, பாசிஸத்தை கைவிடவேண்டும் என்றே நாங்கள் வலியுறுத்துகிறோம். தமிழ் மக்களுக்குள் புலிகளை ஜனநாயக வழியில் சந்திப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்! புலிகளுக்கு தமிழ் மக்களின் மீது, தமது அரசியலின் மீது நம்பிக்கை இருக்குமானால் ஜனநாயக சூழலில் புலிகள் எம்மைச் சந்திப்பதற்கு தயாராக வரட்டும். மக்களின் தீர்ப்பை மாண்புடன் ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், மோசடித்தனமாக மக் களின் பெயரால் தங்களுக்குத் தாங்களே வாக்களிக்கும் நிலைமையினை, தீர்ப்பளிக்கும் செயலினை கைவிட்டு நேர்மையோடு எம்மைச் சந்திக்க வரவேண்டும்!

* நாங்கள் புலிகளின் பாசிஸ சர்வாதிகாரத்திற்கு எதிராக மட்டும் குரலெழுப்புபவர்களல்ல! புலிகளின் பாசிஸ கட்டமைப்பை எதிர்க்கின்ற அதே வேளை, தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு மாற்றுத்தலைமையினை முழுமையாக ஏற்படுத்தவே ஈ.பி.டி.பி. இன்று களத்தில் நிற்கிறது! அதற் காக நீடித்ததும், நியாயமானதுமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துபவர்கள். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக எமது உயிர்களைக்கூட அர்ப்பணிப்பதற்கு தயாராக இருப்பவர்கள். எமது பயணத்தில் உறுதியான அரசியல் நிலைப்பாட்டினையும் செயற்பாட்டினையும் கொண்டிருப்ப வர்கள்.

* ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்ந்தளிப்பின் ஊடாக, வடக்கு - கிழக்கு பிராந்தியத்திற்கான சமஷ்டி ஏற்பாட்டினை வலியுறுத்துபவர்கள். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதே எமது கட்சியினதும், தமிழ் மக்களினதும் நிலைப்பாடாகும்.

* புலிகளின் ஆயுத அடாவடித்தனத்திற்குப் பயந்து, தமிழ் மக்களை ஆளும் அதிகாரத்தினை புலிகளிடம் வழங்க முடியாதென்பதனை சிங்கள சமூகம் பொறுப்புடன் உணர்தல் வேண்டும். புலிகளின் பிரச்சினைக்கு ஒரு தீர்வும், தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் ஏற்பாடும் வேண்டும். சிங்கள அரசியல் தலைமைகள் இவ்விரண் டையும் ஒன்றாக குழப்பி விடக்கூடாது. இதனைத்தான் நாம் நீண்டகாலமாக அரசியல் அரங்கில் வலியுறுத்துகிறோம். புலிகளுக்குத் தேவை யுத்தம். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்குத் தேவை கௌரவமான சமாதானம், நிம்மதியான வாழ்வுக் கான அரசியல் தீர்வும்.

* தினமும் மாற்று ஜனநாயக சக்திகளையும், அப்பாவிப் பொதுமக்களையும் கொலை செய்யும் புலிகளை வழிபாட்டுத் தெய்வங்களாக்கவே புலிகளுக்கு வால் பிடிக்கும் சிலர் முயன்று வருகின்றனர். இது மனித வரலாறு கண்டறியாத மாபெரும் ஏமாற்றுத்தனம்.

* புலிகளினால் இதுவரை கொல்லப்பட்டவர்களுக்கு சமாதானத்தின் பெயரால் நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம்! தமது இன்னுயிரை ஈர்த்த அவர்களின் மனைவியர்களுக்கு, குழந்தைகளுக்கு, சுற்றத்தார்களுக்கு, அவர்களை நேசித்தோருக்கு நம்மிடம் உள்ள பதில்தான் என்ன?

* புலிகளிடம் தமிழ் மக்களை அடிமைகளாக்க இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை பயன்படுமானால், அந்நோக்கத்திற்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்படுமானால், 'சமாதானம்' என்பதன் உள்ளார்ந்த அர்த்தங்களுக்கு கேடு விளைவித்து வருகிறோம் என்பதே யதார்த்தமாகும்.

* 2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குப் பின், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருவருக்கொருவர் பேதமின்றி, கடந்தகால முரண்பாடுகளை மறந்து நெருங்கி வரத் தொடங்கினர். மக்களின் ஆர்வம், யுத்தத்தின் மீதான வெறுப்பாக வெளிப்படத் தொடங்கியது. மக்களின் இந்த மனமாற்றத்தைக் கண்ட புலிகள், தமது இருப்புக் குறித்து பெரிதும் அஞ்சினர். இதனால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்குள் மோதலையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்த முடிந்தளவு அனைத்துக் காரியங்களையும் செய்தனர்.

தமிழர்களுக்கு எதிரானவர்களாக சிங்களவர்களை யும் முஸ்லிம்களையும் சித்திரிப்பதற்கு பெருமளவில் தமிழ் ஊடகங்களைப் புலிகள் பாவிக்கத் தொடங்கினர். இத்தகைய பணிகளுக்காக மக்களிடமிருந்து வரியின் பேரால் கப்பமாக பெற்ற கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை அள்ளி இறைத்தனர். ஆட்களைக் கடத்தினர், கொலை செய்தனர், ஆர்ப்பாட்டம் நடாத்தினர், குண்டு வீசினர்.

ஏனெனில், மக்கள், இன, மத, மொழி வேறுபாடுகள் கடந்து, மனிதர்கள் என ஒன்றுபட்டால், தமது இயக்கத்திற்கு வந்தது வினையென்பது புலிகளுக்கும், பிரபாகரனுக்கும் நன்கு தெரிந்த உண்மையாக உள்ளது.

* சிங்கள மக்களை முடியுமானவரை தமிழ் மக்களின் எதிரிகளாகச் சித்தரிப்பதில் யுத்தகாலத்தில் மட்டுமல்ல, சமாதான காலத்திலும் புலிகள் கொள்கை யாகக் கொண்டிருந்தனர். புலிகளின் பிரபல்யமான கவிஞர் புதுவை இரத்தினதுரை 2003இல் சமாதான காலத்தில் இப்படி ஒரு கவிதை எழுதினார்.

*சிங்களக் கிணறுகள் யாவும்*
*சீக்கிரத்தில் ஊற்றடைக்கும்*
*சிங்களத்தின் கருப்பையில்*
*இனிக் கரு தங்காது*

இதுதான் புலிகளின் சமாதானம் பற்றிய பார்வையா?...

* இச்சபையில் நான் கேட்கிறேன் சமாதான உடன்பாடு எட்டப்பட்டு 3 வருடங்கள் கடந்து விட்டது. 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. எங்கேயாவது ஓரிடத்தில் புலித்தலைமை, இந்த சமாதானப் பேச்சில் தமக்கு நம்பிக்கை யுள்ளது என உளப்பூர்வமாக தெரிவித்துள்ளதா? எனக்கேட்கிறேன்! சமாதானத்திற்காக தமிழ் மக்கள் உழைக்க முன்வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான எதிர்க்கருத்துக்களையே கூறி, தமிழ் மக்களின் வாழ்வை யுத்த சூழலுக்குள் வைத்திருப் பதற்கே புலிகள் முனைந்து வந்துள்ளனர்.

* சமாதானத்தின் பெயரால் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் எமது 43 உறுப்பினர்களை நாம் இழந்துள் ளோம். எமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தொடக்கம் ஆதரவாளர்கள் வரை புலி களால் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றனர். சமாதானத்தின் பெயரால் நாங்கள் சந்தித்துக் கொண்டி ருக்கும் துயரம் இது. எமது சிரேஷ்ட உறுப்பினர் பால நடராஜ ஐயர் கொலை தொடர்பாக பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் இப்படி எழுதினார். இக்கட்டுரையை நீங்களும் சன்டேலீடரில் வாசித்திருக்கலாம்.

சின்னபாலாவின் மரணத்துக்கு சில வாரங்கள் முன்னதாக அவரது முன்னாள் சகாவும் தற்போதைய புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான வே.பாலக்குமார், கொழும்பில் வாழ்ந்த சின்னபாலாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஈ.பி.டி.பி. யின் அரசியலிலிருந்து ஒதுங்குமாறும் முடிந்தால் வெளிநாடு செல்லுமாறும் வே.பாலகுமார் தனது பழைய நண்பருக்கு 'புத்திமதி சொன்னார்'. சின்னபாலா உறுதியாக அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

அங்கே அப்பொழுதே அவர் தலைவிதி நிர்ணயிக்கப் பட்டு விட்டது. எமதர்மன் தனது தூதுவர்களை, கிங்காதரர்களைப் பாசக் கயிறோடு அனுப்பிச் சின்னபாலாவின் உயிரை எடுப்பதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தமையே இவர்களது சம்பாசணை குறித்து நின்றது. அந்த நாள் ஆகஸ்ட் 16ஆம் திகதியும் வந்தது. மிலேச்சத்தனமாக மட்டுமல்ல, மிகக் கொடூரமாகவும் சின்ன பாலாவின் உயிர் பறிக்கப்பட்டது. அவர் தனது மனைவி ஜெயதீஸ் வரியையும் மூன்று புதல்விகளையும் விட்டுப்பிரிந்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, எமது தற்பாதுகாப் புக்கு வைத்திருந்த ஆயுதங்களை சமாதானத்தின் அர்த்தத்தைப் பலப் படுத்த நாம் கையளித்தோம். சமாதானமே எமது தற்பாதுகாப்பு கவசமாகும் என நம்பினோம், ஆனால் நடந்தது கொண்டிருப்பது என்ன?

என்னைக் கொல்வதற்கு புலிகள் தற்கொலை யாளியை அனுப்பினர். புலிகளின் கொலை வெறியில் இருந்து நான் தப்பி னாலும் பல உயிர்கள் அநியாயமாக பலிகொள்ளப்பட்டது. பிரபா கரன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வந்ததன் அர்த்தம் இதுதானா? சமாதானத்தின் உண்மையான அர்த்தத்தைப் புலிகள் தொலைத்து விட்டு, இருட்டுக்குள் கறுப்புப்பூனையைத் தேடிக்கொண்டிருக் கிறார்கள் என்றுதான் எமது கட்சி கருதுகிறது.

சமாதானமென்பது புலிகளின் அகராதியிலேயே இல்லை, ஆனால், தமிழ் மக்களுக்கு நீடித்த சமாதானமும் நிம்மதியான வாழ்வும் தேவைப்படுகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்....)

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் இரட்டை வேடங்கள்

**ஈழமக்கள்** புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் பிரிவான மக்கள் விடுதலை படையின் தளபதி டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்துக்கள் அதாவது, ஜனாதிபதி ஜெயவர்த்தன தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்தபோதுதான் அமிர்தலிங்கத்துக்கு உறைத்தது. "இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த முயற்சியையும் நாம் வ்ரவேற்போம். ஆனால் இலங்கையின் சிங்களப் பேரினவாத அரசுகளை நம்ப நாம் தயாரில்லை. நாங்கள் தூக்கும் ஆயுதங்கள் மட்டும்தான் பேரினவாதிகளை அடிபணிய வைக்கும்" என்று டக்ளஸ் தேவானந்தா அடித்துச் சொன்ன வார்த்தைகள் தலைவர் அமிர்தலிங்கத்துக்கும் சுட்டிருக்கும். அநுரா பண்டாரநாயக்கா சர்வகட்சி மாநாடு தொடர்பாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் இரட்டை வேடம் தொடர்பாகவும் தெரிவித்த கருத்துக்களை தலைவர் அமிர்தலிங்கத்திடம் எடுத்துக்கூறி, அவரது கருத்துக்களை நான் (கட்டுரையாளர் சபாரத்தினம்) கேட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி இலாபம் பெற சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நடத்திய போட்டா போட்டியின் காரணமாகவே தமிழ் மக்கள் விரக்தியடைந்தனர். அதனாலேயே அவர்கள் தனிநாடு கோரத் தலைப்பட்டனர். இந்த இரு கட்சிகளும் பொதுவான நிலைப்பாடொன்றினை எடுத்து தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வுகாணத் தவறினால் இந்த நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பாவித்து இந்த இரு கட்சிகளும் அரசியல் போட்டிகளில் ஈடுபடுகின்றன. இந்த அரசியல் விளையாட்டில் அவர்கள் ஈடுபடுவதால் இந்த நாட்டு சிங்கள சமூகமுமே சீரழியும்" என்று அமிர்தலிங்கம் என்னிடம் சொன்னார். மிகுந்த தூரநோக்குடன் தலைவர் அமிர்தலிங்கம் கூறிய கருத்துக்கள் இன்றும் கூட இலங்கை அரசியலில் மிகப் பொருத்தமாகவே இருக்கிறது.

சர்வகட்சி மாநாடு நடைபெறுவதற்கு இரு தினங்கள் முன்னதாக, அதாவது 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், யோகேஸ்வரன் ஆகியோர் யாழ்ப்

**1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபதாம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வுத் தேவை தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஜெயவர்த்தன அறிவித்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஒரு கமிட்டியும் குறைபாடுகள் பற்றியும் ஆராய மற்றொரு கமிட்டியும் உருவாக்கப்பட வேண்டுமென்று ஜெயவர்த்தன தெரிவித்தார். ஜெயவர்த்தனவின் இந்தப் பேச்சு அமிர்தலிங்கத்தை அதிர்ச்சியும் ஆத்திரமுமடைய வைத்தது. எந்தவொரு இணக்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி வரவில்லை. அப்படியொரு இணக்கம் ஏற்பட்டதாக எமக்குத் தெரியாதென்று அமிர்தலிங்கம் எதிர்ப்புத் தெரிவித்தார்.**

பாணத்துக்குச் சென்றனர். சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றக்கூடாதென்று வற்புறுத்தும் சுவரொட்டிகள் யாழ்ப்பாணமெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. தனிநாடு கோரிப் போராடும் தமிழ் இளைஞர்களே இந்த சுவரொட்டிகளை ஒட்டியிருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மூவரும் யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்றபோது மாணவர்கள் கூக்குரலிட்டுக் கேலி செய்தனர். அப்போது யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நான்கு மாணவிகளும் ஐந்து மாணவர்களும் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த மாணவ, மாணவிகளையும் கூட்டணித் தலைவர்கள் பார்வையிட்டனர்.

(அரசியல் தொடர்)

1983 ஜுலை இன சங்காரம் இடம்பெற்று ஆறு மாதங்கள் கூட முடிவுறாத நிலையில் இலங்கை அரசாங்கத்தோடு தமிழர் விடுதலைக் கூட்டணி சமாதானப் பேச்சு நடத்துவதைப் பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் குறிப்பாகத் தமிழீழ இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கடுமையாக எதிர்த்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பியதும் கூட்டணியின் அரசியல் பீடம் கூடி சர்வகட்சி மாநாடு பற்றி ஆராய்ந்தது. பலத்த வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதென்று கூட்டணியின் அரசியல் பீடம் தீர்மானித்தது.

ஜனவரி பத்தாம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத்தினைச் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் ஐக்கிய முன்னணியும் பகிஷ்கரித்தன. அரசாங்கம் தனது யோசனைகளைச் சமர்ப்பிக்கத் தவறியதாலேயே மாநாட்டைப் பகிஷ்கரித்ததாக இந்த இரு கட்சிகளும் காரணம் கூறின. கொழும்பிலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்




பத்தாம் திகதி காலை பத்து மணிக்கு மாநாடு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த மாநாட்டுக்கு வருகை தந்த தன்னை ஜனாதிபதி ஜெயவர்த்தன புன்முறுவலோடு வரவேற்றாரென்று அமிர்தலிங்கம் பின்னர் என்னிடம் (சபாரத்தினத்திடம்) தெரிவித்தார். பிரதமர் பிரேமதாஸா மாநாட்டு நிகழ்ச்சி நிரல் பற்றிய அறிக்கையொன்றினை அங்கு வாசித்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தன தனது உரையில் மூன்று முக்கிய இலக்குகளோடு அந்த மாநாடு கூட்டப்பட்டதாகக் கூறினார். முதலாவதாக, நாட்டின் இறைமையும் சுதந்திரமும் பேணப்பட வேண்டுமென்று அவர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

வலியுறுத்தினார். இரண்டாவதாக ஒற்றையாட்சியும் பிரதேச ஒருமைப்பாடும் தொடர்ந்து பேணப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். மூன்றாவதாக, சகல விதமான வன்செயல் நடவடிக்கைகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடலுக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு கட்சியும் தமது அறிக்கைகளை வெளியிட முதல் சில நாட்கள் ஒதுக்கப்பட்டன. அமிர்தலிங்கம் தனது நீண்ட உரையில் முக்கியமாக இரு விடயங்களை வலியுறுத்திப் பேசினார். தமிழர்கள் வரலாற்று ரீதியாக, கலாசார ரீதியாக, மொழிரீதியாக, பிராந்திய ரீதியாக ஒரு தனித்த தேசிய இனமென்பதை அமிர்தலிங்கம் முதலில் வலியுறுத்தினார். அவர்கள் சிங்கள தேசத்தினருடன் சமபங்குதாரர்களாக வாழ விரும்புகின்றனர். ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்று அமிர்தலிங்கம் கூறினார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைக் காணவென சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளையும் அழைத்த ஜனாதிபதி ஜெயவர்த்தன திடீரென மதத் தலைவர்களையும் ஏனைய குழுவினரையும் இச் சர்வகட்சி மாநாட்டுக்கு அழைத்தார்.

பௌத்த மதத்தினதும் சிங்கள இனத்தினதும் பாதுகாவலர்களாகத் தம்மை வர்ணித்துக் கொண்ட பௌத்த மகாசங்கத்தின் உயர் பீடத்தினரையும் இந்த மாநாட்டுக்கு ஜெயவர்த்தன அழைத்தார். அஸ்கிரிய, மல்வத்தை பௌத்த மத பீடங்களின் மகாநாயக்கர்களுடன் கலாநிதி வல்பொல ராகுல தேரர், கலாநிதி பெல்லன்வில தேரர், கலாநிதி ஹென்பிட்டகெதர ஞானவன்ச தேரர், வண மஹப்பலகம தேரர் ஆகியோரும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டனர்.

1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபதாம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வுத் தேவை தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஜெயவர்த்தன அறிவித்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஒரு கமிட்டியும் குறைபாடுகள் பற்றியும் ஆராய மற்றொரு கமிட்டியும் உருவாக்கப்பட வேண்டுமென்று ஜெயவர்த்தன தெரிவித்தார். ஜெயவர்த்தனவின் இந்தப் பேச்சு அமிர்தலிங்கத்தை அதிர்ச்சியும் ஆத்திரமுமடைய வைத்தது. எந்தவொரு இணக்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி வரவில்லை. அப்படியொரு இணக்கம் ஏற்பட்டதாக எமக்குத் தெரியாதென்று அமிர்தலிங்கம் எதிர்ப்புத் தெரிவித்தார்.

(தொடர்ந்து வடியும்....)




கல்லூரி ஒன்றில் பேராசிரியராக பணிபுரிபவர் ஸ்ரீகுமார். அவர் கேரளத்தில் பெரிய ஒரு பரம்பரையின் கடைசி வாரிசு. அவர் கல்லூரியின் உயிரியல் ஆய்வுசாலையிலேயே தங்கியிருப்பார். ஒரு நாள் இரவு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கும் போது விசித்திரமாக சத்தங்களை கேட்கிறார்...


மீண்டும் ஒரு தடவை எலும்புக்கூட்டை நன்றாகப் பார்த்துவிட்டு உடனே திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்தார். ஆன்ஸர் பேப்பரைக் கவனித்தார்; மனம் பதியவில்லை.

பழையபடி அதே சத்தம். ஸ்ரீகுமாரின் உடம்பிலிருந்த ரோமங்கள் சட்டென்று விறைத்து நிமிரத் தொடங்கின.

திடுமென்று இடதுபக்கம் பார்த்தார்.

தான் காண்பதெல்லாம் உண்மையா? சொந்தக் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை!

இப்போது அந்த எலும்புக்கூடு முழுவதுமாகவே அவரை



நோக்கித் திரும்பியிருந்தது.

ஸ்ரீ குமார் திடுக்கிட்டார்.

தன் கண்களுக்குத் தெரிவது. உண்மையா? பொய்த் தோற்றமா?

ஒரு வேளை எலி எதாவது கண்ணாடிப் பெட்டிக்குள் நுழைந்துவிட்டதா? சோதித்தே பார்ப்பது என்று தீர்மானித்தார். விடுவிடுவென்று எலும்புக்கூடிருக்கும் ஸ்டோர் றூமைப் பார்த்து நடந்தார்.

கண்ணாடிப் பெட்டியின் தாழை விலக்கிக் கதவைத் திறந்து பார்த்தார். அதற்குள் வித்தியாசமாக எதுவும் இல்லை. கதவை மூடிவிட்டு மீண்டும் எலும்புக்கூட்டைக் கவனித்தார்.

**எழுதுவது**
**சிவன்**

காற்றுகூட நுழையமுடியாதபடி கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் எலும்புக்கூடு தன்னை நோக்கி அதுவாகத் திரும்புமா?

ஸ்ரீ குமாரின் உடம்பு நடுங்கியது.

"சே.... என்ன இதெல்லாம்!"

மெதுவாக வெளியே வந்தவர் ஸ்டோர் ரூமின் கதவை மூட முயன்றார். துருப்பிடித்துப் போயிருந்த கீல்கள் அவ்வளவு சுலபத்தில் அசைந்து கொடுக்கவில்லை. இருப்பினும் கஷ்டப்பட்டு இழுத்துச் சாத்தினார்.

விஞ்ஞானத்தை மட்டுமே நம்பிக்கொண்டிருந்த ஸ்ரீகுமாரின் மனதில், சிறுவயதில் சொல்லப்பட்ட பல கதைகள் தேவையில்லாமல் தலையை நீட்டின.

கட்டிலில் வந்து அமர்ந்தார்.

லைட்டை அணைக்காமலேயே படுத்தார்.

கண்களை மூடியபடியே சற்று நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சட்டென்று லைட் அணைந்ததுபோல் தோன்றவே, கண்களைத் திறந்தார்.

உண்மையிலேயே லைட் அணைந்திருந்தது.

'கரண்ட் கட் இங்கெல்லாம் சாதாரணம்தானே!' தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டார்.

அறைக்குள் பரவியிருந்த இயற்கை வெளிச்சத்தில் உள்ளே இருந்த பொருள்கள் தெளிவற்றும், அவற்றின் நிழல்கள் பற்பல வடிவங்களிலும் தெரிந்தன. வட கிழக்குப் பகுதியிலிருந்த ஜன்னல் வழியாக வந்த சன்னமான வெளிச்சம் ஸ்டோர் றூம் வாசல் கதவின் மீதும் பதிந்தது.

கதவு மூடியபடியேதான் இருந்தது

'டாங்....' கடிகாரம் ஒலித்தது.

பன்னிரண்டரையோ... ஒன்றோ இருக்கலாம். ஸ்ரீகுமார் கண்களை இறுக மூடிப் படுத்திருந்தார்.

உறக்கத்தில் ஆழ்ந்தார்.

ஒரு மோசமான கனவின் ஊடாகத் தூக்கம் கடந்து போவதை உணர்ந்தார். காணும்போதே அது ஒரு கனவுதான் என்றும் புரிந்தது.

சற்று நேரத்திற்கு முன்னால் நிகழ்ந்தவை கனவில் தொடர்ந்து கொண்டிருந்தன.

கண்ணாடிப் பெட்டிக்குள் தொங்கிக்கொண்டிருக்கும் எலும்புக்கூடு அசைகிறது.

கண்ணாடிப் பெட்டியின் வெளிப்புறத் தாழ்ப்பாள் 'டங்' என்ற சத்தத்துடன் மேல் நோக்கி உயர்ந்து திறந்து கொள்கிறது.

கதவு வெளிப்புறமாகத் திறக்கிறது.

அதோ, அதற்குள் இருக்கும் எலும்புக்கூடு வெளியே வர முயற்சி செய்கிறது. இதெல்லாம் கனவுக்காட்சிதான் என்பதை அப்போதும் ஆழ்மனம் அறிவுறுத்தத்தான் செய்கிறது.

அது நிதானமாக நடந்து தன்னை நோக்கி வருகிறது.

இதோ நெருங்கி விட்டது!

ஸ்ரீகுமார் சட்டென்று கனவிலிருந்து விழித்தார்.

கண்களைக் கசக்கியபடியே ஸ்டோர் றூமின் வாசலைப் பார்த்தார்.

என்ன!

தான் மறுபடியும் கனவு காண்கிறோமா?

சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, தனது மணிக்கட்டுப் பகுதியை கிள்ளிப் பார்த்துக் கொண்டார்.

வலிக்கிறது கனவில்லை

ஆனால், ஸ்டோர் றூமின் வாசல் விரியத் திறந்து கிடந்தது!

தான் மூடியிருந்த கதவு உட்புறமாக விரிந்து கிடக்கிறது. மங்கலான வெளிச்சத்தில் ஸ்ரீகுமார் மற்றொரு காட்சியையும் கண்டார்.

அந்தக் கண்ணாடிப் பெட்டியின் உட்புறம் வெறுமையாக இருந்தது.

அதற்குள் இருந்த எலும்புக்கூடு எங்கே?

ஸ்ரீகுமார் கட்டிலிலிருந்து விருட்டென்று எழுந்தார்.

டேபிள் டிராயரைத் திறந்து தீப்பெட்டியை எடுத்தார்.

மின்சார விளக்கு எதிர்பாராமல் அணைந்து போனால் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கும் பருமனான மெழுகுவர்த்தியின் தலையில் தீக்குச்சியின் நெருப்பு ஜுவாலை பற்றிப் படர்ந்தது.

அதிலிருந்து வெளிச்சம் சுற்று புறத்தைக் கொஞ்சம் தெளிவாக்க முயற்சித்தது.

மெழுகுவர்த்தியைப் பிடித்தபடி ஸ்டோர் றூமைநோக்கி நடந்தார் ஸ்ரீகுமார்.

உட்புறம் எட்டிப் பார்த்தார்.

கண்ணாடிப் பெட்டி 'காலியாகக் கிடந்தது. அதன் வெறுமை அவரை பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது.

ஏதோ சத்தம் கேட்டு ஸ்ரீகுமார் திடுக்கிட்டவராகச் சட்டென்று திரும்பினார்.

(தொடரும்....)

# கண்களைப் பார்...... காதுகளைக் கொடு!

'என்னை யாருமே புரிந்துகொள்வதில்லையே!' என்று ஏக்கப்படுபவர்கள் ஏராளம்!

"சுவாமி... என் மனைவிகூட என்னைப் புரிந்துகொள்ளவில்லை! நான் என்ன செய்வது?"- எந்த ஊருக்குப் போனாலும் பல கணவன்மார்கள் இப்படி என்னிடம் வருத்தப்படுகிறார்கள்!

தனது மனைவியிடமே நல்லுறவை வளர்த்துக்கொள்ள ஒருவரால் இயலவில்லை என்றால், வேறு யாரிடம் அவர் நல்ல நட்பையும் உறவையும் வளர்த்துக்கொள்ள முடியும்?

ஈ மெயில், இண்டர்நெட் போன்ற விஞ்ஞான வளர்ச்சிகளால் இன்று அகண்ட பூமியில் சிதறிக் கிடக்கும் அத்தனை நாடுகளும், நாடுகளின் மக்களும் நெருங்கி வந்துகொண்டிருக்கிறார்கள். மாறிவிட்ட இன்றைய சூழ்நிலையில் எந்த நாடும் தீவுகள் மாதிரி தனித்துச் செயல்பட முடியாது! 'இன்.'. பர்மேஷன் ஏஜ்' எனப்படும் இந்தத் தகவல் யுகத்தில் நமக்கு உலகம் முழுவதும் இருக்கும் பல பேரின் நட்பும் தொடர்பும் அவசியமாகிப் போய்விட்டது.

ஆனால், உண்மை என்ன?



அறிமுகமில்லாதவர்களிடம் வலியச் சென்று பேசுவதே நம்மில் பலருக்குக் கஷ்டமான காரியம். ஏற்கனவே நமக்கு அறிமுகமானவர்களிடம் நட்பைப் பலப்படுத்திக்கொள்ளவும் நம்மால் இயலவில்லை. 'அவன் முழியே சரியில்லை', 'அவனுக்கு மரியாதை தெரியாது',

'இவனுக்குத் தலைக்கனம் அதிகம்' என்று மற்றவர்களைக் குறை சொல்லிவிட்டு அநேக நேரங்களில் பலரிடமிருந்து நாம் விலகிவிடுகிறோம்.

நீங்கள் உங்கள் மேலதிகாரியைப் பார்த்து வணக்கம் சொல்கிறீர்கள்! ஆனால், அவர் பதில் வணக்கம் சொல்லவில்லை! அந்த ஒரு சம்பவத்தை வைத்து,

'அவனுக்குப் பெரிய கொம்பன்னு நினைப்பு'. என்னைக் கிள்ளுக்கீரைன்னு நினைக்கிறான், என்று நீங்களாகவே யூகித்து விடுகிறீர்கள்.

இங்கேதான் பிரச்சினை ஆரம்பமாகிறது. உங்களின் மேலதிகாரி நீங்கள் வணக்கம் சொன்னதைக் கவனிக்காமல் கூட இருக்க வாய்ப்பு உண்டு இல்லையா?

நமது வேதங்கள் பற்றிப் படிப்பதற்காக பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒரு சாமியார் வந்திருந்தார். நான் அவருக்கு சமஸ்கிருதம் சொல்லிக் கொடுத்தேன். பிரதிபலனாக அவர் எனக்குச் சில தந்திரங்களைச் சொல்லித் தர முன்வந்தார். தந்திரம் என்றால், பில்லி சூனியம் மாதிரியான விஷயங்கள் இல்லை! தந்திரங்கள் மூலம் அடுத்தவர் என்ன நினைக்கிறார் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியும். இது மாதிரியான வித்தையை அவர் எனக்குச் சொல்லித் தருகிறேன் என்றார்.

"இதெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று நான் மறுத்துவிட்டேன். அடுத்த நாள் ஊர் கிளம்பும்போது அந்தச் சாமியார் என்னிடம் சொன்னார். "அடுத்தவர் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்வது கொடுமையான விஷயம். அடுத்தவர் மனதில் இருக்கும் பொய், சூது, வாது, வக்கிரம் என்று எல்லாம் எனக்குத் தெரிகிறது. இதனால் யாரிடமும் என்னால் அன்புகாட்ட முடியவில்லை. அடுத்தவர் என்னைப் பற்றி நல்ல வார்த்தைகளைப் பேசும்போது என்னால் அதைக் காதுகொடுத்துக் கேட்க முடியவில்லை! என்னுடைய கவனம் அவர் உள்ளுக்குள் என்ன நினைக்கிறார் என்பதிலேயே நிலைகுத்தி நிற்கிறது" என்று வருத்தப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியை நான் இங்கே சொல்வதற்குக் காரணம்.... 'மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்?' என்பதை அறிய முயற்சி செய்யாதீர்கள்....ஏனெனில், இதுபோன்ற முயற்சியில் ஈடுபட்டு, நீங்கள் அடுத்தவருடன் பழகினால், அவர் என்ன பேசுகிறார் என்பது கூட உங்கள் காதில் விழாது!

மற்றவர்களிடம் நட்புகொள்ள விரும்பினால் அடுத்தவர் என்ன பேசுகிறார் என்று அக்கறையோடு கவனமாகக் காதுகொடுத்துக் கேட்க வேண்டியது மிகவும் அவசியம். Inter Personal Skill ஐ வளர்த்துக்கொண்டால்தான் நமது வீடு, அக்கம்பக்கம், ஊர், வேலை செய்யும் இடம் என்று அத்தனை இடங்களிலும் நாம் பிறரின் நட்பை வளர்த்துக்கொள்ள முடியும்.

ஒரு முறை லியோ டால்ஸ்டாய் ஒரு பூங்காவுக்குப் போயிருந்தார். டால்ஸ்டாய் தன் அருகில் இருந்தவரிடம், 'ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அந்த ஆசாமியோ சரியான முசுடர்.

"நாம் இருவரும் இதற்கு முன்பு ஒரு முறைகூட சந்தித்துக்கொண்டதில்லையே! பிறகு எப்படி எனக்கு 'ஹலோ' சொல்கிறீர்கள்?" எனக் கடுகடுவென்று சொல்லிவிட்டு அந்த இடத்திலிருந்து நகர்ந்துவிட்டார்.

அடுத்த நாள் டால்ஸ்டாய் பூங்காவுக்குச் சென்றபோது, முதல் நாள் அவர் சந்தித்த அதே நபர் எதிர்ப்பட்டார். "ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்? நாம் இருவரும் ஏற்கனவே ஒரு முறை சந்தித்திருக்கிறோம்!" என்று கூற, அந்த நபர் சிரித்துவிட்டார்!

Inter Personal Skill -இல் தேர்ச்சி பெற்றவர்கள் பிஸினஸ் விஷயமாகப் புதிதாக யாரையாவது சந்திக்கப் போனால், என்ன செய்வார்கள் தெரியுமா?

சந்திக்கப் போகும் நபர் நேராக நிமிர்ந்து உட்கார்ந்திருந்தால், இவர்களும் அதே மாதிரியே உட்காருவார்கள்! பார்க்கப் போனவர் சாய்ந்து உட்கார்ந்தால், இவர்களும் சோபாவில் சாய்ந்து உட்காருவார்கள். இதற்கு Body match என்று பெயர்!

அடுத்ததாக Listening. இன்டர் பர்சனல் ஸ்கில்லில் தேர்ச்சி பெற்றவர்கள் அடுத்தவர்களைப் பேசவிடாமல் இவர்களே பேசிக்கொண்டிருக்கமாட்டார்கள்! அடுத்தவரை பேச ஊக்கப்படுத்திவிட்டு, இவர்கள் கவனமாகக் கேட்பார்கள்! 'நீங்கள் பேசுவது இன்ட்ரஸ்டிங்காக இருக்கிறது!' என்பதை அவர்களுக்கு மறைமுகமாக உணர்த்துவார்கள்!

அடுத்த முக்கியமான விஷயம் Eye Contact. அடுத்தவர் பேசும்போது இவர்கள் வேறு எங்காவது பார்த்துக் கொண்டிருந்தால், 'ஓகோ....நாம் போரடிக்கிறோம் போலிருக்கிறது!' என்று அடுத்தவர் பேசுவதை நிறுத்திவிடுவார்.

நாம் யாரோடு பேசுவதாக இருந்தாலும் சரி, நேருக்கு நேராக கண்களைப் பார்த்து எப்படிப் பேச வேண்டும் என்பதற்குக் குறிப்பு பைபிளில்கூட இருக்கிறது. ஆனால், இதற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரபலப்படுத்தியவர் சு.'.பி துறவியான ஜப்பார்!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.


குறுக்கெழுத்துப் போட்டி இல. 120க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

நிஸார்தீன் நஸீமியா, 11, வீட்டுத் திட்டம், கல்பிட்டி.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. கே. சாயி சங்கர், 28, நவகம்புர, ஸ்டேஸ் ரோட், கிராண்ட்பாஸ், கொழும்பு 14.
2. திருமதி. பி. அமரசிங்கம், 17/4, குடியிருப்பு, வவுனியா.
3. ஏ. வாசவி, 620, நாவலர் வீதி, அரியாலை, யாழ்பபாணம்.
4. எம்.எம். றிம்ஸி, பழக் கடை, புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
5. சி. கோமதி, எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை, கல்முனை.
6. கபிலாஷினி விஜயரத்தினம், தரம் 7, ஒக்ஸ்போர்ட் சர்வதேச பாடசாலை, நாவலப்பிட்டிய.
7. நா. டிலோஜ்குமார், 107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு 01, கல்முனை.
8. க. நிச்சலன், 64 புதுச் செட்டித் தெரு, கொழும்பு 13.
9. நா. கணநாதன், 60, நீர்ப்பாசன விடுதி, சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
10. ரி. சிவரூபன், 9, கொட்டகலை பஜார், கொட்டகலை.

## குறுக்கெழுத்துப் போட்டி 122




### இடமிருந்து வலம்

1. சிறப்பு - இதனைக் குறிக்கும்.
5. வெற்றிலை, பாக்கு (குழம்பியுள்ளது).
10. நட்சத்திரம்.
16. மாலையில் மலரும் மலர் ஒன்று.
20. வசை என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது.)

### மேலிருந்து கீழ்

1. பேரறிவாளன்.
2. சமையலுக்குப் பயன்படும் மருத்துவக் குணமுள்ள பொருள் (குழம்பியுள்ளது).
3. மட்டக்களப்பு மாவட்டத்தில் அடங்கும் ஊர் ஒன்று.
15. வேறுபாடு (குழம்பியுள்ளது).
16. குலம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 120 விடைகள்



### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 01.06.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-122
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# விலங்கிடப்பட்ட விலாசங்கள்

சல்லடை மனமெங்கும் ஒரே சல சலப்பு அர்த்தமில்லாத அடக்கு முறைகளும் அத்து மீறல்களும் அனிச்சையாய் அகிலத்து ஆத்மாக்களை அல்லல் படுத்துவதால், நான் நினைக்கிறேன் மனத்திற்கு என்று தனியான தன்மைகள் கிடையாது என்று. அதனால்தான் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் எண்ணங்களும் இயல்புகளும் மகுடம் சூட்டிக் கொள்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தன்னை அவணியில் ஓர் அங்கமாய் அடையாளப் படுத்திக் கொள்ளத்தான் பிரியப்படுகிறான். எல்லாம் வெவ்வேறு கோணமாய் பரிணமித்து ஏதோவொரு. வகையில் மிளிரத்தான் செய்கிறது. இருந்தும் இதில் எல்லாம் திருப்தி அடையாத மனம், சதா எதையோ எதிர்பார்த்த வண்ணமே எமை எதிர் கொள்வதுதான் உண்மை.

முழுமை பெறாத கனவுகள், திருப்தி அடையாத மனசு இவையிரண்டுமே அநேகமான பிரச்சினைகளுக்கு மூலமாய் முடி சூட்டிக் கொள்கிறது என்பதை அறிந்துக் கொள்வோர் மிகக் குறைவு.

மாற்றங்கள் மட்டுமே உலக நியதிகளில் இடைவிடாமல் நிகழும் ஓர் அற்புதமான விடயமாகும். இம் மாற்றங்களை ஏற்றுக் கொள்வோர் அதிகமான பிரச்சினைகளுக்குள் சிக்கி தவிக்க நேரிடுவதில்லை. இந்த கால மாற்றங்களுக்கு சிரம் தாழ்த்தி சிகரம் தொடத்தான் பிரியப்படுகிறாள் அபிதா.

இருப்பினும் பழைமைவாதியான தனது தாயாரின் எண்ணங்களையும் நினைவுகளையும் மேன்மைகளுக்குள் மேய விட எத்தனையோ முயற்சிகளை எடுத்திருக்கிறாள். ஆனால் எதுவுமே அபிதாவுக்கு ஆதரவு தருவதாய் இல்லை. அப்போதெல்லாம் அவளின் வாய் அர்ச்சனைக்குள் அகப்பட்டு அவஸ்தைப்படுவது மரபுகளும் மகுடம் சூட்டிக் கொள்ளாத அர்த்தமற்ற சம்பிரதாயங்களும் மட்டுமே.....

அபிதா அற்புதமான புதுமைவாதி. அர்த்தமற்ற சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் எப்போதுமே தலை வணங்கியது கிடையாது. அதற்காக வேளை கலாசாரத்திற்கு புறம்பானவள் என்று ஓரங்கட்டி விட முடியாது. பிரச்சினைகளை போரிட்டு வெல்ல வேண்டும் இல்லையேல் அவை எம்மை விழுங்கி ஏப்பம் விட்டு விடும் என்பதை நன்கு அறிந்தவள் அபிதா.

சமூகம் சார்புமை கொண்டதுதான் ஆனால் அதில் நல்லதும் இருக்கிறது தீயதும் இருக்கிறது. எல்லாவற்றையும் நாம் எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துதான் எமக்கு அமையும் வாய்ப்புகள் சில நேரங்களில் சொர்க்கத்தையும் பல நேரங்களில் நரகத்தையும் எம் உணர்வுகளுக்கு ஊட்டிச் செல்கிறது.

எனக்கு இது வரையுமே புரியாத புதிராய் எத்தனையோ நியதிகள், நிலை மாறாத நிலமகளாய் நிரந்தரமாய் என்னுள் நிலைக்களம் பெற்றுள்ளது. உண்மைதான் அதில் ஒன்றுதான் இவ் வையத்தோரை வாட்டும் பின்னணி எனும் பிதற்றல் பிணி.

பின்னணிதான் ஒருவருக்கு சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கிறது என்ற பிதற்றல் பிணி! நீங்களே சொல்லுங்கள் மனிதம் நிறைந்த நிறைகுடமாய் மனிதன் என்ற மாட்சிமைக்கு பின்னணிக் கொண்டு பின்புலம் அமைக்கத்தான் வேண்டுமா.... அப்படியான போலி பிரஸ்தாப பகட்டு தேவை தானா....என்ற உத்வேகம் அபிதாவின் உணர்வுகளுக்கெல்லாம் உற்சாகமாய் சாயம் பூசிச் செல்லவே எல்லாவற்றையும் தூக்கி எறிந்து உயிர் பெற்றவளே அபிதா.

சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளுமே ஒரு மனிதனின் பல்வேறு நிலைகளை தீர்மானிக்கிறது.

சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். தவறவிட்டவர்கள்தான் தொலைந்த கனவுகளோடு ஏற்றம் பெறாத எண்ண உதிரிகளை ஏந்தி அல்லல்படுகிறார்கள். அவ்வாறாக சந்தர்ப்பங்களை தவற விட்டு தொலைந்த கனவுகளோடு வானம் பார்த்த பூமியாய் வாழ்க்கை வெகுமதியில் வெறுமையை மட்டும் கண்ட வெதும்பலுடன் விரக்தி விழுதாய் அபியின் தாயார் மரகதம் சில நம்பிக்கை துரோகிகளின் தரங் கெட்ட ஈன செயலால் உணர்வுகளையெல்லாம் விற்று விலை மகளாய் விலை போனார்.

என்ன செய்வது சில அத்து மீறல்கள் அனுமதி பெறாமலே அரங்கேறி அவஸ்தைப் படுத்துவது இயல்புதானே. அப்படித்தான் மரகதத்தின் நிதர்சனங்கள் மீது விதைக்கப்பட்ட நிர்ப்பந்தங்கள் எல்லாம் வெறும் நிர்மூலங்களாய் நிறந் தீட்டப்பட்டது. அபிலாஷைகள் எல்லாம் அடை மழைக்குள் அகப்பட்ட அஞ்சனமாய் ஒப்பனை கலைந்து ஓலமிட்ட போதும், எங்கோ ஒரு எதிர்பார்ப்பு எல்லாம் அபியை பற்றிய அவாக்களும் அஸ்திவாரங்களுமாய் அவரை சூழ்ந்து எச்சரிக்க, தன்னுடைய கனவு காயங்களையெல்லாம் தொலை தூர தேசங்களுக்கு துரத்தி அடித்துவிட்டு புதுமையாய் புனிதமாய் வாழ்வைத் தொடங்கி எத்தனையோ காலங்கள் கடந்தாயிற்று. இருந்தும் அவரே மறந்து போன கசப்புகளையும் களங்கங்களையும் காலச் சுவடிகளாய் அவரின் கண்ணீருக்கு சமர்பிக்கும் சமூகத்தை என்னவென்று சொல்வது.

புரியவில்லை ஒன்றுமே புரியவில்லை. மானுட ஜந்துக்களின் மனங்களைப் பற்றி ஒன்றுமே புரியவில்லை வெகுவாய் குழப்பிப் போகிறாள் அபிதா.

வாழ்வில் எது நடந்தாலும் அடுத்தவர் மீது பழி போடுவது நியாயமானதன்று, எல்லாவற்றிற்கும் நானே பொறுப்பு நானே காரணம் என்று ஏற்றுக்கொள்ளும் போதுதான் அந்த நிலையை மாற்ற முடியும் என்பதை தெளிவாய் உணர்ந்தவர் மரகதம்.

அதனால்தான் கடந்தகால எச்சங்களையெல்லாம் அப்படியே அப்புறப்படுத்தி விட்டு வெறுமையின் பாதைகளில் வரம்பிட முடியாத வக்கிரங்களை விலக்கி விடியலைத் தேடி வேற்றூருக்கு வந்தார். செக்கு மாட்டுத்தனமான வாழ்வில் என்ன இருக்கிறது கொஞ்சமாவது மாறுதல்கள் வேண்டும் அப்போது தானே வாழ்க்கை இனிக்கிறது என்ற பெரிய எதிர்பார்ப்புடன்.

பாவம் இவர்களின் இதயங்களை குத்தி கிழித்து காயப்படுத்தி அமில வார்த்தைகளால் அபிஷேகிக்க மட்டுமே இந்த சமூகம் காத்திருக்கிறது என்பதை அவர்கள் அப்போது உணரவில்லை.

ஏனோ தெரியவில்லை பழைமையைப் பேசியே மாற்றங்களை மழுங்கடிக்கும் மனித மனங்கள் இவர்களின் மனித வசீகரங்களையும் வாஞ்சையோடு விழுங்கி ஏப்பம்விட்டது. இவை எதையுமே பொருட்படுத்தாத தெளிந்த மனமுடையவள் அபிதா. குருட்டு குந்தகங்களுக்காய் குறுகிய வட்டம் வரைந்து ஒரு வாழ்க்கை நகர்வா என்ன இது இடைவேளை தேடியே இதயம் இப்படி இம்சிக்கப் படுகிறது என்று அவள் அடிக்கடி சிந்தித்துப் பார்ப்பதுண்டு.

அபிதா தன்னுடைய பின்னணிக்காக என்றுமே வருத்தப்பட்டது கிடையாது. ஏனெனில் கடந்த காலங்களை துப்பரவு செய்யும் போதுதான் தன்னுயர்வை இலகுவாக அடைய முடியும் என்பதை நன்கு அறிந்தவள். அதனால்தானோ என்னவோ எழுத்து துறையில் இத்தனை வெற்றிகள் அவளுக்கு. தன்னுடைய எழுத்து பணியால் எத்தனையோ உள்ளங்களுக்கு உத்வேகம் ஊட்டியிருக்கிறாள். ஆனால் அவளின் வெற்றிகளும் வீறு கொண்ட சிந்தனைகளும் தாய் மரகதத்தின் முன் வெறும் சருகுகளாய் மட்டுமே......

அதிகமான அழுத்தங்கள் எம்முள் அதிகமான நேரங்களில் அழுகைகளை மட்டுமே விட்டுச் செல்லும். அப்படிதான் ஒரு நாள் சில சாக்கடை விமர்சனங்களால் மனம் தோயப்பட்டு முடிவாய் நண்பி நேகாவை காணச் சென்றாள் அபிதா. "நேகா நீ அடிக்கடி சொல்லுவியே இதயத்தின் நிற்காத ஓட்டம் போல் மனதையும் தொய்வில்லாமல் எந்த சலனமும் சங்கடப்படுத்தி விடாமல் பக்குவப்படுத்திக்கொள் என்று அப்படிதான் இருக்கிறேன். ஆனால் எல்லா பிரச்சினைகளும் என்னையே கிண்டிக் கிண்டி மகிழ்கிறதே. என்ன செய்வது"....என்று விம்மி வெடித்தாள் அபிதா. "இங்க பாரு அபி, பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி சாவதை விட அப்பிரச்சினைகளில் இருந்து எப்படி விடுபடலாம் என்று சிந்திக்கத் தெரிந்தவர்கள்தான் வாழ்க்கையில் அதிகமாய் வெற்றி பெறுகிறார்கள். எல்லாவற்றையும் தூக்கிப் போடு". இல்ல நேகா எங்கு போனாலும் என்ன செய்தாலும் தவறான கண்ணோட்டங்கள் கழுகுப் பார்வைகள் என் முயற்சிகளையெல்லாம் மழுங்கடிக்கிறது. நானும் சராசரி பெண்தானே. நான் செய்த பாவம்தான் என்ன....? ஒன்று மட்டும் சொல்கிறேன் என்னுடைய சாதாரண உணர்வுகளைக் கூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நம் சமூகம் ஒன்றும் தரங்கெட்டுப் போகவில்லை. இருந்தும் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்றுதான் புரியவில்லை. இவை எல்லாவற்றையும் விட கொடுமையான விடயம் என்னவென்றால், கற்றறிந்த பண்பட்ட சமூகங்களும் ஒன்றும் இல்லாத இவ்வாறான விடயங்களைப் பூதக் கண்ணாடிக் கொண்டு பூதாகரமாக்குவது தான். உனக்கே தெரியும் வாழ்க்கையில் எனக்கிருக்கும் ஒரே பிடிப்பு கவிதைகள் மட்டும்தான் என்று. இந்த சமூகத்தில் எனக்கு அங்கீகாரம் இருக்கிறதோ இல்லையோ என் கவிதைகளுக்கு அங்கீகாரம் இருக்கிறது. அதற்கு கிடைத்த வெகுமதிதான் அகில இலங்கை இலக்கிய ஒன்றியம் கடந்த வருடத்திற்கான சிறப்புக் கவிஞராய் என்னைத் தெரிவு செய்திருப்பது. அந்த செய்தி செவிகளுக்கு எட்டியதும் உண்மையை சொல்கிறேன் மனம் உலகையே ஒரு கணம் உள்ளங்கையில் ஏந்தி உலாவரத்தான் செய்தது. ஆனால் அந்த சந்தோஷ சாயங்களும் மகிழ்ச்சியும் ஒரு நொடியில் ஒப்பனை கலைந்து ஓலமிடவும் செய்தது.

நேற்று இரவு ஒன்பது மணியிருக்கும் என் சுகதுக்கங்களில் எல்லாம் பங்கேற்கும் நண்பர் அஜித்திடம் இருந்து ஒரு அழைப்பு வந்தது. "ஹலோ மிஸ் அபி உங்களோட வெற்றிக்கு என் வாழ்த்துக்கள். எமது இலக்கிய ஒன்றியம் கடந்த வருடத்திற்கான சிறப்பு கவிஞராக உங்களைத்தான் அடையாளப்படுத்தியிருக்கிறது மிக்க மகிழ்ச்சி. இவை எல்லாமே உங்கள் முயற்சிக்கு கிடைத்த வெற்றிகள். ஆளால் இதைக் கூட ஊனக் கண்கள் கொண்டு ஊடுறுவும் இந்த சமூகத்தை திருத்தவே முடியாதா பெரும்பாலானவர்கள் இதை உங்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியாய் கருதவில்லை. நரம்பில்லாத நாக்கு நாலு விடயங்களையும் பேசத்தான் செய்யும். ஒன்று மட்டும் சொல்கிறேன்; உங்களின் எழுது கோல் கொண்டு கூன் விழுந்த சமூக பார்வைகளை நிமிர்த்துங்கள். ஆற்றலும் தகுதியும் உள்ளவர்கள்தான் தாங்கள் விரும்பியவாறு உலகத்தை இயக்குகிறார்கள். அந்த ஆற்றலும் தகுதியும் உங்களிடம் நிரம்பவே இருக்கிறது. சலனங்களுக்காய் உங்கள் சரித்திரங்களை தகனம் செய்து விடாதீர்கள். தொடர்ந்து முன்னேறுங்கள். வெற்றி நிச்சயம் என்று.... ஏன் நேகா இப்படி மனித மனங்கள் சதா ஏதோவொரு அர்த்தமற்ற தேடல்களில் உழன்று அல்லல்படுகிறது" என்று அழுது தீர்த்தாள் அபிதா.

"அபி ப்ஸிஸ்டா முதல்ல அழுகையை நிறுத்து. வெற்றியை அடைய பல வேதனைகளை தாங்கிக் கொள்ள வேண்டிதான் இருக்கிறது. தைரியமாக போய் விழாவை எதிர்கொள்" என்றாள் நண்பி நேகா. விழாவிற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்து அழைப்பிதழும் அபியின் கைகளுக்கு கிட்டியாயிற்று. நீண்ட நாளைய கனவு நனவாகப் போகும் சந்தோஷத்தில் உலகையே மறந்து போனாள் அபிதா.

அபியின் எண்ணங்கள் ஈடேற்றம் பெறும் நாளும் வந்தது. தாய் மரகதத்தின் ஆசியோடு விழாவிற்கு வந்து சேர்ந்தாள் அபிதா. ஏராளமான வாழ்த்து மாலைகள் எல்லோருமே அவளையே பார்ப்பதாய் தோன்றும் உணர்வு உள்ளுக்குள் ஏதேதோ செய்தது. விழா தலைமையாளர்கள் அற்புதமாகப் பேசினார்கள். என் கவிதைகளை இப்படிக் கூட பார்க்க முடியுமா என நானே வியக்கும் வகையில் அபாரமாகப் பேசினார்கள். அப்போதுதான் அறிவிக்கப்பட்டது "இங்கு கூடியிருக்கும் இலக்கிய உள்ளங்களுக்கு ஒரு இனிப்பான செய்தி அடுத்ததாக எமது சிறப்புக் கவிஞர் அபிதா உங்கள் முன் தன்னுடைய கவிதை அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்" என்று.



உண்மையை சொல்கிறேன் அப்போது என் உணர்வுகளும் எண்ணங்களும் புதுமையாய் பிறப்பெடுத்து வந்ததாய்தான் உணர்ந்தேன். "இங்கு கூடியிருக்கும் இலக்கிய உள்ளங்களுக்கு பணிவான தமிழ் வணக்கங்கள். ஏனோ தெரியாது இதுவரையுமே என்னுடைய கனவுகள் பூப்படையவில்லை. அதற்கான வசந்தகால உற்சவம் தேடியே என் வாலிபம் வதைக்கப்பட்டிருக்கிறது. அன்பு உள்ளங்கள் இத்தனை வெற்றிகளும் அதிகமாக அழுத்தங்கள் ஒருவரின் நிலையை தாழ்த்திவிடும் என்பார்கள். ஆனால் அழுத்தங்கள்தான் என்னை அவணியில் ஓர் அங்கமாய் அடையாளப்படுத்தியிருக்கிறது. பாராட்டுகளும் என் தகுதிக்கு கிடைத்த சன்மானம் என்பதுதான் உங்களுக்குத் தெரிந்த செய்தி. ஆனால் இந்த சமூகம் ஏதேதோ பேசிக் கொள்கிறது.

உண்மைக்கு என்றுமே தலைவணங்கி பழகிப் போனது என் ஆன்மா. நான் ஒரு விலைமாதுவின் மகள் என்பது மட்டும்தான் உண்மை. இதை தவிர ஒரு பாவமும் அறியாதவள் நான். என்னுடைய போராட்டங்களும் முயற்சிகளும் வெற்றியளித்திருப்பதாய் நீங்கள் உணர்வது புரிகிறது. இவை எதையுமே வெற்றியாய் என்னால் கொள்ள முடியவில்லை. இவையெல்லாம் வெற்றி எனும் விலாசம் தாங்கிய விலங்குகள். என்னுடைய இந்த நிலைக்கு காரணம் என்னுடைய தாயார்தான். ஆனால் இன்றைய நிகழ்வைக்கூட காணமுடியாத அளவுக்கு வார்த்தைகளால் காயப்படுத்தி, அவரை இந்த சமூகம் மரணப் படுக்கையில் தள்ளி விட்டிருக்கிறது. இந்த இமாலய வெற்றிகளை என்னால் விரும்பி ஏற்க முடியவில்லை. அபிஷேகங்களுக்காய் அரிதாரம் பூசிக் கொள்வதில் எனக்கு என்றுமே உடன்பாடு கிடையாது. என்னை ஒரு கவிஞராகஏற்றுக்கொண்ட சமூகத்திற்கு வாழ்வின் நீளம் வரை நன்றியுடையவளாக இருப்பேன். அதே நேரம் என் பின்னணியை காரணங்காட்டி ஓரங்கட்டப்பட்ட உணர்வு ஓலங்கள் வேண்டுகோளாய் ஒரு விண்ணப்பத்தை மட்டும் முன் வைக்கிறது. மனமிருந்தால் இவளையும் மனுஷியாய் அல்ல ஒரு உயிராய் சரி நடத்த முயற்சியுங்கள். அப்போதாவது விலங்கிடப்பட்ட இவளின் விலாசங்கள் விமோசனம் பெறட்டும். இறுதியாய் இந்நொடிப் பொழுதில் என் உணர்வுகள் தீட்டிய ஓரிரு வரிகளோடு முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**-சிவனுமனோஹரன், ஹட்டன்.**

*புறங்காட்டில்*
*பூரணம் தேடிய மனசு*
*வெறுமையைக் கண்ட*
*வெதும்பலுடன்*
*விம்மி வெடிக்கிறது*
*புதைந்த உணர்வுகள்*
*நகல்களால் மட்டுமே*

நலம் விசாரிக்கப்படுவதால் என்று தன்னுடைய உணர்வுகளையெல்லாம் கொட்டி தீர்த்தாள் அபிதா. அப்போது அரங்கம் முழுதும் நிசப்தம் மட்டுமே நீக்கமற குடி கொண்டிருந்தது வெறுமையான மனித மனங்களைப் போல......

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### தவறான எண்ணம் பெருஞ் சேதம் விளைவிக்கும்

மற்றவர்களில் யாரேனும் உங்களைப் பற்றி தவறான தகவல்கள் வைத்திருந்ததாக எந்தவொரு சம்பவமும் நிகழ்ந்ததுண்டா? அவை எந்த வகையிலும் உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததுண்டா?

தவறான தகவல்கள் எந்த அளவிற்குப் பெருஞ்சேதம் விளைவிக்கும் என்று நம் மனதிற்கு கொஞ்சமாவது தெரியும். மற்றவர்களைப் பற்றி கூட உங்களிடம் தவறான தகவல்கள் இருந்திருக்கலாமே!

உண்மையான தகவல்களிலிருந்து, பொய்யான தகவல்களைப் பிரிக்கும்போது, நமக்குள் நன்கு புரிந்து கொள்ளும் தன்மை ஏற்படுகிறது.

நம்மை சுற்றி தவறான தகவல்கள் ஏராளமாக உள்ளன. தீய எண்ணம் கொண்ட தனி மனிதர்கள், தங்களின் சொந்த நலன்கள் ஈடேறும் வகையில் இவ்வாறான தகவல்களை உருவாக்குகின்றனர். சில தகவல்கள் முழுமையாக புறக்கணிக்கப்படும்போது, அவைகளிலிருந்து இம்மாதிரியான பொய்த் தகவல்கள் உருவாக்கப்படுகின்ற, இவை உண்மையாக தகவல்களை ஏற்றுக்கொள்ளும் நிலையினை அப்படியே தடுத்துவிடும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

---

## சொத்தும் சுகமும் துணை வராது! செய்த தர்மமே நிலை நிற்கும்!!

"அங்கே பார், பெண்களுமா இந்த வேலை செய்கிறார்கள்?" தாரைக் காய்ச்சி ஊற்றி வீதி செப்பனிடும் வேலையில் பெண்களும் ஈடுபட்டிருந் தார்கள். கைகளிலும் கால்களிலும் சாக்கைக் கிழித துச் சுற்றிக் கட்டியிருந்தார்கள். வெய்யில் வேறு பார்வையை இருளடைய வைக்கிற அளவுக்குக் கொளுத்தியது.



அஜிதன் காட்டும் முன்பே விலாசினி அதைப் பார்த்திருந்தாள். "இன்றைய விலைவாசியில் ஒருவர் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமா? எல்லோரும்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது" என்றாள்.

"இவ்வளவு மோசமாகவா வாழ்க்கை மனிதர்களை வதைக்க வேண்டும்?" என்று சலித்துக் கொண்ட அஜிதன், சற்று நேரங்கழித்து, "அவர்களுக்குப் பழகிப் போயிருக்கும்" என்று முனகியவாறு சொல்லிக் கொண்டான்.

தருவது

முழடில்யன்

வியப்புடன் அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு விலாசினி சொன்னாள்: "மத்திய தர வர்க்க மனிதர்களே இப்படித்தான், எல்லாக் குற்ற உணர்வுகளிலுமிருந்து தப்பித்துக் கொள்ளவும் சமாதானம் தேடிக் கொள்கிறார்கள்!"

"என்னால் வேறு என்ன செய்ய முடியும் சொல்லு?"

"கொடுமையைக் கண்டும், அதற்கு ஒரு சமாதானத்தைச் சொல்லிவிட்டுப் பேசாமல் போகிற நாம், அதை நீக்க வேண்டும் என்று தன்னாலியன்றதைச் செய்ய உடனே அடியெடுத்து வைக்கிறவர்களோடு ஒப்பிடுகையில் இழிந்த மனிதர்கள் தானே?"

"உண்மைதான். நமக்கு இந்தக் கொடுமையை - பாரபட்சத்தை மாற்றுவதற்குரிய சரியான வழிகளும் தெரியவில்லை; போராடுவதற்கான மனத் தெம்பும் இல்லை..... குறைந்த பட்சம், இந்தத் தீமைகளுக்கெதிரான மனநிலையுடனாவது இருக்கலாம் அவ்வளவுதான்!"

"மனிதர்களுக்கு இருக்க வேண்டிய தர்ம உணர்வு அவ்வளவுதானா?"

"அதர்மம் செய்யாமலிருப்பது கூட ஒருவகையில் தர்மம் என்றுதானே பார்க்கப்பட வேண்டும்?"

விலாசினி சிரித்தாள். காலடியில் மிதிபட்டுக் கொண்டிருக்கும் சக மனிதர்களை மீட்டெடுப்பது பற்றி யோசிக்காமல் வேறெதையும் முக்கியமாய்க் கருதிக் கொண்டிருப்பதில் எப்படி தர்மம் இருக்கும்?

"உதவி செய்ய முடியா விட்டாலும் உபத்திரவம் செய்யாமலிருப்பது முக்கியமில்லையா? நடக்கும் தீமைகளைச் சரியானவை என்று நியாயப் படுத்திக் கொண்டிருக்காமல், அவை களையப்பட வேண்டும் என்று அவற்றுக்கெதிரான மனநிலையுடனிருப்பதைப் பாராட்ட வேண்டாமா?" அஜிதன் தீவிரமாக விவாதத்திற்குள் இறங்கிவிட்ட தொனியில் கேட்டான்.

விலாசினி சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, மெல்லிய குரலில் தொடங்கினாள். "பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால், தீமைக்கெதிரான மனநிலையுடனிருப்பவரும் எதையெதைத் தீமைகள் என்று கருதுகிறார் என்று தெரிய வேண்டும்....."

"என்ன சொல்கிறாய்?"

"நான் சார்ந்த இனத்தை அழிவுகளிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணமும், என் இனத்தின் மீதுள்ள ஆற்றா நேசமும்தான், என்னுடைய இனமல்லாத பிறர் மீது குரூரமாகப் பாய்வதை மறுக்க முடியுமா?"

அஜிதன் அவளை வியப்போடு பார்த்துவிட்டு மௌனமாயிருந்தான்.

"மற்றவர்களை மதித்தல் என்பதுதானே மனித அறத்தின் அடிப்படையாக இருக்க முடியும்?" அஜிதன் பேச்சை நிறுத்திவிட்டதை அவதானித்துக் கொண்டு விலாசினி மேலே தொடர்ந்தாள்.

"சமீபத்தில் இதைப் படித்தேன். அங்கவீனமான அனாதைக் குழந்தைகளை விலை கொடுத்து வாங்கி கோயில் வாசல்களில் பிச்சையெடுக்க வைத்து, அதையே தொழிலாகச் செய்து வரும் ஒருவன், அந்தக் குழந்தைகளுக்குச் சாப்பாட்டுத் தேவைகளைக் கவனித்துக் கொள்வதை அறமான செயலாக நினைத்துக் கொள்கிறான். தான் இல்லாவிட்டால் வேறொருவன் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைக் கவனிக்காமல் கொடுமை செய்து வாட்டுவான் என்பது அவனுக்குத் தன்னை நியாயவானாகக் கருத வைக்கிறது. அந்தக் குழந்தைகள் ஊனப்படுத்தப்பட்டு, குறைப்படுத்தப்பட்ட உடல்களாகத் தன்னிடம் விலைக்கு வருவது பற்றியும் அவன் கண்டுகொள்ள விரும்புவதில்லை. அவற்றுக்கு மனித உயிர்களுக்கான எந்த மரியாதையும் தராத இந்த உலகில், தான் அவற்றைக் கவனித்துக் கொள்ளும் விதமே அவர்களுக்கும் தனக்கும் சோறு போடும் தர்ம நியாயத்தின்பாற்பட்டது என்பதாக அவன் நினைக்கிறான்.

தன் சொந்தக் குழந்தைகளுக்குக் கல்வி தரவேண்டும் என்பதிலும் நல்ல ஆடைகள் வாங்கித் தர வேண்டும் என்பதிலும் அவன் குடும்பத் தலைவனுக்கான நியாயத்தைக் கண்டு கொள்கிறான். இந்தக் குழந்தைகள் அவன் தொழில் தர்மத்திற்கானவர்கள். தன்னுடைய குழந்தைக்குக் கடுமையான நோய் வரும்போது, 'நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? ஏன் ஆண்டவா என்னைச் சோதிக்கிறாய்?' என்று மனப்பூர்வமாகவே உருகி வேண்டுகிறான். அவன் தீமை எனக் காண்பது, பிச்சையெடுக்க வைப்பதற்காகக் குழந்தைகளின் முகத்தில் திராவகத்தை அடித்துச் சேதம் செய்யும் குரூரமானவர்களைத்தான்! குறைவுபட்ட உடல் குழந்தைகளை விலைக்கு வாங்கிப் பிச்சையெடுக்க கோயில் வாசல்களில் விடுவது பற்றி அவனுக்கு எந்தக் குற்றவுணர்வும் இல்லை.....

இப்படித்தான் ஒவ்வொருவர் கோணங்களிலும் ஒவ்வொரு விதமான தர்ம நியாயங்கள்!"

"ஏன் இப்படியெல்லாம் இருக்கிறது?" என்று வியப்படைந்த குரலில் கேட்டான் அஜிதன்.

"நம் கலாசாரத்தை, மேலோட்டமான நியாயங்களைத் தொண்டி அதற்குள் புதைந்திருக்கும் குரூரங்களை கவனத்திற்குக் கொண்டு வந்தால் பலப்பல அதிர்ச்சிகள் இருக்கின்றன.!"

"அறம் செய்வதற்கு முன், எவை அறங்கள் என்று தெரிந்து கொள்வது அவசியமாகிறது."

"சரியாகச் சொன்னாய்" என்றாள் விலாசினி. "பிறரைக் குறித்து நம் மனதிலுள்ள உணர்வுகள் எப்படிப்பட்டவை? அவர்களை எப்படிப் பார்க்கிறோம்? எங்களை மையப்படுத்தி நமக்குள் நாங்கள் உருவாக்கி வைத்திருக்கும் நியாயங்களில், மற்றவர்களுடைய மாறுபட்ட கருத்துக்களுக்காக எந்தளவை விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்? மற்றவர்களுடைய நம்பிக்கைகளுக்கு எந்தளவில் நாம் மதிப்பளிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம்..... என்றெல்லாம் பிரித்துப் பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது" என்றாள்.

அஜிதன் கசப்புடன் சிரித்தபடி சொன்னான். "எது அறம் என்று கண்டுகொள்வதே பெருங் குழப்பமாயிருக்கிறது. இதிலே சங்கப்பாடல் ஒன்று அறம்தான் நமக்குத் துணை வரும் என்கிறது. நாம் சேர்த்த சொத்துக்கள் நம்முடன் வரப்போவதில்லை. செய்த அறங்கள்தான் இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்லத் தெப்பம் போலத் துணை வருமாம்! ம்.... மனதைப் பெரும் பாரமாக்கி விட்டுவிட்டாய்" என்றபடி எழுந்தான்.

*பொதுமை இன்றி ஆண்டிசினோர்க்கும்*
*மாண்ட அன்றே யாண்டுகள் துணையே*
*வைத்தது அன்றே வெறுக்கை....*
*புணை கைவிட்டோர்க்கு அரிதே*
*துணை அழத் தொக்கு உயிர்*
*வௌவும் காலை, இக்கரை நின்று*
*இவர்ந்து உக்கரை கொளலே.*

(புறம்:- 357: 3-5, 7-9)

---

## சிந்தியா பதில்கள்

முன்னாள் திருகோணமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி சுடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலங்களையோ, கண்டனக் கட்டுரைகளையோ பெரிதாய்க் காணோமே?

இ.முகுந்தன், வவுனியா.

ஊர்வலக்காரர்களும், ஊடகக்காரர்களும் இப்போது சுட்டவர்கள் யாரென்பதை எப்படியோ அறிந்து விட்டார்கள் போலும்!

என்ன படம் பார்த்தீர்கள்?

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

ஜித்தன். அட! தமிழ் படங்களிலும் புதிதுபுதிதாய்க் கதைகளை யோசிக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டுப் பார்த்தால், கதை ஹிந்தியில் இயக்கிய ராம் கோபால் வர்மாவினுடையதாம்! பிறகு பார்த்தால் அவருக்கு அது சொந்தமில்லை. குமுதத்தில் ரா.கி. ரங்கராஜன் மொழிபெயர்த்த ஆங்கில நாவல் ஒன்றின் கதை.




மேற்கிந்திய கிரிக்கெட் அணி ஏன் இப்படித் தொடர் தோல்விகளைச் சந்திக்கிறது?

பி. சிமோன் ராஜா, சென் எலியாஸ்.

ஒரே அணியாகச் செயற்படுவதில் அவர்கள் இந்திய அணியை விட மோசம்.

விவேக்கின் 'சொல்லி அடிப்பேன்' என்னாச்சு?

ஆர். ஸ்ரீபன், கண்டி.

சொல்லாமலே இருந்திருக்கலாம் இப்போது கவலைப்படுபவராக இருந்தால் காலங்கடந்தாவது ஞானோதயம் பெற்று விட்டார் என்று அர்த்தம். இல்லையென்றால் கவுண்டமணிக்கு நேர்ந்த கதிதான்!

சண்டையால் யாருக்கு இலாபம்?

வீ.ஸ்ரீதர், மூதூர்.

இலாபம் ஆயுத வியாபாரிகளுக்கு நஷ்டம் பொதுமக்களுக்கு.

தமிழ்க் கவிஞரொருவன் என்னென்ன தகைமைகள் கொண்டிருக்க வேண்டும்?

மணிவேல் ருத்ரா, சின்னசெல்வகந்த.

மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும், மரணமடையாமலும் இருக்க வேண்டுமானால் மௌனமாயிருக்க வேண்டும்.

அழித்து அழித்தும் துரோகிகள் முடிவடைந்ததாகத் தெரியவில்லையே.... துரோகிகள் எப்போது ஒழித்து முடிக்கப்படுவார்கள்?

சி.மேகன், திருகோணமலை.

துரோகிகளைக் கொன்று முடித்து விட்டால் விடுதலை வந்துவிடும் என்று மறைமுகமாக ஊக்குவித்து வருகிற பத்திரிகைகளிடமும், தமிழறிஞர்களிடமும் இருந்து நாம் அவசரமாகப் பெற்றுக் கொள்ள வேண்டியது இந்த 'துரோகிகளின் லிஸ்ட்'டைத்தான்! முதலிலேயே அதைத் தந்து விட்டார்களென்றால் விடுதலை வரப்போகும் நாள் குறித்து நம்பிக்கையோடிருக்கலாம். மாறாக, ஒருவர் கொல்லப்பட்ட பிறகல்லவா அவர் துரோகியா இல்லையா என்று கணித்து முன்னேறிக் கொண்டிருக்கிறோம்!

கொழும்பு கம்பன் விழா பார்த்தீர்களா?

வி. மாலதி, தெகிவளை.

இளையவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிவதற்காக, ஞாயிறு காலை இளைஞர் விவாத அரங்கிற்குப் போயிருந்தேன். இளைஞர்கள் மரபிலக்கியத்தில் பெறும் பயிற்சியும், தாங்கள் விரும்புவதை வெளிப்படுத்தும் பேச்சாற்றலும் பாராட்ட வேண்டிய அம்சங்களாகத் தோன்றின. குறைகளாகத் தெரிந்தவை பின்வருவன:

1. எல்லோரும் ஒரே பாணியிலேயே பேசியமை. சுயமாக தங்களுக்குள் கருத்துக்களை உருவாக்கிக் கொள்கிறார்களா என்று சந்தேகப்பட வைத்தது.

2. பெரும்பாலானவர்களிடம் உள்ள ல,ள,ழ,ன,ண உச்சரிப்புப் பிரச்சினை.

3. கம்பன், வள்ளுவன், இளங்கோ, பாரதிக்கு அப்பால் நவீன இலக்கியங்களை பிறமொழி இலக்கியங்களைப் படிக்காமல் இருந்துவிடுகிறார்களோ என்ற சந்தேகம்

ஹரிஹரனின் பிரவேசத்தினால் S.P.Bக்கு பாடல்கள் குறைந்ததுதானே? முன்பே ஹரிஹரன் பாட வந்திருந்தால் S.P.B எப்போதோ காணாமல் போயிருப்பார் என்கிறான் நண்பன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கே.ரவி, கொழும்பு - 05.

இருவர் பாடல்களுக்கும் மயங்குகிறேன் நான். ஆனாலும் ஹரிஹரன் ஓய்ந்த பிறகும் S.P.B ஓடிக் கொண்டிருக்கிறார் என்பது தான் யதார்த்தம்!

வாழ்க்கையை வளப்படுத்துவது பணமா? நல்ல பண்புகளா?

கோபிபிரியா, வெலிமடை.

உங்கள் ஊரில் ஒரு பட்டிமன்றத்திற்கு ஏற்பாடு செய்வீர்களானால் அதில் நான் கலந்து கொண்டு, நல்ல பண்புகளே ஒருவரது வாழ்விற்கு வளம் சேர்க்கும் பணமல்ல என்பதை ஆணித்தரமான கருத்துக்களோடு வாதிட்டு நிறுவுவேன். போக்குவரத்துச் செலவோடு, அருமையான கருத்துக்களைத் தேடிக் தொகுப்பதற்கு நான் செலவழித்த நேரத்திற்கும் நீங்கள் மனமுவந்து ஒரு தொகையை அளித்தீர்களென்றால் நான் பெரிதும் சந்தோஷப்படுவேன். வேண்டுமானால், வளமுடன் வாழ்வதற்குப் பணமும் மிக அவசியம் என்பதைத் தனியாக உங்களிடம் ஒப்புக் கொண்டுவிடுகிறேன்.

கோயில்களில் செருப்பு திருடுபவர்களுக்கு உறைக்கிற மாதிரி ஏதேனும் சொல்ல முடியாதா?

ஜி.விக்னேஸ்வரன், குளியாப்பிட்டிய.

உறைக்கிற மாதிரி என்ன, ஓங்கி அறைகிற மாதிரி கூட சொல்லலாம். ஆனால் அவர்களெல்லாம் வேலை மினக்கெட்டு கேள்வி - பதில்களைப் படித்துக் கொண்டிருப்பார்கள் என்று தோன்றவில்லை.

இலக்கிய உலகில் பிந்திய செய்தி?

எம். மனோகரன், கொழும்பு - 13.

மூத்த எழுத்தாளர் செம்பியன் செல்வன் மறைவு.

கிழக்கில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்தான் நடக்கிறது. ஆனால், இப்போது தமிழ்த்தரப்பிலிருந்து எந்தக் கண்டனங்களும் வருவதில்லையே ஏன்?

எம்.எஸ். அஹமட் இப்ராஹிம், ஏறாவூர் -3.

ஜென் கதை ஒன்று:

ஒரு மடாலயத்தில் நான்கு துறவிகள் மௌன விரதம் பூண்டு தியானத்தில் அமர்ந்தார்கள்.

யாரும் ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது என்று வாக்குறுதி செய்திருந்தார்கள்.

நால்வருக்கும் நடுவில் ஒரு மெழுகு வர்த்தி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

அங்கே பரிபூரண அமைதி நிலவியது.

மெழுகுவர்த்தி கரைந்து கொண்டிருந்தது.

முழுவதும் உருகிய மெழுகுவர்த்தி அணையும் நிலையில் படபடத்தது.

அதைக் கவனித்த ஒரு துறவி, "மெழுகுவர்த்தி அணையப் போகிறது" என்று பேசினார்.

"நாம் பேசவே கூடாது என்பதை மறந்து விட்டீர்களா?" என்றார் இன்னொரு துறவி.

"பேசி விட்டீர்களே! வாக்குறுதியை இருவருமே மறந்து விட்டீர்களே?" என்றார் மூன்றாமவர்.

"ஹா! ஹா! எதுவுமே பேசாமல் இருப்பவன் நான் மட்டும் தான்" என்றார் நாலாமவர்!

மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதற்குத் தன்னிலை மறந்து வாய் திறப்பவர்கள் நாங்கள்!




**1921ஆம்** வருடம் அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் இங்கிலாந்தில் வைத்து ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஒன்று இடம்பெற்ற போது, இங்கிலாந்து அணி அடிக்கடி 30 வீரர்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

இதே நேரம் 1924ஆம் வருடம் இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் வைத்து தென்னாபிரிக்கா அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க


வசீம் அக்ரம்

அணி 30 ஓட்டங்களால் ஆட்டமிழந்ததுடன் இவ்வணியில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்கத்தில் ஓட்ட எண்ணிக்கையைப் பெறவில்லை. அதாவது ஒரு வீரர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை 7 ஆகும். இப் போட்டியில் இங்கிலாந்து அணி ஓர் இன்னிங்ஸினாலும் 18 ஓட்டங்களாலும் வெற்றியீட்டிக் கொண்டது.

1888ஆம் வருடம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் வைத்து இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான டெஸ்ட்போட்டியின் இரண்டாம் நாள் (ஒரு தினத்துக்குள்) 157 ஓட்டங்களுக்கு இரு அணிகளுமாக 27 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன.

அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் 1888ஆம் வருடம் மென்கெஸ்டரில் உள்ள, 'ஓல்ட் டிரபட்' மைதானத்தில் வைத்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளன்று மதிய உணவு இடைவேளைக்கு முன்பதாக இரு அணிகளுமாக 18 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டிருந்தன.

1991-92ஆம் வருடங்களின் போது 'பர்த்' இல் வைத்து இடம்பெற்ற அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியின் போது 33 வீரர்கள் பிடி கொடுத்து ஆட்டமிழந்தனர்.

இதே போன்று 1888-89ஆம் வருடங்களில் கேப்டவுனில் வைத்து இடம்பெற்ற போட்டியொன்றின் போது ஓர் இன்னிங்ஸில் 9 துடுப்பாட்ட வீரர்கள் பந்து நேரடியாக விக்கெட்டில் பட்டதனால் ஆட்டமிழந்துள்ளனர்.

1895-96ஆம் வருடங்களில் தென்னாபிரிக்காவிலுள்ள போர்ட் எலிசபெத் மைதானத்தில் வைத்து தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் போது 17 துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டை மறைத்ததன் காரணமாக ஆட்டமிழந்தனர். இதில் 9 வீரர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாவர். 8 பேர் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்தவர்களாவர்.


இதனிடையே அவுஸ்திரேலிய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் போது 7 பேர் விக்கெட்டுகளுக்கு இடையில் ஓடும் போது ஆட்டமிழக்கப்பட்டனர். இப்போட்டி 1972-73 வருடங்களில் இடம்பெற்றது.

இதில் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த மூவரும் பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த வீரர்கள் நால்வரும் அடங்குவர்.


இயன் போத்தம்

1996-97 வருடங்களில் இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையில் 'ஷெய்குபுரா' வில் வைத்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின்போது ஓர் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த வசீம் அக்ரம் 2 சிக்ஸர்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இங்கிலாந்து அணியின் ஜோன் எட்ரிச் 1965ஆம் வருடம் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது ஆட்டமிழக்காமல் 310 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார். இதில் 238 ஓட்டங்கள் பவுண்டரி மற்றும் சிக்ஸர்களால் பெறப்பட்டதாகும். அதாவது 5 சிக்ஸர்களும் 52 பவுண்டரிகளும் இவரால் பெறப்பட்டன. இவர் இங்கிலாந்து அணி சார்பில் 77 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளதுடன் 12 சதங்களையும் 24 அரைச் சதங்களையும் பெற்றுக் கொண்டுள்ளார். இவரால் பெறப்பட்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை 5, 138 ஆகும். (சராசரி : 43:54)


கபில்தேவ்

இனி, இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் 1990ஆம் வருடம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் வைத்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின்போது இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஈ.ஈ.ஹெமின்ங் எனும் பந்து வீச்சாளரின் ஒரு ஓவர் பந்து வீச்சின் போது இந்திய அணியைச் சேர்ந்த கபில்தேவ் அடுத்தடுத்து நான்கு சிக்ஸர்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் 1980-81ஆம் வருடங்களின் போது 'போர்ட் ஒப் ஸ்பென்'னில் வைத்து இடம் பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப் பந்து வீச்சாளரான என்ட்டி ரொபர்ட்ஸ், இபன் பொத்தமின் ஓவர் ஒன்றின்போது 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். 4, 6, 2, 6, 6, 0 மற்றும் மேலதிகமாக ஓர் ஓட்டம் என்ற வகையில் இவர் அதனைப் பெற்றுக்கொண்டார்.

துடுப்பாட்ட வீரர் என்ற வகையில் அந்தளவுக்கு சோபிக்காத என்ட்டி ரொபர்ட்ஸ் 47 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 762 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டார். சராசரி 14.94 ஆகும். பந்து வீச்சில் அவர் 202 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். (சராசரி : 25.61)


**- மைந்தன்**


# ஜோதிட மனவள ஆலோசகர்

## டாக்டர் கே.கங்காதரன் M.A., J.P அவர்கள்

**அனேகரின் அன்பின் வேண்டுகோளிற்கிணங்க ஐரோப்பா வருகிறார்.**





கைரேகை, ஜாதகம், எண் ஞானம், வாஸ்து முறைகளால் வாழ்க்கையின் வெற்றியினை அறிய, பிரச்சினைகளிலிருந்து விடுபட, எண்ணங்கள், ஆசைகள் நிறைவேற, தியான சக்தியின் மூலம் கரும வினை அகற்ற முன்பதிவுடன் தொடர்புகொள்ளவும்.

**22, 23, 24.05.2005 ஆகிய திகதிகளில் - ஹொலண்ட்**
**25, 26, 27, 05.2005 ஆகிய திகதிகளில் - பிரான்ஸ்**

London Victone T.V.யில் வெள்ளிதோறும் காலை 9.30 மணிக்கு இடம்பெறுகின்ற 'கையளவு உலகு' நிகழ்ச்சியில் கைரேகை சம்பந்தமான ஆய்வுகளைத் தொகுத்து வழங்குகிறார். மற்றும் இலங்கை தொலைக்காட்சியில் வாரந்தோறும் இடம்பெறும் வெற்றியின் இரகசியம் கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் அளித்து வருகிறார். மித்திரன் பத்திரிகையில் மனோதத்துவ ஆலோசனையும், பாலியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு விடையளித்தும் வருகிறார். பல நாடுகளுக்கு சென்று சோதிடத் துறையில் பல ஆராய்ச்சிகளின் பின் நன்மை பெற்றோர் பலர்.....

இவர் உலகப் புகழ் பெற்ற சோதிட மாமேதை பேராசிரியர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P. ஐயா அவர்களின் புதல்வர் ஆவார்.

உங்கள் தேவைகளுக்கு.
Dr.K. Gangatharan M.A. J.P.
23, May Field Road,
Colombo - 13.
Tel : 00 94 11 23 44832/
00 94 77 73 88 860

75 rue Philippe de Girard
75018 Paris
M : la chapelle/marx dorthoy
Tel./Fax : -01 42 05 16 82
(விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக)

மேலதிக தொடர்புகளுக்கு - France : Vasanthan
06 10 14 27 67 - 02 38 90 09 53

www.gangatharan.com e-mail : drpksamy@sltnet.lk


## சமாதானத்தின் இன்றைய.....

17ஆம் பக்கத்தொடர்ச்சி......

இதனை வழங்குவதற்காகவே சர்வதேச சமூகமும், இலங்கை அரசியல் தலைமைகளும் பாடுபட வேண்டும்! யதார்த்த நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும்! தமது அணுகுமுறைகளை, பார்வையை இலங்கையில் சமாதானம் தொடர்பாக உலக சமூகம் மாற்றிக் கொள்ள வேண்டும் என இச்சபையில் கேட்கிறேன்.

புலிகள் சமாதானத்தின் மீதும் மக்கள் மீதும் உண்மையாக விருப்பங்கொண்டவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் தமது கடந்த கால சம கால தவறுகளை ஏற்றுக்கொண்டு உண்மையான ஜனநாயக வழிக்கு வருவார்களா?

எதற்காக அப்படி வர மறுக்கின்றார்கள்?... புலிகள் சமாதானத்தைக் கண்டு அச்சப்படுகிறார்களா?... அவர்களால் ஒரு யுத்த சூழலில் மட்டும்தான் வாழ முடியுமா? ஜனநாயக சூழலில் அவர்களால் உயிர்வாழ முடியாதா?...

தங்களது சுயலாபங்களுக்காக புலிகளுக்காகப் பரிந்து பேச இங்கு வந்திருப்பவர்களுக்கு இது நன்கு தெரியும்! அப்படி வந்தவர்கள் தங்களது மனச்சாட்சிக்கு விரோதமாகவே நடந்த கொண்டிருக்கிறார்கள்!

பிரபாகரனை பங்கருக்குள் இருந்து வெளியே அழைத்துவர இவர்களால் முடியுமா?...பிரபாகரனை மக்களோடு பேச வைக்க முடியுமா?... பிரபாகரனின் மனத்தில் சமாதானம் குறித்த நம்பிக்கைகளை விதைக்க இவர்களால் முடியுமா?...மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பிரபாகரனுக்கு நேரடியாக தெரியப்படுத்த முடியுமா?..

உடுத்த உடுப்போடு ஒரே நாளில் முஸ்லிம் மக்களை அவர்களது நீண்டகால வாழ்விடங்களை விட்டுத் துரத்திய புலிகள், அவர்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற அனுமதிப்பார்களா?... அதற்குப் பகிரங்க மன்னிப்பு கேட்பார்களா?...

1987க்கு முன்பு நடந்த பேரினவாதிகளின் இனப் படுகொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் உரிமை மறுப்புகளுக்கும் சிங்கள மக்கள் சார்பில் தமிழ் மக்களிடம் ஜனாதிபதி அவர்கள் பெருந்தன்மையோடு மன்னிப்புக் கோரியிருந்தார். அதை நாம் வரவேற்றிருந்தோம்! ஆனால் எதிரிக்கு எதிராக என்று கூறி ஆயுதம் ஏந்திய புலிகள் எதுவும் அறியாத அப்பாவி சிங்கள மக்கள் மீது மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தி யிருந்தார்கள்! அந்த மக்களைக் கொன்று குவித்தார்கள்! புலிகளால் கொல்லப்பட்ட அப்பாவி சிங்கள மக்களின் உறவுகளிடம் பெரும்பான்மை சமூகத்திடம் புலிகள் பகிரங்க மன்னிப்பு கோருவார்களா?...

ஆயிரக்கணக்கான மாற்று இயக்கப்போராளி களையும் பொது மக்களையும் கொன்று குவித்தார்கள் புலிகள்!... அதற்காக தமிழ் சமூகத்திடம் புலிகள் பகிரங்க மன்னிப்புக் கோருவார்களா?... தொடரும் படுகொலைகளை நிறுத்தி தம்மை ஜ

னநாயக வாதிகள் என்பதை நடைமுறையில் நிருபிப்பார்களா?...

அரச தரப்புக்கு எதிராக மட்டும் அர்த்தமற்ற வகையில் கூச்சலிடும் இவர்கள், தமிழ் தேசியம் என்ற போர்வைக்குள் மறைந்து நின்று கொண்டு, புலிகள் பெறும் கப்பத்தை நிறுத்த முடியுமா?... புலிகளின் கொலைகளை நிறுத்த முடியுமா?..

அப்படி புலிகள் ஒரு வழிக்கு வரும் பட்சத்தில் மட்டும்தான் அவர்கள் கூறும் சமாதானம் குறித்து மக்கள் நம்பிக்கை வைக்க முடியும் என்பதை இந்த சபையில் நான் கூறி வைக்க விரும்புகிறேன்!

எம்மீதான புலிகளின் மரண அச்சுறுத்தல், படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல் போன்ற அராஜகங்களுக்கு மத்தியிலும் ஈ.பி.டி.பி. சமாதான வழிமுறையிலிருந்து தடம்புரளாமல் இன்னமும் பயணித்து வருகின்றது.

(தொடரச்சி 9 ஆம் பக்கம் பாரக்க.....)

## எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 8 : பிறந்த கிழமை ஞாயிறு

வாழ்க்கையை எட்டு எட்டாகத்தான் வகுத்திருக்கின்றார்கள் முன்னோர்கள். எட்டு எதையும் சாதிக்கும் திறன் கொண்ட எண். ஞாயிற்றுக்கிழமை என்பது சூரியனைக் குறிக்கின்றது. சோதியமயமான நாள்தான் ஞாயிறு. ஆடிஓடி உழைத்துக் களைத்த உள்ளங்கள் மகிழ்ச்சியடைகின்ற விடுமுறை நாளாக ஞாயிறு திகழ்கின்றது. இவ்வாறான சிறப்புகள் கொண்ட எண் எட்டிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் பிறந்துள்ள நீங்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மீது அன்புகொண்டு அவர்களை அரவணைத்துச் செல்லும் தன்மை உடையவர். தன்னுடைய அறிவுக்கும், வளர்ச்சிக்கும் முக்கியமான காரணம் பெற்றோர்களும் உறவினர்களும் என்பதை ஒருநாளும் மறக்காமல் அவர்களை மதித்து நடப்பீர்கள். ஆனால் உங்கள் பேச்சில் அதிகாரத்தன்மை பளிச்சிடும். இதனால் உறவினர்களோ நண்பர்களோ உங்களிடம் நெருங்கிப் பழகுவதற்குத் தயக்கம் காட்டுவார்கள். பேசுவதற்குக் கூட பயப்படுவார்கள். எது எப்படி இருந்த போதிலும் உங்கள் மனதைக் கவர்ந்தவர்களை நீங்கள் ஆதரிப்பீர்கள்.

ஒருவரின் பேச்சோ, செயலோ உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் அவர்களை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்வீர்கள்.

வேலை விடயத்தை எடுத்துக் கொண்டால் முடியாதது என்று எதுவுமே உங்களிடம் இல்லை. எந்த வேலையாக இருந்தாலும் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறன் உங்களிடம் இருக்கிறது. நேர்மை என்பது ஒரு மனிதனின் புனிதமான குணங்களில் ஒன்று. நாணயம் ஒரு மனிதனின் மேலான நற்பண்புகளில் முக்கியமானது. உண்மை என்பது தெய்வீகத்தன்மைக்கு நிகரானது என்று நம்புகின்ற உயர்குணம் பெற்றவர் நீங்கள். மேற்கூறிய உங்களது பண்புகளுக்கு மாற்றமாக, அதாவது பொய் சொல்லுதல், வாக்குத் தவறுதல், ஒழுக்கயீனமாக நடத்தல் போன்ற செயல்களை உடையவர்களை வெறுத்து ஒதுக்கிவிடுவீர்கள்.

மனிதனாகப் பிறந்தது புனிதனாக வாழ்வதற்காக என்ற கொள்கை மீது அதிக பற்றுதல் கொண்டவர்தான் நீங்கள். மனிதன் தன்னிடம் மறைந்து கிடக்கின்ற மிருக குணத்தை நீக்கி உண்மையான மனிதனாக வாழ வேண்டும் என்ற கோட்பாட்டைப் பின்பற்றுகின்றவர்தான் நீங்கள். நீங்கள் உங்களுடைய 19ஆவது வயதில் இருந்து 28, 37, 46, 55, 64, 73 வயதுகளில் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

தொழில் முறையினைப் பொறுத்தவரையில் ஒரு நிலையான தொழிலில் அமர்ந்து படிப்படியாக முன்னேறுவீர்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்தினைப் போற்றியும் பின்பற்றியும் நீங்கள் நடப்பவராக இருப்பதனால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். இதன் காரணமாக பெரிய பதவியில் அமரக்கூடிய வாய்ப்பும் வசதியும் உங்களுக்கு ஏற்படும்.

நேர்மை, அன்பு, உண்மை, நாணயம், தொழில் பக்தி போன்ற உயர்ந்த குணாம்சங்கள் உங்களிடம் அதிகம் காணப்படுவதன் காரணமாகப் பிறர் உங்களை மதித்துப் போற்றக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எப்பொழுதும் உங்களை மற்றவர்கள் மதிப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. இவ்வாறான உயர்ந்த அம்சங்கள் நிறைந்து காணப்படுபவராக நீங்கள் இருப்பதனால் வருமானத்திற்கு எந்தவிதமான குறைச்சலும் இருக்காது. இடையிடையே சிறு சிறு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதனை இலகுவாகச் சமாளித்து முன்னேறக் கூடிய வல்லமை பெற்றவர்தான் நீங்கள்.

உங்களுடைய தேகநிலை சூடான தன்மை கொண்டதனால் சூட்டுத்தன்மை கொண்ட நோய்கள் உங்களுக்கு ஏற்படும். ஆகவே குளிர்ச்சி பொருந்திய உணவுவகைகளை நீங்கள் அதிகம் சாப்பிட்டுவர வேண்டும். இதனால் உங்களுக்கு ஏற்படக்கூடிய வாய்ப்புண், மலச்சிக்கல், நெஞ்சு எரிவு, வயிற்றுவலி போன்ற நோய்கள் வராமல் இருக்கும். அல்லது இலகுவாகக் குணமாகிவிடும். தயிர், மோர், இளநீர் போன்ற உணவு வகைகளை நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டும்.

மனிதனாகப் பிறந்த யாவருக்கும் அவ்வப்போது ஆபத்துக்கள் வருவது இயல்பானது. மேலே வானம் கீழே பூமி இதற்கிடையே மனிதனுடைய வாழ்க்கை. ஆகவே கண்டம் ஏற்படுவதைத் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. இதனால் 7ஆவது, 21ஆவது வயதுகளில் உங்களுக்கு கண்டம் ஏற்பட்டு விலகும். நீங்கள் பயப்படத் தேவையில்லை.

உங்களுக்கு வாழ்க்கையின் பல திருப்புமுனைகளையும், வெற்றிகளையும், புகழையும், சிறப்புக்களையும் ஏற்படுத்தக்கூடிய அதிர்ஷ்ட எண் எது தெரியுமா? அது எண் 5. ஆகவே ஒரு மாதத்தில் வரக்கூடிய 5, 14, 23 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களை ஆரம்பியுங்கள். வெற்றியும் மகிழ்ச்சியும் உங்களுக்கு உண்டு. இந்தத் திகதிகள் நீங்கள் பிறந்த கிழமையாகிய ஞாயிற்றுக்கிழமையில் அமையுமாக இருந்தால் இதற்குரிய நற்பலன் மிகமிக விசேடமானதாக அமையும் என்பது உறுதி.

நீங்கள் சந்தன நிறத்தில் சோட்டும் வெள்ளை நிறத்தில் வேட்டியோ, சாரமோ அணிவது அதிர்ஷ்டத்தை உண்டாக்கும். நீங்கள் வசிக்கின்ற இல்லம் உங்கள் வாழ்க்கையில் பெரும் முக்கியத்துவத்தை வகிக்கின்றது. அதனால் இல்லம் நல்லவைகளை ஏற்படுத்த வேண்டும். ஒரு காரியத்தை முதன் முதலில் வீட்டிலிருந்துதான் ஆரம்பிக்கின்றீர்கள். அதனால் நீங்கள் வசிக்கின்ற வீடு உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தர வேண்டும். அதிர்ஷ்டமாக அமைய வேண்டும். ஆகவே உங்கள் இல்லத்தின் இலக்கம் இரட்டை எண்ணாக அதாவது 2, 4, 6, 8, 10, 12 இந்த ஒழுங்கில் வைத்துக்கொள்ளுங்கள். வீடும் உங்களுக்கு யோகமாக அமையும்.

ஆகவே எண் 8ஐயும் ஞாயிறுகிழமையினையும் யோகமாகக் கொண்ட நீங்கள் வாழ்க்கையில் ஜெயம் பெற என் ஆசீர்வாதங்கள்.

எட்டு ஞாயிறோடு சேர்ந்து கூட்டாக அமைந்து வந்தால் பட்டாடை, சுக போகம் வரும். கட்டாயம் அதிசிறப்பு உண்டாகும்.

**அடுத்த வாரம் ஆதிக்கம் 9 திங்கட்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# லெனின் (1870 - 1924)


# உலகை வியக்க வைத்தவர்கள்

ரஷ்யாவில் பொதுவுடைமை ஆட்சியை நிறுவுவதற்குக் காரணமாக இருந்த முக்கிய அரசியல் தலைவர் லெனின் ஆவார். இவருடைய இயற்பெயர் விளாடிமிர் இலியீச் உலியானாவ் என்பதாகும். ஆனால், இவருடைய புனை பெயரான 'லெனின்' என்ற பெயரிலேயே இவரை உலகம் நன்கறியும். பொதுவுடைமைக் கொள்கையை நிறுவிய உலகப் புகழ்பெற்ற கார்ல் மார்க்ஸ் என்பாரின் ஆர்வமிக்க சீடரான லெனின், மார்க்ஸ் அவ்வப்போது கோடி காட்டிய கொள்கைகளை நடைமுறையில் தீவிரமாகச் செயற்படுத்தினார். லெனின் உருவாக்கிய பொதுவுடைமைக் கொள்கை உலகின் பல பகுதிகளில் மிக விரைவாகப் பரவியதால், வரலாற்றில் மிகுந்த செல்வாக்குமிக்க மாந்தர்களுள் ஒருவராக அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

லெனின் 1870ஆம் ஆண்டு ஏப்ரல் 9இல் ரஷ்யாவில் இப்போது அவரது பெயரால் உலியானாவ்ஸ்கி என்று வழங்கும் கிம்பர்ஸ்க் என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் விசுவாசமிக்க அரசு அலுவலராக இருந்தார்.

தாயார் ஒரு மருத்துவரின் மகள். இவருடைய அண்ணன் அலெக்சாண்டர் ஒரு புரட்சிப் பயங்கரவாதக் கட்சியில் சேர்ந்து, 1891இல் மூன்றாம் அலெக்சாண்டர் என்ற ஜார் மன்னரைக் கொல்ல நடந்த சதியில் பங்கு கொண்டதற்காகத் தூக்கிலிடப்பட்டார். இந்த நிகழ்ச்சியே லெனினுடைய வாழ்க்கைப் போக்கை முடிவு செய்ததாகும். இவர் தமது 23ஆம் வயதிலேயே ஒரு தீவிர மார்க்ஸியவாதியாக மாறினார். புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஜார் அரசு இவரை 1895ஆம் ஆண்டு டிசம்பரில் கைது செய்து, 14 மாதங்கள் சிறையிலடைத்தது. பின்னர் இவர் கீழைச் சைபீரியாவிலுள்ள யெனிசே மாகாணத்துக்கு மூன்றாண்டுகள் நாடு கடத்தப்பட்டார்.

சைபீரியாவில் இவர் கழித்த இந்த மூன்றாண்டுக் காலம் இவருக்கு அத்துணை துயர்மிகுந்ததாக இருக்கவில்லை. அங்கு இருந்தபோதுதான் லெனின் 1898இல் தமக்குத் தோழியராக இருந்த குருப்ஸ்காயா என்பவரை மணந்துகொண்டார். 'ரஷ்யாவில் முதலாளித்துவம் வளர்ந்த வரலாறு' என்ற நூலையும் அப்போதுதான் எழுதினார். இவருடைய சைபீரிய வாழ்க்கை 1900 பெப்ரவரியில் முடிவடைந்தது. சில மாதங்களுக்குப் பிறகு இவர் மேற்கு ஐரோப்பாவுக்குச் சென்றார். அங்கு இவர் ஒரு தொழில்முறைப் புரட்சிவாதியாக சுமார் 17 ஆண்டுகளைக் கழித்தார். அப்போது,


லெனின்

இவர் சார்ந்திருந்த ரஷ்யன் சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி 'போல்ஷ்விக் கட்சி' என்றும், 'மென்ஷிவிக் கட்சி' என்றும் இரண்டாக உடைந்தது. லெனின் பெரிய கட்சியாக இருந்த 'போல்ஷ்விக்' கட்சிக்குத் தலைவரானார்.

1914இல் தொடங்கிய முதல் உலகப் போர் லெனினுக்குப் பெரும் வாய்ப்புகளைத் தேடித் தந்தது. அந்தப் போரில் ரஷ்யாவுக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டது. பொருளாதாரத் துறையில் பேரழிவுகள் ஏற்பட்டன. 1917ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜார் அரசு கவிழ்க்கப்பட்டது. ரஷ்யாவில் மக்களாட்சி ஏற்படலாம் என்று கூடத் தோன்றியது. ஜார் அரசு வீழ்ச்சியுற்றதை அறிந்ததும், அப்போது சுவிற்சர்லாந்தில் இருந்த லெனின் உடனே ரஷ்யா திரும்பினார். ஜார் ஆட்சி வீழ்ந்த பின்னர் ரஷ்யாவில் ஜனநாயகக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு தற்காலிக அரசை அமைத்திருந்தன. ஆனால், அந்தக் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பதையும், மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்கும் வலிமை அக்கட்சிகளுக்கு இல்லை என்பதையும் லெனின் அறிந்து கொண்டார். கட்டுக்கோப்பும் ஒழுக்கமும் வாய்ந்த தம்முடைய பொதுவுடைமைக் கட்சி எண்ணிக்கையில் சிறியதாக இருப்பினும், அது ஆட்சியைப் பிடிப்பதற்கு அரிய வாய்ப்பு உருவாகியிருப்பதையும் லெனின் கண்டார். எனவே, தற்காலிக அரசை கவிழ்த்துவிட்டு பொதுடைமை அரசை நிறுவும்படி அவர் போல்ஷ்விக் கட்சியினரைத் தூண்டினார். "இப்போது இல்லையெனில் இனி எப்போதும் இல்லை" என்று கூறி அவர்களை ஊக்குவித்தார். 1917 ஜுலையில் நடந்த ஒரு புரட்சி முயற்சி வெற்றி பெறவில்லை. இந்தப் புரட்சியின் எதிரிகள் இவரை ஜெர்மன் கையாள் என்று காட்ட முயன்றனர். அதனால் இவர் முதலில் பெட்ரோகிராடு நகரில் ஒரு குடும்பத்தினருடனும், பின்னர் பின்லாந்திலும் ஒளிந்திருந்தார். பின்னர், 1917 நவம்பரில் நடந்த இரண்டாவது புரட்சி வெற்றி பெற்றது. லெனின் தாயகம் திரும்பி, புதிய ஆட்சியின் தலைவரானார்.

அரசுத் தலைவர் என்ற முறையில் லெனின் ஈவிரக்கமின்றி நடந்து கொண்டார். ஆயினும், மக்கள் நலனுக்குப் பயன்படுகின்ற கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தீவிர நாட்டமுடையவராக இருந்தார். லெனின் முதலில் முழுமையான சோசலிஸப் பொருளாதாரத்தை மிக விரைவாக ஏற்படுத்துவதில் தீவிரம் காட்டினார். ஆனால், இந்த முயற்சி தோல்வி கண்டபோது இவர் தமது கொள்கையை மாற்றிக் கொண்டார். முதலாளித்துவமும் சோசலிஸமும் இணைந்த ஒரு கலப்புப் பொருளாதாரத்தை வகுத்துச் செயற்படுத்தினார்.

**வியப்புகள் தொடரும்....**

---

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

***வணக்கமுங்கோ!***

என்னதான் தொழில் நுட்பம் வளந்திட்டாலும் ஒரு ஆள் கதைக்கிறதை மற்றவர் ஒட்டுக்கேட்கிற தெண்டது ஒரு சம்பிரதாயமாயிட்டுது. பெங்களூர் பேச்சுவார்த்தைக்கு பாலா அண்ணை போறதுக்கு முன்னம் உண்ணாவிரத மிருந்து உயிர் நீத்த திலீபனோடை உரையாடினதுகளை அந்த நேரம் ஈ.பி.ஆர்.எல்.எப்.காரார் வயர்லெஸ்ஸில ஒட்டுக்கேட்டுப்போட்டு சிரிச்சுக்கொண்டு திரிஞ்சிச்சினமாம். அதுபோலை உந்த சட்டலைட் யுகத்திலையும் ஒரு ஒட்டுக் கேட்கப்பட்டால் எப்புடி இருக்கும்? கொஞ்சம் திங்பண்ணிப் பார்த்தன். சூப்பரோ....சூப்பர்.

இப்பவும் பாலா அண்ணை தானுங்கோ. ஆனால், இந்தத் தடவை திலீபனுக்குப் பதில் வொயிஸ் மாறிட்டுது. சு.ப.தான் உரையாடினார்.

*சு.ப. :- அண்ணா தெளிவா கேட்குதோ....*

**பாலா :-** கேக்குது கேக்குது. நீர் என்ன சிங்களவனின்ர ரெலிபோனிலையே பேசுறீர் அவனுகள் ஒட்டுக் கேக்கிறதுக்கு. சொல்லும் என்ன விஷயம்.

*சு.ப. :- ஓம் அண்ண...உந்தப் பொதுக் கட்டமைப்பு அதுதான் அண்ண.... மனிசி இணங்காதெண்டுதான் அதைக் கேக்கச் சொன்னியள். ஆனால் அவா என்ன விதப்பட்டும் அமைச்சே தீருவன் எண்டு சொல்லிப் போட்டாவே.*

**பாலா :-** அடக்கோதாரி! ஜே.வி.பி.யும் பிக்குமாரும் ஸ்ரோங்கா எதிர்த்தும் மனிசி உப்பிடிச் சொல்லும் எண்டு நானும் யோசிக்கயில்லை. ம்.... இப்ப என்ன செய்யலாமெண்டு அவர் நினைக்கிறாராம்.

*சு.ப. :- அண்ண.... அவா அப்புடிச் சொன்னாலும் ஒரு இடத்தில பிழைச்சிட்டா. அதாவது தங்கண்ட இறைமையை நாங்கள் ஏற்றுக் கொண்டுதான் பொதுக் கட்டமைப்புக்கு ஓம் பட்டிருக்கம் எண்டா. உடன நாங்கள் அதை மறுத்துப் போட்டம். இதை வச்சுக்கொண்டு ஏதாச்சும் செய்ய ஏலுமே எண்டுதான் அண்ண கேட்டவர்.*

**பாலா :-** செய்யலாம்...செய்யலாம்.... உதையே நீங்களும் சொல்லி எங்கட வாலாட்டிகளையும் சொல்லச் சொல்லுங்கோ....பொதுக் கட்டமைப்பை விடவும் வேற ஏதாவது நான் யோசிச்சுப் போட்டு பிறகு சொல்லுறன்....

*சு.ப. :- சரியண்ண விளங்கிட்டுது. உங்களை எரிக் சந்திச்சவரெல்லோ என்ன சொன்னவர்.....*

**பாலா :-** அவர் என்ன சொல்லுறது.... வழமையான ஒப்பாரிதான். கிழக்கில நாங்கள் படுகொலைகளை நிறுத்த வேணுமாம். சின்னன்களைப் பயிற்சிக்காகப் பிடிக்கிறதை நிறுத்த வேணுமாம். தொட்டதுக்கும் பட்டதுக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யிறதையும் நிறுத்தட்டுமாம்.

*சு.ப :- அந்த மனிசனுக்கு விசர் அண்ண. உதையே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு திரியிறார். அதிருக்கட்டும் நீங்கள் என்ன சொன்னியள்.*

**பாலா :-** (பாலா யோசிக்கிறார். தன்ர வாயைப் பிடுங்கி சு.ப. அங்காலை போட்டுக் கொடுத்து பெரியாளாகப் பார்க்கிறான் எண்டு யோசிச்சிட்டு)

நான் என்ன சொல்ல, வழமை மாதிரி மறுத்துப்போட்டன் எண்டு ஒருக்காச் சொல்லிப்போடும்.

*சு.ப. :- சரியண்ண, அடுத்த கட்டமா என்ன திட்டம் எண்டதை நான் சுற்றுலா வரேக்க சொல்லுறன். வைக்கிறன் - என்று வன்னித் தொடர்பு துண்டிக்கப் படுகிறது.*

*பாலா:- (போனை வைக்காமலே)*

*அவன் பாவி ஒரு நாளைக்கு ஒரு சவம் விழாட்டில் சிரிக்கமாட்டான். இங்க நான் இவனுகளிட்டை மாட்டிக்கொண்டு தவிக்கிறன். சிலோனில விழுற கொலைக்கு லண்டனில கேள்வி கேக்கிறாங்கள். சுடச் சொல்லுறவன் ஒருவன், சுடுறவன் ஒருவன், சுடுறதுக்குத் திட்டம் போடுறவன் ஒருவன், அதுக்குப் பல்லுக்காட்டி பதில் சொல்லுறதுக்கு நான். சே...... உந்த மானங்கெட்ட பிழைப்பு இன்னும் எத்தின நாளைக்கோ! என்று சலிச்சுக்கொண்டு போனை வைக்கிறார்.*

*இன்னொரு செய்தி போகுது, இன்று காலை மற்றுமொரு தமிழ் இளைஞன் இனந்தெரியாத நபரால் சுடப்பட்டுள்ளார் எண்டு. பாலா அண்ணைக்கு உதைக் கேட்க பிரஸர் ஏறுது. ஹீ....ஹீ.....எப்புடி இருக்குது....*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்த வாரம் உங்கள் பலன்

(26.05.2005 தொடங்கி 01.06.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், புதன், வெள்ளி, மிதுனம் - சனி. (26.05.2005 இல் கடகசனி)
கன்னி - வியாழன், கேது, கும்பம் - செவ்வாய், மீனம் - இராகு
சந்திரன் தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் சிறப்பு, பணவருவாய், உயர்ந்த எண்ணம், புதிய முயற்சி, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் மந்தம், கூடிய முயற்சி, பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக அச்சம், மேலதிகாரிகள் பகை, மாணவர்கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் கஷ்டம், வீண்குறை கேட்டல், அன்னியர் சகவாசம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நிலை உயர்ச்சி, பணவரவு, எதிர்பார்த்த நன்மை, குடும்ப பாரம், சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் அலைச்சல், பணச் செலவு, பணியாளர் தொல்லை, வீண் குறை கேட்டல், குடும்பக் கவலை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் கலக்கம், மனக்குறையதிகம், பணக் கஷ்டம், பெரியோர் உதவி, இனசன நன்மை, குடும்ப சிக்கல், உத்தியோக முயற்சி, அன்னியர் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, மனக்குறை நீங்கும், குடும்ப சுகம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம்,பணச்செலவு, பணியாளர் பகை, பெரியோர் சகாயம், தேகசுகக் கஷ்டம், குடும்பத் தொல்லை, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் அலைச்சல், பணச் செலவு, அன்னியர் நட்பு, மனக்கிலேசம், குடும்பப் பொறுப்பு, உறவினர் பகை, உத்தியோக நன்மை, கௌரவம், மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, குடும்ப மகிழ்ச்சி, மனக்குறையதிகம், உத்தியோக கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி, பண வரவு, வெளியிடப் பயணம், குடும்ப நன்மை, உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, பணவரவு, புதிய மாற்றம், அன்னியர் சகவாசம், மனக்குறையதிகம், குடும்பப் பகை, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

கிழக்கு மாகாணம் 107.9, 104.8
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல — 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com


இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




## கமரா சுட்டது

படத்தில் ஏதோ ஆட்டு மந்தைகள் ஒன்றாகச் சேர்ந்து காணப்படுவது போல் தோன்றுகிறதா? இல்லவே இல்லை. இது மனிதர்கள் தான். சும்மா அல்ல; அனைவரும் நிர்வாணமாக. சுமார் 7,000 ஆண்களும், பெண்களும் முழு நிர்வாணமாக ஸ்பெயின் நகர வீதியொன்றில் ஒரு புகைப்படக்காரருக்குப் போஸ் கொடுக்கும்போது திருட்டுத்தனமாகச் சுடப்பட்ட இக் காட்சி ஆர்ப்பாட்டத்திற்கான முயற்சி இல்லை. ஸ்பென்சர் எனும் புகைப்படப்பிடிப்பாளர் உலக சாதனை ஒன்றை நிகழ்த்துவதற்காக அனைவரையும் இவ்வாறு போஸ் கொடுக்கச் சொன்னார். ஆணும் பெண்ணும் சரிசமம் என்பது இதுதானோ..........?



நாம் அன்றாடம் உயர வித்தியாசங்கள் உடைய மனிதர்களைக் காண்பது வழமை. ஆயினும் இங்குள்ள உயரத்தால் மிகவும் சிறியவர், இந்தியாவைச் சேர்ந்த குல் முஹமட் இவர் 57 சென்றி மீற்றர் (22.5 அங்குலம்) உயரமுடையவர். ஆனால் இவரின் உயரம் உலக சாதனைப் புத்தகத்தில் மிகவும் சிறிய மூப்படைந்த மனிதர் எனப் பதியப்பட்டுள்ளது. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பது சும்மாவா?

## குள்ளமணி

இது வேற்று கிரகவாசியா? இல்லவே இல்லை. பல ஒஸ்கார் விருதுகளை அள்ளிச் சென்ற 'த லோட் ஒப் தி ரிங்' படத்தில் தோன்றிய கூலம் என்ற கதாபாத்திரமே இது. இக் கதாபாத்திரம் வீட்டா எனும் டிஜிட்டல் தொழில்நுட்ப நிறுவனத்தால் 250 பேரின் முக வெளிப்பாடுகளையும் 300 பேரின் தசை அசைவுகளையும் உள்வாங்கியே உருவாக்கப்பட்டது. இளம் நடிகரான அன்டி சீக்கிரீஸ் என்பவர் இப்படியான கோலத்துக்கு மாறியுள்ளார். இக் கதாபாத்திரம் உலக சாதனையைப் படைத்துள்ளது. எப்படியிருந்த நடிகர் இப்படியாகிவிட்டார் பாருங்கள்....?






## குத்து

நவநாகரீகப் பெண்கள் தங்கள் அழகினை வெளிக்காட்ட ஆபரணங்களை அணிவது வழமையே. இங்குள்ளவரும் அந்த வகையிலேயே தனது அழகை கொஞ்சம் அதிகமாகவே வெளிக்காட்டிவிட்டார். எப்படியென்றால் தனது முகத்தில் 175 வளையங்களைக் குத்தி சாதனை ஒன்றையும் நிலைநாட்டிவிட்டார். இவர் மேலும் தனது உடல் முழுவதும் 1,500 வளையங்களைக் குத்துவதையே நோக்காகக் கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அமெரிக்க நாட்டு செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த இப் பெண்மணி காது, நெற்றி, புருவங்கள், கன்னங்கள், மூக்கு, நாக்கு, நாடி, உதடு போன்ற முகத்தின் பல பாகங்களிலும் வளையங்களைக் குத்தியுள்ளார். நம் நாட்டுப் பெண்களும் இம் முறையைத் தொடருவார்களா?.....



## ஒத்தடம்

அழகு நிலையங்களுக்குச் செல்லும் ஆண்களும் பெண்களும் தமது அழகினை இன்னும் மெருகூட்ட சுடு நீர் ஒத்தடங்களைப் பாவிப்பது வழமை. அந்த வகையில் இதுவும் ஒரு ஒத்தடம் கொடுக்கும் சாதனையே. பிரித்தானியாவில் உள்ள லோரா மிச்சேல் எனும் யுவதி, ஒரு மணித்தியாலத்தில் 22 சோடி கால்களுக்கு (16 ஆண்கள் 6 பெண்கள்) சுடு நீர் ஒத்தடம் கொடுத்து சாதனை படைத்துள்ளார். கால்களைப் பிடித்து சாதித்துக் கொள்வது என்பது இது தானா...



## பெறுமதி

உலகப் புகழ் பெற்ற நபர்களின் பாவனைப் பொருட்கள் கூடிய விலையில் ஏலம் விடப்படுவது சகஜமே. ஜெரி கசீஸ் எனும் மேலைநாட்டு கிட்டார் வாத்தியக் கலைஞர் பயன்படுத்திய டைகர் கிட்டார் 2002ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்டது. இது 957,500 அமெரிக்க டொலர் (657,850 யூரோ) பெறுமதிக்கு ஏலம் விடப்பட்டது என்பது சாதனையாம். கசீஸ் 1995ஆம் ஆண்டு இறந்த பின்பு அவரின் விருப்பத்திற்குரிய டைகர் கிட்டார் ஏலம் விடப்பட்டது குறிப்பிடத் தக்கது.


## 2வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

## செல்வன் ஷபீன் கேதீஸ்வரன்



திரு.திருமதி.கேதீஸ்வரன்
கஜமுகி தம்பதிகளின்
செல்வப்புதல்வன் ஷபீன்
தனது 2வது பிறந்தநாளை
25-05-2005 அன்று
சுவிஸ்ற்சலாந்தில் வெகு விமர்சையாக
கொண்டாடுகிறார். இவரை
அன்பு அப்பா கேதீஸ்வரன்
அம்மா கஜமுகி தம்பி ஷாகீசன்
குடும்பத்தினரும், மற்றும் பேர்லின்
ஆசை இரத்தினம் அப்பம்மா,
கொழும்பு ஆசை சகுந்தலாதேவி அம்மம்மா,
பேர்லினில் வசிக்கும் நந்தகுமார்மாமா,
கஸ்தூரி மாமி,
பரமேஸ்வரன் பெரியப்பா,
பவானி பெரியம்மா,
பரிசில் வசிக்கும்
ஞானேஸ்வரன் ஆசையப்பா,

ஆனந்தி ஆசையம்மா, சுவிசில் வசிக்கும் செல்வக்குமார் மாமா, சித்திர லதா மாமி, குறிஞ்சிக் குமரன் மாமா, சோதி மாமி, லண்டனில் வசிக்கும் இதயகுமார் சித்தப்பா, கஜவதனி சித்தி, கொழும்பு கஜமதி சித்தி, மற்றும் மச்சான் மார்கள்:- சுதாகரன், பிரதீபன், ஷாதனன், திவாகரன், மச்சாள் சாரனா அண்ணன்மார்களான பாலதீபன், சாரங்கன், காண்டீபன், இதுஷன், ரெனிக்ஷன், அக்காமார்களான சங்கவி, கதிர்கிளி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்

தகவல் அப்பா ஜெகதீஸ் (சுவிஸ்)